

கல்கி
KALKI
18.12.1966
35

புதுமை! வரி யணிந்த பற்பசை!



ஸிக்னல்


கிருமிகளைத் தாக்கும் செவ் வரிகள் தரித்தது!

துலக்கிய வாய் முழுதும் தூய்மை நிலவும்!

❶ உங்கள் பற்களைத் துலக்கும் ❷ துலக்கிய வாய் மணக்கும்.

❁ அந்தச் சிவப்பு வரிகளிலே இருப்பது ஹெக்ஸாக்ளோரபீன்.


பற்களின் துப்புரவுக்கு ஒரு புதிய உறவு: கிருமிகளைத் தாக்கும் செவ் வரிகள் கூடிய ஸிக்னல்: வாய் நிரம்பும் தூய்மைக்கென்றே வாய்த்த ஒரு பற்பசை. பற்களைத் துலக்கும்போதே, உங்கள் மூச்சையும் மணமுடன் தூய்மைப்படுத்துகிறது அவ் வரிகளிலுள்ள ஹெக்ஸாக்ளோரபீன். காரணமா? நாற்றமுண்டாக்கும் கிருமிகளை உடனடியாக ஒழிக்கவல்ல பாதுகாப்புப் பொருளே ஹெக்ஸாக்ளோரபீன். எனவே, ஸிக்னல் தேய்த்த வாய் முழுதும் தூய்மையின் ஆட்சி. கோலச் செவ்வரிகள், கொப்பளிக்கும் நுரைவனம், குளுகுளு பெப்பர்மின்டுப்போன்ற சுவை... ஆஹாஹா! குடும்பத்திலுள்ள எவரைத்தான் கொள்ளை கொள்ளாது? வாய் முழுமையும் தூய்மையோ தூய்மை, வாயார உணரலாம். இன்றே பெறுங்கள் ஸிக்னல்.





...உங்கள் பற்களைத் துலக்கும்,
துலக்கிய வாய் மணக்கும்.

லின்டாஸ்-SG. 3A-140 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமானதொரு தயாரிப்பு







TVS

டி.வி.எஸ். பஸ் பாடிகளின் புதிய கவர்ச்சியான முன் தோற்றம்

டி.வி.எஸ். தேவைக்கு உகந்த பஸ் பாடிகளை எந்தவித சேஸிஸ் மீதும்—அசோக் லேலண்டு கோமெட், பெட்போர்டு, டாட்ஜ், பார்கே டாடா மெர்சிடீஸ் பென்ஸ், வில்லிஸ் ஜீப், ஸ்டாண்டர்டு 20—தயாரிக்கிறார்கள். அவை மிகவும் உறுதியானவை—ஆனால் லேசானவை; எடை குறைவுள்ளவை. அதனால் எண்ணெய் செலவும், டயர் தேய்வும் குறைவு; சிக்கனமானது; கரடு முரடான சாலைகளைச் சமாளிக்கும். பிரயாணிகளுக்கு மிக்க வசதி.

ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று பஸ் பாடிகள் கட்டுகிறோம். தேவைக்கு உகந்த கம்போசிட் முழு ஸ்டீல் பாடி, சிறிய பஸ், உல்லாச பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப் வான், அம்புலன்ஸ், மூடிய அல்லது திறந்த லாரி, ஸ்டீல் டிரைவர் காபின், டிப்பர் பாடி முதலியன தயாரிக்கிறோம்.

TVS

மற்ற விபரங்களுக்கு:

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டி.வி.எஸ். ஸ்தாபனம்)


ஆயுட்கால
செவியின்பத்தைப்
பெற்று
மகிழுங்கள் !
மாடல் யு-819
5 வால்வுகள், 3 பாண்டுகள்
ப்ளாஸ்டிக் காபினெட், ஏஸி/டிஸி
ரூ. 323-00
மாடல் ஏ-1511
6 வால்வுகள், 3 பாண்டுகள்,
மரக் காபினெட், ஏஸி
ரூ. 415.00
மாடல் ஏ-786 (ஹை-ஃபி செட்)
6 வால்வுகள், 5 பாண்டுகள், 2 ஒலிபெருக்கிகள்,
மரக் காபினெட், ஃபெர்ரைட் ஏரியல், ஏஸி
ரூ. 668.00
நேஷனல்
எக்கோ
இந்தியாவின் ஒரே
மான்ஸூனைஸ்டு
ரேடியோ !
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்,
பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • டெல்லி • பாட்னா • பெங்களூர் • ஸிகந்திராபாத்

கல்கி பொருளடக்கம்

நினைவுத் திரையில்...

சென்னை நகரைச் சென்ற டிசம்பர் மாதத்தில் இரண்டு விதப் பிரளயங்கள் மூழ்க அடித்திருக்கின்றன. கடும் மழையினால் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடாயிருந்தது ஒரு புறம்; சங்கீத வெள்ளம் கரை புரண்டோடியது மற்றொரு புறம். ராஜிய நிலைமையைப் பற்றிய கவலைகள் எப்படியாயினும் சரி, உணவுப் பஞ்சம் துணிப் பஞ்சம் எவ்வாறாயினும் சரி, மழையாயினும் சரி, வெய்யிலாயினும் சரி, எது எப்படி இருந்தாலும் சென்னையில் வருஷக் கடைசியில் சங்கீத உத்சவங்களுக்கு மாத்திரம் பஞ்சமே கிடையாது.


கல்கி, ஜனவரி 12, 1947

பராபவ, மார்கழி 3 — டிசம்பர் 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

இலங்கையில் 35 சதம்: தபால் செலவு தனி


வடபம்பாய்
இரண்டு லட்சம் கையெழுத்துக்கள்


மிஸ் இந்தியா
தடுப்புக்காவல் சட்டம்
திட்டங்கள்
காங்கிரஸ்
அமெரிக்க உதவி
பாதுகாப்புச் சட்டம்
செல்வர்களிட மிருந்து பணம்
உலக பாங்கியின் உதவி
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ★ இதழ் 20



சர்வதேச சமரசத்துக்கு வழி

இன்று ஆக்கிரமிப்பு வெறி பிடித்தலையும் சீனம் முன்பு சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட போது, பல்லாயிரம் ஆண்டுகள் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக இருந்தது. காரணம், இரு தேச மக்களிடையேயும் தடையில்லாமல் வர்த்தகம் நடைபெற்றது; அதே போல் சிந்தனையும் தடையின்றிப் பரிவர்த்தனையாயிற்று. இந்துமதச் சடங்குகளில் சீனத்தின் பட்டும் கர்ப்பூரமும் இடம் கொண்டன. சீனத்துக்கு நம் நாட்டிலிருந்து பிட்சுக்கள் சென்று தருமப் பிரசாரம் செய்தனர்.

முன்பும் சீனு மகாசாம்ராஜ்யமாகத்தான் இருந்தது. தான் ஒரு மகா சாம்ராஜ்யமாக இருக்க வேண்டும் என்று இன்றும் சீனு ஆசைப்படுகிறது. ஆனால் சீனு முடியாட்சியின் கீழ் சாம்ராஜ்யமாக இருந்தபோது அன்பினால் அது பல நாடுகளைத் தழுவியது. பலம் வாய்ந்த மத்திய அரசு பீடம் இருந்தபோதிலும் அதற்கு அடையாளமாகக் கப்பம் செலுத்திவிட்டு, நாடுகள் சுதந்திரமாக இருக்கச் சீன முடியரசு அநுமதித்தது. இன்றைய கம்யூனிஸ சீனமோ, யதேச்சாதிகாரமாக எல்லா நாடுகளையும் தன் ஆளுகையில் கொண்டு வந்து அவற்றின் பௌதிக, ஆன்மிக வாழ்வு முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள விரும்புகிறது. கலாசாரம் நிறைந்த புராதன தேசங்களை லோகாதய நாடுகளாக்கி ஓர் ஆட்சியின்கீழ் கொண்டு வர ஆசைப்படுகிறது.

எனினும், இந்தியாவுடன் போரிட்டு வென்றுவிட முடியும் என்று நினைக்குமளவுக்குச் சீனம் அப்பாவியல்ல. எல்லையில் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்து இந்தியாவைப் பலவீனப்படுத்தவே முயல்கிறது சீனம். இது காரணமாக, முன்பு சமாதானம் செழித்த எல்லையில் இன்று யுத்தக் குமுறல் இருந்து கொண்டேயிருக்கிறது.

இதனிடையில் சீனத்தின் கம்யூனிஸ வாழ்முறையை இந்தியாவில் பரப்பவும் முயற்சி நடந்து வருகிறது. இதற்காகவே இந்தியாவில் ஒரு கட்சியும் முயன்று வருகிறது. இந்தியாவின் வாழ்முறை மாறினால் நமது தேசத்தின் ஆன்மாவே பறி போனதாகும். எல்லையில் ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் பாதுகாவல் செய்வதைவிட, இந்தியாவுக்குள்ளேயே இருந்து கொண்டு நம் வாழ்முறையை மாற்ற முயல்பவர்களிடம் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இச்சமயத்தில் ஒரு சிந்தனை எழுகிறது. முன்பு நேச நாடாக இருந்த சீனம் இப்போது பகை பாராட்டுவது ஏன்? இந்தியா — சீனு இரண்டு நாடுகளை மட்டும் நினைக்காமல் அகில உலகச் சூழலையே நினைத்துப் பார்ப்போம்.

உலக நாடுகளிடையே நல்லெண்ணம் நிலவுவதற்காக எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இன்னமும் சூழ்நிலையில் நல்ல மாறுதல் எதுவும் ஏற்படவில்லையே, இது ஏன்? தலைவர் ராஜாஜி இதுகுறித்துச் சிந்தித்துச் சர்வதேச சமரசத்துக்குத் தலையாய ஓர் உபாயத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

உலக நாடுகளிடை சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியமான வழி, தேசங்களிடையே உள்ள வர்த்தகத் தடைகளை நீக்குவதும், சுதந்திரமாகச் சிந்தனைகளைப் பரவச் செய்வதும்தான் என்கிறார் ராஜாஜி. தற்போது பலவிதமான ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கப்படுகின்றன. இவை காரணமாகவே ஒவ்வொரு தேசத்தினரின் எண்ணமும் தங்கள் நாட்டோடு கட்டுப்பட்டு விடுகிறது. அன்பினால் எல்லா நாடுகளையும் தழுவி நிற்கும் உணர்ச்சி குன்றி விடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சில நாடுகள் ராணுவ பலத்தால் பிற நாடுகளில் ஆட்சியை





அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய இடங்களுக்குச் சங்கீத திக்விஜயம் செய்துவிட்டுத் திரும்பும் வழியில், ஸ்ரீமதி எம். எஸ்ஸும் ஸ்ரீ சதாசிவமும் இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல வாட்டிகேனில் போப்பாண்டவரைத் தரிசித்து ஆசிபெறும் பாக்கியத்தையும் பெற்றனர். இந்தியாவில் விமானத்தை விட்டு இறங்கியதும் ராஷ்டிரபதி அவர்களிடமிருந்து நல்வரவு கூறியும் பாராட்டியும் செய்தி கிடைத்தது.

இசைக் குழுவினரை பம்பாயில் பலதரப்பட்ட பல்வேறு சபைகள் பாராட்டிக் கௌரவித்தன.

படங்கள் : பம்பாயில் 'இந்திய பிரஸ் கில்டு'ன் தலைவர் திரு ஆர். வி. மூர்த்தி அவர்கள் ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்குப் பூச்செண்டு வழங்கினார்.

சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவர்களுக்கு அமெரிக்கக் கான்ஸல் ஜெனரல் ஆல்பர்ட் பிராங்கிளின் தம்பதியினர் குதூகல வரவேற்பளித்தனர். சென்னை நகரப் பிரமுகர்களும், தலைவர்களும், சங்கீத வித்வான்களும் வெற்றிகரமாகத் திரும்பிய இசைக் குழுவினருக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றார்கள்.


விஸ்தரிக்கவும் ஆசை கொள்கின்றன. பழைய சீன சாம்ராஜ்யத்துக்கும், இந்தியாவுக்கு மிடையே தடையற்ற உறவு இருந்தாற்போல் இன்றும் நிலவ வேண்டும் என்று எண்ணுவது கனவாகத் தோன்றலாம்; ஆனால் இடைவிடாமல் கண்டுகொண்டேயிருக்க வேண்டிய கனவு இது என்கிறார் ராஜாஜி.

முதல்படியாக, எல்லாத் தேசங்களும் மருந்துகளுக்கும், குழந்தை உணவுகளுக்கும், இவை போன்ற மற்றப் பண்டங்களுக்கும் ஏற்றுமதி — இறக்குமதிச் சுங்க வரிகளை ரத்து செய்து விடலாம் என்பது அவரது யோசனை. இதிலிருந்து மெல்ல மெல்ல மற்றப் பண்டங்களையும் சுதந்திர வர்த்தகத் திட்டத்தில் கொண்டு வரலாம். முடிவில் மனித குலம் முழுதும் ஒரே தொழில் வர்க்கமாக உருப்பெறும். வள — வசதிகளைப் பொறுத்து உலகின் பல நாடுகளிலும் சௌகரியமான இடங்களில் பற்பல தொழில்கள் நடைபெற்றாலும் உலகம் முழுவதற்காகவும் இவை நடைபெறும். அனைவருக்கும் தரமான பண்டங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே மக்கள் போட்டி போட்டுக் கொண்டு உற்பத்தி செய்வர். இப்போது சர்க்கார் வருமானத்துக்காகவே எழுப்பப்படும் வர்த்தகத் தடைச் சுவரால் செயற்கைத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. உலக முழுவதிலும் சுதந்திரப் போக்குவரத்து உண்டாகுமானால் செயற்கைத் தட்டுப்பாடுகள் ஒருகாலும் ஏற்படா. இதனால் தேசங்களின் வரிமுறைகளும், பட்ஜெட்டுகளும் எவ்வளவு அற்புதமாக மாறும் என்பதை இப்போது முற்றிலும் காண முடியாது. ஆயினும் இது உலகெங்கும் மனித வாழ்வில் அதிக இன்பம் ஊட்டும் என்பது நிச்சயம்.

உலகம் ஒன்றுசேர்ந்தபின் நம் பார்வையே சரியாகி விடும். நாசகரமான ஆயுதங்களைத் தயாரிப்பது எவ்வளவு அபத்தம் எனப் புரிந்து கொள்வோம். ஆயுதப் போட்டி ஒழியும். நாடுகளின் செல்வத்தை உறிஞ்சி, மக்களை ஏழைமைப்படுத்தும் ராணுவ முயற்சிகள் குன்றும். இறைவன் அருளால் தீர்க்கதரிசனம் வாய்ந்த தலைவர்கள் ஆங்காங்கு தலைமைக்கு வந்து இந்தத் திட்டத்தை ஆலோசித்து அமுல்படுத்த உதவினால் உலகம் முழுவதும் ஒற்றுமையுடன் சமாதானமாக வாழும் ஒரே உழைப்புக் குடும்பமாகும். இதற்கு ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

வராது வந்த வெற்றி

பாரதத்துக்குக் கிடைத்தற்கரிய பெயரை ஈட்டித் தந்துவிட்டார் டென்னிஸ் கிருஷ்ணன். எல்லோருமே தோல்விதான் கிட்டப் போகிறது என்று எதிர்பார்த்திருக்கும்போது தோல்வியை அணு அணுவாக விரட்டி வெற்றி சம்பாதிப்பது என்பது அசுர சாதனை. இந்தச் சாதனையைக் கல்கத்தாவில் பிரேஸில் நாட்டு டென்னிஸ் மன்னர் கோச்சுக்கெதிராக டென்னிஸ் கிருஷ்ணன் சாதித்து, இந்தியாவுக்கு மாபெரும் புகழைத் தேடித் தந்திருக்கிறார். 'டாக்டர் கைவிட்ட கேஸ்' போல இருந்த இந்திய ஆட்டம் புனர் ஜன்மம் பெற்றது, இந்திய டென்னிஸ் மன்னர் கிருஷ்ணனின் கைத்திறத்தால்.



கிருஷ்ணன் தனியர் ஆட்டத்தில் மாண்டரினோவைச் சிரமப்பட்டு வெற்றி கொண்டு இந்தியாவுக்கு ஓர் எண்ணிக்கை பெற்றுத் தந்தார். ஆனால் முகர்ஜி பிரேஸில் ஆட்டக்காரர் கோச்சிடம் தோல்வியுற்றதால் வெற்றி சரி சமமாயிற்று. பிறகு இரட்டையர் ஆட்டத்தில் கிருஷ்ணனும் முகர்ஜியும் நன்றாக இணைந்து ஆடி 'தோல்வி அடையச் செய்ய முடியாத இரட்டையர்' என்று விளங்கிய கோச்சையும் மாண்டரினோவையும் வென்று ஜயக்கொடி நாட்டினர். இந்த வெற்றியின் சிறப்பு முகர்ஜி தனியர் ஆட்டத்தில் மாண்டரினோவிடம் தோல்வியுற்றதால் மங்கி விட்டது. பிரேஸில் – இந்தியாவின் வெற்றி சரி சமமாகி, இறுதியில் கிருஷ்ணனுக்கும் கோச்சுக்கும் நடக்கும் பந்தயமே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் ஆட்டமாக நிகழ்ந்தது.


கோச் இரண்டு ஆட்டம் வெற்றி பெற்றிருந்த போதிலும், கிருஷ்ணன் நிலைத்துப் பொறுமையாக ஆடி வெற்றியைத் தம் பக்கம் திருப்பிக் கொண்டது பொன்னெழுத்தில் எழுதப்பட வேண்டிய சரித்திரமாகும். இது அவரது டென்னிஸ் திறமைக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல. அவருடைய திடசித்தம், தளராத மனோபாவம், இறுதிவரை உறுதி குலையாத வீரம் ஆகியவை பெற்றுத் தந்த வெற்றி என்றே கூறலாம்.

கிருஷ்ணன் கைவலி காரணமாக விம்பிள்டனில் வெற்றி பெற முடியாமல் துரதிர்ஷ்டக் கட்டையாக விளங்கினார். ஆனால் இன்று டேவிஸ் கோப்பைப் பந்தயத்தில் ஆஸ்திரேலியக் கோஷ்டியை இறுதி ஆட்டத்தில் சந்திக்கும் வாய்ப்பை இந்தியா பெறும்படி செய்த கிருஷ்ணன் புகழேணியின் உச்சியை அடைந்து விட்டார்.

''கிருஷ்ணன் ஆபத்தான தருணங்களில் வெகு நன்றாக ஆடினார். நான் தளர்ச்சியுற்ற சமயம் அவர் பின்னாலிருந்து முன் வந்து ஆட்டத்தைத் தம் பக்கம் வெற்றிகரமாகத் திருப்பிக் கொண்டார். அவர் தலை சிறந்த ஆட்டக்காரர்'' என்று பிரேஸில் ஆட்டக்காரர் கோச்சே வியந்து பாராட்டினார். ஸ்ரீ கிருஷ்ணன் புகழினால் பாதிக்கப்படாதவர்; அடக்கம் மிகுந்தவர். சென்னையில் அவருக்குப் பிரமாத வரவேற்புக் காத்திருக்க, விமானத்திலிருந்து இறங்கியதும் அவர் தந்தையின் தாள் பணிந்து எழுந்ததைக் கண்டவர்கள் உள்ளம் நெகிழ்ந்தார்கள்.

ஜனாதிபதியிலிருந்து பலரும் அவரது வெற்றியைப் போற்றியுள்ளனர். டேவிஸ் கோப்பை இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய டென்னிஸ் கோஷ்டிக்கும் எதிராக வெகு நன்றாக ஆடி இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்தக் கிருஷ்ணன் - முகர்ஜி டென்னிஸ் குழுவினர் போதிய பலம் பெறுவார்களாக!

சங்கீத சீசன்



ரேஷன் கடைகளில் நல்ல அரிசி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மார்கழி மாதம் பிறந்தது என்றால் சென்னையில் நல்ல சங்கீதம் நிச்சயமாகக் கிடைக்கும். வாழ்க்கைப் பிரச்னைகள் அதிகமாகி விட்டதால், சங்கீதத்துக்குத் தனி மவுசு ஏற்பட்டிருக்கிறது என்று கருதலாம். சமாளிக்க முடியாத பிரச்னைகளைப் போட்டு மனத்தைக் குழப்பிக் கொண்டு சஞ்சலப்படுவதைவிடக் கொஞ்ச நேரம் எல்லாவற்றையும் மறந்து நல்ல பாட்டைக் கேட்டாவது ஆறுதல் பெறலாம் என்று பலர் நினைத்தால் வியப்பில்லை. இவ்வகையில்தான் இவ்வாண்டு இசைவிழா "சீசனை"த் தனிச் சிறப்புடையது என்று சொல்லத் தோன்றுகிறது.

சீசன் என்னவோ அயலான "சீசன்" தான். முன்வரிசை வித்துவான்களுடன் இரண்டாவது மூன்றாவது வரிசை வித்துவான்களும் பலர் பல சபைகளில் கச்சேரிகள் நிகழ்த்துகின்றனர். ஆகையால் ஒரே சமயத்தில் யார் கச்சேரியைக் கேட்பது என்று நிச்சயிக்க முடியாதவர்கள் ஒரு சபாவில் இல்லாவிட்டாலும், மற்றொரு அரங்கில் கேட்கலாம். பல இளம் வித்துவான்கள் இந்த சீசனில் அறிமுகம் ஆகக்கூடும்.

சீனியர் ஸ்தாபனங்கள் என்ற நிலைமையில் உள்ள சபைகளுக்குச் சங்கீத விழாவுக்குத் தலைமை தாங்கவும், விழாவை நாள்தோறும் நிகழ்த்திக் கொடுக்கவும் வித்துவானைத் தேர்ந்தெடுப்பது ஒரு முக்கியமான பிரச்னை. அதை அவர்களும் ஒவ்வோர் ஆண்டும் மிகவும் சாமர்த்தியமாக ரசிகர்களுடைய ஆமோதிப்பைப் பெறும் வகையில் செய்து கொண்டு வருவது வியப்புக்குரியது. இந்த ஆண்டு மியூஸிக் அகாதமி விழாவுக்குத் தலைமை தாங்க வித்துவான் பாலக்காடு மணி அய்யர் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். மிகவும் சந்தோஷகரமான செய்தி. வித்வத் சபை தேர்ந்தெடுப்பது பெரிய காரியம் இல்லை. இதை ஸ்ரீ மணி அய்யர் ஏற்றுக் கொண்டாரே, அதற்கு அவரைப் பாராட்ட வேண்டும். சங்கீதத் துறையில் அவருடைய கருத்துக்கள் எல்லாமே, அவருடைய மிருதங்க வித்வத் திறமையைப் போல் தனித் தன்மை உடையவை. ஒலி பரப்புக் கருவிக்கும் அவருக்கும் நெருங்கிய பொருத்தம் இருப்பதில்லை. மிருதங்கம் என்பது மிருதுவான அங்கமாகப் பாலக்காடு மணி அய்யர் அவர்கள் மூலம் ரகசியம் பேசும்; புதுப் புது நாதங்களை வெளிக்காட்டும். வாய்ப்பாட்டுக்குள்ள உயர்மதிப்பை மிருதங்கத்துக்குப் பெற்றுத் தந்திருக்கிறார் வித்துவான் மணி அய்யர். சங்கீத கலாநிதி என்ற விருது, மணி அய்யரிடம் சேருவதால் பெருமை கொள்கிறது.

தமிழிசையில் எவ்வளவு நுணுக்கங்கள், அருமை பெருமைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சி மூலமும், கச்சேரிகள் மூலமும் ஆண்டுதோறும் நிரூபித்துக் கொண்டு வரும் தமிழ் இசைச் சங்கத்தினர் இவ்வாண்டு ஒரு புது சம்பிரதாயத்தை உருவாக்கியுள்ளனர். இவ்வாண்டு விழாவுக்குத் தலைமை தாங்கவும், "இசைப் பேரறிஞர்" என்ற விருதைப் பெறவும், ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். சங்கீத விதுஷி ஸ்ரீமதி கே.பி.



நன்றி நவில்கிறார்கள்

அமோக வெற்றியுடன் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் தாயகம் திரும்பியுள்ள ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும், ஸ்ரீ சதாசிவமும், இசைக் குழுவினரும் தங்களுக்கு நேரிலும், தந்தி மூலமும் தபால் மூலமும் வாழ்த்துக் கூறும் அனைவருக்கும் தங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். கல்கி காரியாலயத்துக்கும் தினந்தோறும் ஏராளமான வாசகர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்தபடியுள்ளன. அவர்களுக்கும் கலைஞர்கள் தங்களது நன்றியறிதலை அளிக்கிறார்கள். அன்பர்களின் கரைகாணாத நல்லெண்ணமும், ஆண்டவன் திருவருளுமே இப்பயணம் இவ்வளவு சிறப்புற நிறைந்ததற்குக் காரணம் என அவர்கள் நெஞ்சார நினைந்து வணக்கம் தெரிவிக்கிறார்கள்.


சுந்தராம்பாளைத் தேர்ந்தெடுத்ததற்கு அவரைப் பாராட்ட வேண்டும். முதலில் தமிழ் நாடக மேடையில் தோன்றித் தனிப் புகழ் பெற்ற கே. பி. எஸ். பிற்காலத்தில் திரை உலகிலும், கச்சேரி மேடைகளிலும் அநாயாசமாகத் தமது மேன்மையை நிலைக்கச் செய்து கொண்டிருக்கிறார். அவருடைய குரல் வளமும், லயசுத்தமும், தமிழ்ப் பற்றும், இறையுணர்ச்சியும் அவருடைய கச்சேரிக்கு எப்போதுமே மெருகு ஏற்றுகின்றன. தமிழ் இசைச் சங்கத்துக்கு நிச்சயமாக 'சபாஷ்' சொல்லத்தான் வேண்டும்.

என்ன சேதி?


- ☐ கிருஷ்ணமேனன் டிக்கெட்
- ☐ ஆத்ம சோதனையா?
- ☐ ஜன காங்கிரஸ்

திரு வி. கே. கிருஷ்ணமேனன் எந்தத் தொகுதியிலிருந்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவது என்ற விவாதம் முக்கியமாகக் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த விஷயம். எனினும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு சில அம்சங்களும் இந்த விவாதத்திலிருந்து புலனாகின்றன. காங்கிரஸ் கட்சியில் உட்பூசல்கள் ஊடுருவல்கள் எவ்வளவு தூரம் புரையோடியிருக்கின்றன என்பது ஒன்று. பம்பாய்த் தொகுதிக்குப் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் பிரதேச காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது என்பதையே வருஷக்கணக்கில் மறந்துவிட்டு உதாசீனமாக இருந்ததுடன், மாற்றுக் கட்சிகளின் சார்பிலேயே பணியாற்றிக் கொண்டிருந்தார் என்றால் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு எவ்வளவுதூரம் பலவீனப்பட்டுப் போய்விட்டது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. இதில் இன்னொரு பரிதாபகரமான விஷயம் பிரதமர் இந்திரா காந்தி திரு கிருஷ்ணமேனன் பம்பாய்த் தொகுதியிலேயே போட்டி போட வேண்டும் என்று சிபாரிசு செய்ததுதான். தேர்தல் குழு தீர்மானித்து விட்டபிறகு, தமக்குச் செல்வாக்கு இருப்பதாக எண்ணிக் கொண்டு இப்படி ஒரு சிபாரிசு அவர் செய்திருக்க வேண்டியதில்லை.

திட்டக் கமிஷன் பற்றிச் சமீப நாட்களில் வெளியான கண்டனங்கள் பலனளிக்கத் தொடங்கிவிட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. திட்டக் கமிஷன் அங்கத்தினர்கள் இந்தக் கண்டனங்களும் குறை கூறுதல்களும் எவ்வளவுதூரம் உண்மை என்பதைப் பற்றித் தங்களுக்குள்ளேயே ஆராய்ந்திருக்கின்றனர். இதை ஆத்ம சோதனை எனலாமா? கண்டனங்கள் சரியானவையே என்றனர் சிலர்; கமிஷன் செயலாற்றும் விதத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றனர் சிலர்; கூடவே கூடாது என்றும் சிலர் சொன்னார்கள்! கைநிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டு, செய்யும் வேலையைக் கண்காணிக்கவும் யாரும் இல்லாமல், எவ்







டிசம்பர் 8ந் தேதியன்று ராஜாஜி அவர்களின் எண்பத்தொன்பதாவது பிறந்த நாள் விழா சென்னை சுதந்திரக் கட்சியின் ஆதரவில் கண்ணப்பர் திடலில் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு என். ஜி. ரங்கா அவர்களின் தலைமையில் அதிவிமரிசையாக நடைபெற்றது. இந்தப் பிறந்த தினப் பாராட்டு விழாவில் சர்வகட்சித் தலைவர்களான திரு ஸி. என். அண்ணாதுரை, திரு ம. பொ. சிவஞானம், ஜனாப் முகம்மது இஸ்மாயில் திரு சா. கணேசன் முதலியவர்கள் கலந்து கொண்டு ராஜாஜியின் அரிய சேவைகளை எடுத்துக் கூறினார்கள்.

விதப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாமல், தாங்கள் சொல்லும் ஆலோசனைகளின் விளைவுகளைப் பற்றித் துளியும் கவலையில்லாமல் தொடர்ந்து ஆலோசனை சொல்லக் கூடிய ஒரு பதவியை விடுவதென்றாலோ, அதன் மதிப்பைக் குறைத்துக் கொள்வதென்றாலோ யாருக்குத்தான் மனம் வரும்! திட்டக் கமிஷனின் அந்தஸ்தைத மாற்றிக் கொள்ள வேண்டும் என்றோ அதனுடைய பொறுப்புக்களை அதிகரிக்க வேண்டும் என்றோ சொல்லும்போது ''கூடாது, கூடாது'' என்று திட்டக் கமிஷன் அங்கத்தினர்கள் கூறினால் அவர்களை ஏன் சுயநலக்காரர்கள் எனக் கூடாது?

காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய பிரமுகர்கள் சிலர் ஒன்றாகக் கூடி ஜனகாங்கிரஸ் என்ற ஒரு புதுக் கட்சியை ஆரம்பித்திருக்கின்றனர். முன்னாள் அமைச்சர் திரு ஹுமாயூன் கபீர், ஹரிகிருஷ்ணமஹதாப் போன்றவர்கள் இக்கட்சிக்கு ஊக்கம் அளித்துள்ளனர். அடுத்த தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே அவகாசம் இருப்பதால், இக்கட்சியின் கொள்கைகளைப் பரிசீலிக்கவோ, கட்சியின் பலத்தைக் கணிக்கவோ முடியாது. ஜனகாங்கிரஸ் ஓர் அகில இந்திய ஸ்தாபனமாக வரும் தேர்தலில் கலந்து கொள்ளவும் அவகாசம் இல்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியிலிருந்து பலர் விலகி விட்டதால், அந்த அளவுக்கேனும் இக்கட்சியின் ஊழல்களை இவர்கள் அம்பலப்படுத்துவார்கள் என்றும் அதன் மூலம் காங்கிரஸ் அபேட்சகர்களின் பிரத்தியேக ஆயுதங்களின் கூர்மையை மழுங்கச் செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால் வாக்காளர்கள் சம்பந்தப்பட்டவரையில் ஒன்றுக்கொன்று கருத்துவேற்றுமைகள் புலப்படாது, கதம்பமாக ஒரே மாதிரி கோஷங்களைச் சொல்லிக் கொண்டு பல கட்சிகள் இருப்பதால் நன்மையில்லை. காங்கிரஸ் கட்சியை உண்மையிலேயே எதிர்க்க எண்ணம் இருந்தால் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும்படியான தெளிவான மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட சுதந்திரக் கட்சியுடனேயே இவர்கள் இணைந்து செயலாற்றலாம். இதனால் வாக்குச் சீட்டுகள் சிதறி வீண் போவது குறையும். கடந்த பதினைந்தாண்டு அநுபவத்திலிருந்து வோட்டுக்கள் சிதறாமல் நேர்ப் போட்டியில் பலப் பரீட்சை நடந்தால் காங்கிரஸ் கட்சியின் பலம் எவ்வளவு குறையும் என்பது நிரூபணமாகியிருக்கிறது. இதை அரசியல் அநுபவம் உள்ள எல்லாருமே ஒப்புக் கொள்கிறார்கள்.



எனக்குப் பிறந்ததின வாழ்த்து அனுப்பியவர்களுக்கு என்னுடைய தேக நிலை காரணமாகத் தனித் தனியே நன்றி கூற முடியவில்லை. இதை நண்பர்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள். அன்பர்களின் பிரார்த்தனையே வைத்தியர்களுக்கு உதவி புரிந்து என்னைக் குணப்படுத்தியது. உடம்பு தேறிவரும் இப்போது நான் நிதானமாகச் செல்ல வேண்டும் என்றும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

***

பிரபஞ்ச வஸ்துக்களைப் பற்றி நமது இந்திரியங்களைக் கொண்டும் நுண்ணிய கருவிகளைக் கொண்டும் ஆராய்ச்சி செய்து மாபெரும் முடிவுகளைக் காணலாம். பிரபஞ்சம் முழுவதும் ஏதோ ஓர் எரிகோளத்திலிருந்தோ — அல்லது வேறேதனுமொன்றிலிருந்தோதான் வந்தது என்று காணலாம். ஆனால் இந்த ஒன்று எங்கிருந்து வந்தது? இது என்றைக்கும் தீர்க்கப்படாத புதிராகத்தான் இருக்கும். எல்லாவற்றையும் ஸயன்ஸால் விளக்க முடியாது என்று இதிலிருந்து அறியலாம். ஸயன்ஸுக்குள் வராத அற்புத அநுபவங்களை நாம் மறுப்பதற்கில்லை.

'அதுவும் பூரணம்; இதுவும் பூரணம்; பூரணத்திலிருந்து பூரணம் உதித்தது: பூரணத்தை எடுத்தபின்னும் அது பூரணமாகவே இருக்கிறது' என்ற நன்கு தெரிந்த உபநிஷதமந்திரம் இதைத்தான் சொல்கிறது.

காணாத பூரணத்திலிருந்து காண்கிற அனைத்தும் உண்டாயிற்று; இது உண்டான பின்னும் காணாத பூரணம் முழுமையுடனேயே இருக்கிறது — இதுதான் புதிர். விளைவினால் காரண வஸ்து பாதிக்கப்படவில்லை.

அல்லது வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம் — காண்கிற அனைத்துமே காணாத பூரணம் எடுத்துக் கொண்ட உருவம் எனலாம். காண்பதிலேயே காணாதது உள்ளது என்றுணராமல் நாம் காரணத்தைத் தேடுகிறோம். மடியிலேயே குழந்தையை வைத்துக் கொண்டு தேடும் அன்னையைப் போல, விளைவிலேயே காரணத்தையும் வைத்துக் கொண்டு வேறெங்கோ ஆராய்ச்சி செய்கிறோம்.

உலகத்தில் முறிவில்லாமல் நடந்துவருகிற மாற்றங்கள், சிருஷ்டி இவற்றால் மனித அறிவு உண்டாகியிருக்கிறது. நம்முடைய அறிவு போலன்றி, பௌதிகமான மூளையுடனும் நரம்புகளுடனும் இணைக்கப்படாத அறிவுகள் பிரபஞ்சத்தில் இருக்க முடியாதா? நம்முடைய சூரிய மண்டலத்தைவிட மிகப் பெரிய சக்தித் தேக்கங்களை உடைய பிரபஞ்சத்தில் எத்தனையோ விதமான எல்லையற்ற சிருஷ்டிகளுக்கு இடம் உள்ளது. எனவே, சூரியனிலுள்ள புருஷன் பற்றியும், மற்ற ஒளி தரும் சக்தித் தேக்கங்களில் வாழும் தேவர்கள் பற்றியும் ரிஷிகள் கூறுவது வெறும் உவமை என்று ஏன் கொள்ள வேண்டும்? இப்படிக் கொள்வது ஸயன்ஸுக்கு விரோதமான முடிவாகும். இன்னமும் ஸயன்ஸுக்கு அப்பாற்பட்ட அற்புதங்களுக்கு உயிர் உள்ளது. எல்லாவற்றையும் நாம் ஸயன்ஸால் சாதித்துவிடவில்லை.

***

கல்கத்தாவிலிருந்து மதிப்புக்குரிய நண்பர் சுரேஷ் ஸி. பலூ, 'ஹிந்து மதம் என்பதற்கு இலக்கணம் என்ன?' என்று கேட்டிருக்கிறார்.

ஹிந்துமதம் என்பதும் மற்ற மதங்களைப் போல ஆண்டவன் வழிபாடேயாகும். ஹிந்து மதத்தின் விசேஷமான அம்சம் என்னவெனில், அது மற்ற மதங்களையும் மதிக்கிறது. எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் பலன் பெறலாம்; எந்த மொழியின் மூலமோ சடங்கின் மூலமோ வழிபட்டாலும் பலன் கிட்டும் என்கிறது ஹிந்து மதம்.

ஹிந்து மதத்தின் மையமான அம்சம் கடவுளுடைய இயல்பும் ஆன்மாவின் இயல்பும் என்னவென்று தத்துவவிசாரம் செய்வதல்ல. தத்துவ விசாரணை செய்தவர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் அவர்கள் அனைவரையும் ஹிந்துக்களாகவே கருதுவதிலிருந்து இது தெளிவுபடுகிறது. சங்கரர், ராமாநுஜர், மாத்வர் ஆகியோர் ஒருவருக்கொருவர் கருத்தில் மாறுபட்டவர்கள். எனினும் இன்றும் இவர்களில் எவருடைய மார்க்கத்தைப் பின்பற்றுபவரும் மற்றவர்கள் தம்மைவிட ஹிந்துமத நம்பிக்கையில் குறைந்தவர்கள் என்று எண்ணவில்லை. தத்துவ விசாரணையை ஒதுக்கிய புத்தரும் ஹிந்துவே.

***

ஹிந்து மதமும் இஸ்லாம் கூறும் ஜனநாயக வாழ்முறையும் இணைந்து வாழ முடியாது என்று அயூப்கான் அவர்கள் இங்கிலாந்தில் கூறியதாகச் செய்தி வெளியானதிலிருந்து அவசியமற்ற ஒரு சர்ச்சை நடந்து வருகிறது. அயூப்கானைவிட மிகப் பெரிய முஸ்லீம்கள் ஹிந்துக்களை ஒத்துவாழ முடியாத சகப் பிரஜைகளாக நினைக்கவில்லை.

ஹிந்துக்களிடையே முஸ்லிம் போல் சமத்துவம் இல்லை என்று நினைக்கப்படுகிறது. ஆனால் இப்போது ஹிந்துக்களிடையே ஜாதி முறை முறிந்து வருகிறது. இதனால் அவர்

களின் நெறி உயரவில்லை என்பது வேறு விஷயம்.

இன்னொரு விஷயம். பாகிஸ்தானையோ அதன் தலைவர்களையோ தாக்குவதால் ஹிந்து மதத்துக்கு ஒருவித உதவியும் செய்ததாகாது. இப்படிச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். ஹிந்து மதத்தினர் என்று சொல்லிக் கொள்பவர்கள் நல்ல வாழ்க்கை நடத்துகின்றனரா, அல்லது கடவுளை மறந்து வாழ்கிறார்களா என்பதைப் பொறுத்ததே ஹிந்து மதத்தின் வளர்ச்சியும் நலிவும்.

* * *

மென்மை வாய்ந்த ஊ தாண்ட் அவர்கள் இன்னொரு பதவிக் காலமும் ஐ. நா. சபைப் பிரதம காரியதரிசியாக நீடிக்க ஒப்புக் கொண்டது பற்றி அனைவருக்கும் மகிழ்ச்சி.

ஊ தாண்டிடம் மதிப்பு கொள்வதில் நான் யாருக்கும் பின்தங்கிவிடவில்லை. எனினும், ஊ தாண்ட் உலக நலனுக்கு விரோதமாக எதுவும் செய்யமாட்டார் என்ற எதிர்மறைத் திறத்துக்காகவே திருப்தி கொள்கிறோம். உத்வேகமும் ஈடுபாடுமுள்ள ஓர் அசாதாரணமான மனிதரைக் கண்டுபிடித்து அவர் மூலம் உலக விவகாரங்களை மாற்றினாலே பூரணமான திருப்தி ஏற்பட முடியும்.

வியட்நாம் குறித்துப் பிரதம காரியதரிசியின் பழைய முயற்சிகளையே மீண்டும் புதுப்பிப்பதில் ஒரு பயனும் ஏற்படாது என்று அமெரிக்க சர்க்கார் இலாகா கூறியிருக்கிறது. இது வருந்தத்தக்கது. ஆயினும் இதுவே உண்மையாகும்.

* * *

எந்த மொழியில் எழுதுபவராயினும் சரி, எழுத்தாளருக்கு முதல் கட்டளை 'தெளிவாக இருங்கள்' என்பதுதான். ஆஸ்டின் டாப்ஸன் இப்படிக் கூறுகிறார். சிந்தனை தெளிவாக இருந்தாலே எழுத்துத் தெளிவாக இருக்கும். சிந்தனையில் தெளிவில்லாவிடில், பிறர் படிப்பதற்காக உற்பத்தி செய்கிற முயற்சியிலும் அதே தெளிவின்மைதான் இருக்கும்.

புத்தாண்டில் ஒரு புதிய தலைவர்

வருகிற 1967ம் வருடத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் திரு அகிலன் அவர்கள் பணியாற்றி வருவார் என்று அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களால் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவரும் அவராலேயே பண்படுத்தப்பட்டவருமான திரு அகிலன் கல்கி நேயர்களுக்குப் புதியவரல்ல. அவரது பல நாவல்களையும் சிறுகதைகளையும் கல்கியில் படிக்கும் வாய்ப்புப் பெற்ற தமிழர்கள் கல்கியில் தொடராக வெளியான அவரது வேங்கையின் மைந்தன் என்ற நாவல் சாகித்திய அகாதமி பரிசு பெற்றதையும் அறிந்து பெருமிதமுற்றார்கள்.



திரு அகிலன்

எழுத்தாளர்கள் என்றால் காரசாரமான விவாதங்கள் இருக்கத்தான் செய்யும்; இருக்கவும் வேண்டும். ஆனால் ஒரு நல்ல காரியம் என்று வரும்போது எல்லோரும் ஒன்றுகூடி ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதும் தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை நிரூபணமாகியிருக்கிறது.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் அறுநூறு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்பதே அதிசயிக்கத்தக்க விஷயமாகப் பலருக்குத் தோன்றுகிறது. அப்படி அறுநூறு பேர்கள் ஒன்று சேர்ந்திருப்பதே அதிசயமென்றால் அவர்களின் தலைவராக ஒருவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவது அதனினும் அதிசயம்தானே? ஆனால் அகிலன் அவர்கள் விஷயத்தில் அதில் அதிசயம் ஒன்றுமில்லைதான். எல்லோரையும் அரவணைத்துச் சென்றுவிடக் கூடிய அவரது சுபாவமும் அடக்கமான எளிய இனிய உள்ளமும் அனைவரையும் கவர்ந்துவிடக் கூடியவை.

தற்காலத் தமிழ் இலக்கியம் வளர்ச்சியுறவேயில்லை என்ற தவறான எண்ணம் பரவுவதை மாற்றி ஸ்ரீ அகிலன் அவர்கள் உண்மை நிலையைத் தெளிவாகப் பிறமொழியினருக்கிடையிலும் பரப்பும் பணியை மேற்கொள்ள விரும்புகிறார் என்று அறிகிறோம்.

ஆக்க ரீதியில் மேற்கொள்ளப்படும் வரவேற்கத் தக்க நல்ல முயற்சி இது. ஸ்ரீ அகிலன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

பலன் செறிந்த வாழ்வு

மைசூர் மகாராஜா ஜயசாமராஜ ஒடெயரு

ராஜாஜியிடம் எனக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் தெரிவித்துப் பாராட்டுவது எனக்கு மகத்தான மகிழ்ச்சியூட்டுகிறது. முப்பதாண்டுகளுக்கு முன்பு எனக்கு அவரிடம் பரிசயம் தொடங்கியது. அதிலிருந்து ஒவ்வோர் ஆண்டு செல்லும் போதும் எனக்கு அவரிடமுள்ள மரியாதை உணர்ச்சி வளர்ந்து வந்திருக்கிறது. அவர் நீண்ட காலம் நம்மிடையிருந்து ஆசி வழங்கி, தமது நிறைந்த ஞானம், அநுபவம் இவற்றின் பயனை நாட்டுக்கும் உலகுக்கும் நல்க வேண்டுமென இதயபூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

ராஜாஜியைச் சந்திக்கும் எவராலுமே அவரது மகத்தான குண நலன்களால் கவரப்படாமலிருக்க முடியாது. அவரது ஆன்மாவின் வசீகரணத்துக்கு யாரும் ஆளாகி விடுவர். தனிப்பட்ட முறையில் அவர் மகனீயராக இருப்பதுடன், அவர் எந்த நோக்கங்களுக்காக உழைத்து வந்திருக்கிறாரோ, எந்தச் சாதனைகளைச் சாதித்திருக்கிறாரோ அவற்றாலும் நமது பெருமதிப்புக்குரியவராகிறார். அவர் எத்தகைய மகா புருஷர்களுடன் சகாவாகத் தொண்டு செய்திருக்கிறார் என்பதும் அவரது பெருமையைக் காட்டும்.

பல நூற்றாண்டு இருளுக்கும், அடிமைத்தனத்துக்கும் பிறகு இந்திய அரங்கில் மகாத்மா காந்தி ஒளி கூட்டி வைத்தார். சோர்வு போய்ச் சக்தி உண்டாயிற்று; தளர்வு போய் நம்பிக்கை உண்டாயிற்று; தன்னம்பிக்கையும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் உண்டாயின. 1915லிருந்து 1950க்கு இடைப்பட்ட காலம் இந்திய சரித்திரத்தில் ஒரு மறக்கவொண்ணாத காலகட்டமாகும். பெருந் தலைவர்கள் தோன்றினர். பெரும் இயக்கங்கள் தோன்றின. பொதுமக்கள் விழிப்படைந்தனர். அவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். அவர்களுக்கு தமது புராதனப் பண்பாடு இன்னதென்று உணர்த்தப்பட்டது. எதிர்கால அரசியல்–பொருளாதார வாழ்வில் அவர்களுக்குரிய இடமும் நிச்சயிக்கப்பட்டது. இந்தியா தனது உணர்விலேயே ஒருமைப்பட்ட ஒரு நாடாயிற்று; வெளி உலகமும் இந்தியாவை அவ்வாறே காணத் தொடங்கியது. தேசத்தை அபிவிருத்தி செய்கிற கிரமம் விரைவுபடுத்தப்பட்டது. சுதந்திரம் என்கிற கனவு நனவாக்கப்பட்டது. இதற்கு இந்தியரின் முயற்சியும், பிரிட்டிஷாரின் பிரத்தியட்ச உணர்வும் காரணம்.

தேசத் தலைவர், தேசத்தைச் சமைப்பவர் என்கிற முறையில் மகாத்மா காந்தி ஈடு இணையற்றவர். பொதுமக்களின் ஈடுபாட்டைக் கவரும் ஆற்றல் அவரிடம் இருந்தது. அதோடு மட்டுமின்றி, பரம உத்தமமான தலைவர்களை, சிந்தனைத் திறனும் செயல் திறனும் மிக்கவர்களை, விவேகமும் கம்பீரமும் மிக்கவர்களைத் தமது சகாக்களாகப் பெறும் ஆற்றலும் மகாத்மாவுக்கு இருந்தது. நவஇந்தியாவுடைய பெருமையின் ஒரு முக்கியமான காரணம், அது ஒரு நெருக்கடி காலத்தில், பண்டித நேரு, சர்தார் படேல், ராஜாஜி போன்றவர்களைச் சிருஷ்டித்ததே.

நமது தேசிய முயற்சி பழமாகக் கனிகிற சமயத்தில் ராஜாஜி ஒரு முதிர்ந்த அரசியல் ஞானியாக, மகத்தான தியாகியாக, பொறுப்புள்ள கடினமான பதவிகள் வகித்தவராக, சட்டம் — இலக்கியம் — நிர்வாகம் இவற்றில் தமக்கென ஒரு பெயர் பெற்றவராக, அறிவுத் திறனோடும் தூய ஒழுக்கத்துடனும் பரந்த அநுபவத்தின் பலனும் இணைந்தவராக விளங்கினார். இந்திய சுதந்திரத்தில் நிறைவு பெற்ற பல இயக்கங்களிலும் அவர் பெரிய, முக்கியமான பங்கு வகித்தவர். அவர் வகித்த பல பதவிகளும் அவர் நாட்டுக்கு மிக உன்னதமான சேவை புரிய வாய்ப்புக்களை அளித்தன. இப்பணிகளிலெல்லாம் அசாதாரணமான தீர்க்கதரிசனத்தையும், அரசியல் ஞானத்தையும், மனிதாபிமானத்தையும் செயலூக்கத்தையும் காட்டினார். சேலத்தின் நகரசபைத் தலைவராகவும், சென்னையின் முதல்மந்திரியாகவும், மத்திய மந்திரி சபை அங்கத்தினராகவும், மேற்கு வங்க கவர்னராகவும், இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும் பணி புரிந்த அவர் ஒவ்வொரு சமயத்திலும் நிரந்தரமான பொது நலனிலேயே கருத்தாக ஒரே போன்ற உற்சாகத்துடனும், நடு நிலைமையுடனும், செயல் திறனுடனும், தூய்மையுடனும் சேவை செய்தார்.

அரசியலிலும் நிர்வாகத்திலும் அவரது மகத்தான சாதனைகள் ஒருபுறமிருக்க, தத்துவ விசாரணையிலும் இலக்கியத்திலும் அவர் நிரந்தரப் புகழுக்குரிய கௌரவ ஸ்தானம் பெற்றுள்ளார். அவரது அறிவின் வீச்சும், தெளிவும், பெரும் அநுபவமும், மனித இயல்பு பற்றிய அவரது தேர்ந்த ஞானமும், மக்களுக்கு ஆசாரியனாக உபதேசிப்பதில் அவருக்குள்ள இணையற்ற ஆற்றலும் — இவை அனைத்துமே அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள நூல்களில் வெளியாகின்றன. அவரது சிறுகதைகளும், உபநிஷத விளக்கங்களும், மகாகாவியங்களான ராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றின் சுருக்கங்களும் சிறந்த முறையில் கதை சொல்வதோடு மட்டுமின்றி — பாத்திரங்களைத் தீட்டுவதோடு மட்டுமின்றி — தரும உபதேசம், சமூகச் சீர்திருத்தம் ஆகிய உயர்ந்த நோக்கங்களையும் பூர்த்தி செய்கின்றன.

வேத — உபநிஷத முனிவர்களின் நாள் தொட்டு நம் தேசம் அதன் சரித்திர காலம் முழுவதிலும் மகான்களுக்குக் கடன்பட்டிருக்கிறது. இந்தச் சகாப்தத்திலும் ஞானிகளையும், ஆற்றல் மிக்க தலைவர்களையும் நாம் அதிர்ஷ்டவசமாகப் பெற்றிருக்கிறோம். இவர்களிலே மிகவும் கௌரவம் வாய்ந்தவர்களில் ராஜாஜி ஒருவர். ஒரு மகத்தான இந்தியர், மகா புருஷர் என்பதால் அவரை நேசிக்கிறோம், மதிக்கிறோம்.

அவருக்குப் போற்றி போற்றிக் கூறுவோம்.

நன்றி: **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''**





புதுடில்லியில் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் பிறந்த தினத்தன்று ராஷ்டிரபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

சிதம்பரம் வக்கீல்கள் சங்கம், ஜில்லா நீதி மன்றத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. இதில் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.







மவுண்ட் ரோடு தலைமைத் தபால் காரியாலயத்தில் நீதிபதி பி. எஸ். கைலாசம் அவர்கள் ஆரம்பித்து வைக்க, நீதிபதி கே. எஸ். வெங்கடராமன் தலைமையில் தபால், தந்தி வாரம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கோமதி சுவாமிநாதன் எழுதிய ''எங்கும் எவர்சில்வர்'' என்னும் ஹாஸ்ய நாடகம் தபால் இலாகா ஊழியர்களால் சிறப்பாக நடிக்கப்பட்டது. மவுண்ட் ரோடு போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ பி. எஸ். ராவ் நாடகத்தைப் பாராட்டிப்பேசுகிறார்.

வேத ஆராய்ச்சிகளில் சிறப்புப் பெற்ற பிரம்மஸ்ரீ தர்மகுரு ராமநாத தீக்ஷிதருக்கு ராஷ்டிரபதி, அகில இந்திய சாஹித்ய பரிஷத்தின் பொன் விழாவில் 'வித்யா வாசஸ்பதி' என்ற விருதினை அளித்தார்.



அத்தியாயம் 12

இந்திர நீலம்!


வேலவன் கோதைக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவில்லை! செல்வந்தி அடிகளிடமிருந்து வருவதால் தாமதமின்றி உடனே உள்ளே வரும்படி தன்னை அழைத்தான் மலர்வேணிய மன்னன்! அடிகளிடம் இத்தனை மதிப்பா அவனுக்கு? அப்படியானால் இந்தச் செல்வந்தி அடிகளிடம் ஏதாவது அரசியல் முதன்மை இருக்குமோ? அரசியல் சூழ்ச்சிகளிலே ஈடுபட்டுள்ளவர் சிலர் துறவிகளின் வேடத்தில் இருப்பதாகச் சேர நாட்டிலே ஒற்றர்கள் பேசிக் கொள்ளுவதுண்டு. அது வேலவனுக்குத் தெரியும். ஒரு வேளை அப்படிப்பட்ட ஒரு பெரிய அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள துறவியாக இருப்பாரோ இந்தச் செல்வந்தி அடிகள்! ஆனால் அவருடைய கண்களைப் பார்த்தபோது அவற்றில் மின்னிய தவக் கனல் எப்படியிருந்தது! அதை நினைத்துப் பார்த்தாலே இப்போதும் உடம்பிலே மின்னல் வந்து தாக்குகிறதே! எத்தனையோ பல ஆண்டுகள் தவம் செய்து பெற்ற ஒரு மாய ஆற்றலாக அல்லவா அது துலங்கியது! அப்படிப்பட்ட துறவி இந்த அரசியற் சூழ்ச்சிகளில் எல்லாம் எப்படிச் சிக்குவார்? மாட்டார். அப்படியானால் அவர் யார்?

ஒரு விநாடி இத்தனை சிந்தனைகள் வந்து குமைந்தன மனத்துக்குள்ளே! அடுத்த விநாடி மன்னரின் முன்னிலையிலே நின்றான் வேலவன் கோதை !

மலர்வேணிய மன்னருக்கு முன்னால் நின்ற போது சேர நாட்டுத் தானைத் தலைவனுக்குள்ள பெருமிதமும் வீரமும் துலங்க அரச வணக்கம் செலுத்தினான் வேலவன் !

நீலக் கற்கள் இழைத்து நீல மயிலின் வடிவத்தில் காட்சி தந்த ஒரு பெரிய மயில் தோகை யிருக்கையிலே— அமர்ந்திருந்தான் மலர்வேணிய மன்னன்! அவனுக்கு அருகிலே அழகான பொன் வேலைப்பாடுகள் அமைந்த ஒரு சாய்மானம். அந்தச் சாய்மானத்தில் வேலவனை அமரும்படி சொன்னான் மன்னவன். அந்தப் பெரிய மன்றத்திலே வேறு யாரும் இல்லை அப்போது. கூர்ந்து பார்த்தால் அரசனின் ''ஆய மன்றம்'' என்று அழைக்கப்படுகிற இரகசியச் சிந்தனைக்கூடம் அது என்று தோன்றிற்று வேலவனுக்கு !

''நேற்றுத்தான் செல்வந்தி அடிகளுக்கு ஒரு மடக்கோலை அனுப்பினேன், இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் இங்கு வந்து சேர வேண்டும் என்று கோரி! அது போய்ச் சேருமுன் இன்று அடிகளிடமிருந்து நீங்களே வந்துவிட்டீர்கள்!'' என்று பேசினான் மன்னவன்.



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு



''மடக்கோலையா? நேற்று அனுப்பி னீர்கள் ?''

''ஆமாம். அறநெறியிலும் வீரச் செயல்களிலும் பெரிய சாதனைகள் புரிந்து, விண்ணுலகம் அடைந்த முன் னோர்களுக்கு விழா நடத்துவது என் பது புன்னாட்டிலே வழி வழியாக நடந்து வருகிற சடங்கு. அந்தச் சடங்கு என் தந்தையார் காலத்தில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் நின்று போயிற்று. இப்போது அதைக் கட் டாயம் நடத்த வேண்டும் என்று ஓர் ஆசை எனக்கு! அந்த விழா நடந்தால் எங்கள் குலத்தில் ஏற்பட்டுள்ள எல் லாச் சிக்கல்களும் தீர்ந்து விடும் என்று நான் நம்புகிறேன். செல்வந்தி அடிகள் வந்தால் அவர்களைக் கொண்டே இந்த விழாவை நடத்தலாம் என்பது என் எண்ணம். அந்த விழா செல்வனே முடிந்து விட்டால் பிறகு என் தமக்கை யின் துயரமும், இந்தப் புன்னாட்டைச் சூழ்ந்துள்ள துயரமும், எல்லாம் அகன்று தமிழ் நாட்டு வானமே தெளிவடையும் என்பது என் கருத்து. முன்னோர்களுடைய புகழைப் புலவர் பாடக் கேட்பதும், அவர்களுடைய வீரக் கதைகளைக் கூத்தர்கள் நாடக மாக நடித்துக் காட்ட அவற்றைக் கண்டு மகிழ்வதும், விண்ணுலக விழா விலே முதன்மையான நிகழ்ச்சிகள். இந்த நிகழ்ச்சிகளைச் செல்வந்திஅடிகள் வந்து இருந்து நடத்த வேண்டும் என்பதுதான் என் விருப்பம் ! ஏனென் றால் எங்கள் புன்னாட்டு அரச மரபுக் கும் அடிகளுக்கும் உள்ள உறவு அப்படிப் பட்ட ஓர் ஆன்ம நேய உறவு!''

இவ்வாறு உவகை பொங்கப் பேசி னான் மலர்வேணியன். அவனோடு தொடர்ந்து பேசியதில் வேலவன் கோதைக்கு மிகவும் நேர்த்தியான ஒரு செய்தி செல்வந்தி அடிகளைப் பற்றித் தெரிய வந்தது.

''பெருந்துருத்தித் தீவு எத்தனை அழகான தீவு. அதிலும் அந்தப் பாறைக்கு அருகிலே தென்னஞ்சோலை யும், அதில் உள்ள அகலமான கிணறும், ஏற்றமும், கமலையும், குளிப்பதற்கான படிக்கட்டும், திட்டு களும், ஆகாகா!''

இவ்வாறு ஒரே வியப்போடு மலர் வேணியன் பேசத் தொடங்கியதும் வேலவன் கேட்டான்:

''அந்தத் தீவைப் பற்றித் தாங்கள் இத்தனை ஆர்வத்தோடு ஓவியமாகப் பேசுவதைப் பார்த்தால்......''

''ஏன் தயங்குகிறீர்கள்? நான் அங்கு போயிருக்கிறேனா என்று கேட்க வரு கிறீர்கள். போயிருக்கிறேன் என்பது மட்டுமில்லை. வாரக்கணக்காக, மாதக் கணக்காக அங்கே தங்கியிருக்கிறேன், அடிகளோடு !'' என்று சொன்னான் மலர்வேணியன்!

இந்த இடத்திலேதான் வேலவன் கோதைக்கு அந்த நேர்த்தியான செய்தி கிடைத்தது, அடிகளைப் பற்றி!

வயதான தாய் தந்தையர்களுக்கும், முனிவர்களுக்கும், பெரியோர்களுக்கும் தொண்டு செய்யும்படி தம்முடைய பிள்ளைகளை அமர்த்துவது என்பது, தமிழ்நாட்டு மன்னர்கள் கடைப்பிடித்து வந்த ஒரு அறநெறி. தொன்றுதொட் டுப் புன்னாட்டு அரச குடும்பத்திலும் இந்த வழக்கம் சிறப்போடு இருந்து வந்தது. ''தொல்கடன்'' என்று தமிழ்ப் புலவர்கள் பாராட்டிய இந்த அறமுறையைப் பழைய புனல்வேணிய மன்னர் மிகவும் மதித்துப் பாராட்டிய தால், தம்முடைய மகன் மலர்வேணிய னைச் செல்வந்தி அடிகளிடம் சில காலம் தொண்டனாக விட்டு வைத் திருந்தார், பெருந்துருத்தித் தீவிலே ! இதன் விளைவாக, மலர்வேணிய மன்னனிடம் சில கடவுட் கொள்கை களும் பழைய மரபோடு ஒட்டிய சடங்குகளும் ஆழமாகப் பதிந்துவிட் டன. எனவேதான் விண்ணுலகு சேர்ந்த முன்னோர்களுக்கு விழாக் கொண்டாடி னால் குடும்பத் தொல்லைகளும், அரச குலத்தைத் தாக்கியுள்ள துயரங்களும் நீங்கும் என்று மிக்க உறுதியோடு நம்பி னான் மலர்வேணியன்!

மன்னனிடம் பேசப் பேச வேலவ னுக்கு அவனுடைய தூய உள்ளமும் அதில் குடிகொண்டிருந்த பண்புகளும் மாசற்ற ஆர்வமும் நெஞ்சைக் கொள்ளை கொண்டன. அந்தப் பளிங்கு மன்ன னிடம் தன் உண்மைகளையெல்லாம் ஒன்றும் மறைக்காமல் அப்படி அப் படியே சொல்லிவிட வேண்டும் என்று பட்டது வேலவனுக்கு.

''நீலக்கல் வேந்தரே ! உங்களிடம் சில செய்திகளை எப்படிச் சொல்லு வது, எப்படிச் சொல்லாமல் இருப்பது என்று சற்று முன்பு வரை தயங்கி னேன். ஆனால் இப்போது அந்தத் தயக்கம் அறவே இல்லை! உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் அவற் றைச் சொல்லுவது ! யாரிடம் போய் அவற்றையெல்லாம் சொல்லப் போகி றேன் இனிமேல்! தங்களுடைய ஒப்புத லும், பரிவும் இருக்குமானால் அவற்றை யெல்லாம் விரிவாகவே தங்களிடம் பேச ஆசைப்படுகிறேன்!''

இவ்வாறு கூறினான்வேலவன்கோதை.



''நீங்கள் சொல்லப் போகிற செய்தி எதுவானாலும் சரி; செவ்வந்தி அடிகளிடமிருந்து வந்துள்ள அன்பர் நீங்கள். அந்த வரவிலேயே என் ஒப்புதலும் பரிவும் அடங்கியிருக்கின்றன. இன்றிரவு இலவந்திகையிலே நாம் மீண்டும் சந்திக்கலாம். தொடர்பாளரிடம் அதற்கு ஏற்பாடு செய்யும்படி கூறுகிறேன்'' என்றான் மலர்வேணியன்.

ஃ ஃ ஃ



இலவந்திகையிலே அன்றிரவு மலர்வேணியனும் வேலவனும் நீண்ட நேரம் உரையாடினார்கள். செவ்வந்தி அடிகள் தன்னோடு தன் மிதவையிலே ஏற்றியனுப்பிய வாழ்த்துக்கு எத்தகைய ஆற்றல் இருந்தது என்பதை அப்போது நேருக்கு நேர் கண்டான் வேலவன் கோதை! அதோடு, புன்னாட்டு மன்னனுடைய உள்ளத்தின் ஆழத்தில் எத்தகைய உணர்ச்சிகள் நீரோட்டமாகச் சுழித்து ஓடிக் கொண்டிருந்தன என்பதைத் தெளிவாகக் கண்டான் வேலவன்!

ஆம்; மலர்வேணிய மன்னனுடைய உள்ளத்தில் மண்டலமிட்டுக்கிடந்தபெருமூச்சு, நெட்டுயிர்ப்பு, என்ன என்பது வேலவனுக்கு நன்றாகப் புரிந்தது. புன்னாட்டு நீலக்கல் சுரங்கத்தை நன்னர்கள், கடம்பர்கள் முதலிய பகைவர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க வேண்டுவது முதன்மையான ஒரு பணிதான்! என்றாலும் அதையும் விட முதன்மையானது, அதையும் விடச் சீரியது ஒன்று மலர்வேணியனுக்கு முழுமுதற் கடமையாக உள்ளத்தில் நின்றது. அதுவே நீலவல்லியின் பாதுகாப்பு!

''வேலவரே! புன்னாட்டின் தலைநகரமாகிய இந்தக் கட்டூரை நோக்கிச் சேரர் சோழர் பாண்டியர் மூவரின் பார்வையுமே திரும்பியிருக்கிறது. இதற்குக் காரணம் நன்னர்களும் கடம்பர்களும் சேர்ந்து ஒன்றித்து வந்து, இந்த நீலக் கல் சுரங்கத்தைத் தங்களுக்கு உடைமையாக எடுத்துக் கொள்ளப் போகிறார்களோ என்று மூவேந்தர்களுமே அஞ்சுகிறார்கள்! இதனால் நீலக் கல் சுரங்கத்தை யார் முதலில் கைக்கொள்ளுவது என்று போட்டி போடுகிறார்கள்! இப்படி நான் சொல்வதற்காக என்னை நீங்கள் வேறு வகையாக நினைக்காதீர்கள்! அரசர்களின் மன இயல்பு அது; அதில் தவறில்லை என்று, செவ்வந்தி அடிகள் என்னிடம் அடிக்கடி சொல்லுவதுண்டு. அதை நான் நன்றாகப் புரிந்து கொள்கிறேன். ஆனால் என் உள்ளத்தில் மட்டும், மற்ற மூவேந்தர்களின் உள்ளத்திலும் இல்லாமல் என் உள்ளத்தில் மட்டும் வளர்ந்து வருகிற ஆசைக்குரிய நீலக் கல் சுரங்கம் வேறு ஒன்று உண்டு. அது நீலக் கல்லைவிட மதிப்பு மிகுந்த பாசக் கல் சுரங்கம்! என் தந்தையின் அன்பு அந்தக் கல்லைப் பட்டை பிடித்துச் சாணை ஏற்றியிருக்கிறது. நீலநதியின் நாடாகிய எகிப்தின் சுந்தரப் பண்புகளும், நீலக்கல் நாடாகிய புன்னாட்டின் அரச மாண்புகளும், அந்தப் பட்டை பிடித்த கல்லிலே அமர ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஆனால் —''


மலர்வேணியன் ஒரு விநாடி தயங்கினான். பிறகு சொன்னான்:

''தானைத் தலைவரே! நவரத்தினக் கற்கள் இருக்க வேண்டிய இடம் என்று ஒன்று உண்டல்லவா? என்னுடைய பாசக் கனவுகளுக்குரிய அந்த நீலக்கல், இந்தப் புன்னாட்டு அரண்மனைக்குரிய எங்கள் இந்திர நீலக்கல் இப்போது கைதவறி நழுவிப் போய் விட்டது! அந்த நீலக்கல்லைத் திருடர்கள் திருடிக் கொண்டு போய் விட்டார்கள்! கடற் கொள்ளைக்காரர்களின் கையிலே அகப்பட்டிருக்கிறது புன்னாட்டின் இந்திர மணி நீலம்! அந்த நீலத்தை, அந்த நீல மணிச் சுரங்கத்தைப் பாதுகாக்க வேண்டியது ஒன்றுதான் எனது முழுமுதற் கடமை! இந்தப் புன்னாட்டுச் சுரங்கத்தைப் பாதுகாப்பதற்கு மூவேந்தர்களும் இருக்கிறார்கள்! ஆனால் நீலவல்லி என்ற அந்த ஒப்பற்ற இந்திர மணியைக் காப்பதற்கு —''

''மன்னர் திலகமே! அந்த இந்திர மணியைக் காப்பதற்குத் தங்களுடைய இரண்டு கைகளோடு இணைந்து, துணைக் கரங்களாக, இணைக் கரங்களாக, இதோ இந்த இரண்டு கைகளும் இருக்கின்றன. திருடர்களைத் தாக்குவது அரசக் கரங்களுக்கு அழகில்லை. அந்தப் பணியைச் செய்ய வேண்டியவன் என் போன்ற ஒரு தானைத் தலைவன் தான்! அதற்கு ஒப்புதலும் ஒத்துழைப்பும் உதவியும் கோரியே நான் இங்கே வந்தேன்—''

''வேலவரே, மற்றத் திருடர்களைப் போல நினைக்கவில்லை நான் இந்தக் கடம்பர்களை. இந்தத் திருடர்களைத் தாக்குவதற்கு ஒரு மன்னனின் கைகள் மட்டுமில்லை, பல மன்னர்களின் ஒருமித்த கைகளும் வேண்டும் என்ற

அவசியம்கூட நேரலாம்! ஆனால் அது அரசியல் போர்! அது புன்னாட்டைப் பாது காப்பதற்காகச் செய்ய வேண்டிய மாபெரும் போர்! நான் சொல்லுகிற போர் அது இல்லை. உண்மையில் நான் சொல்லுவது ஒரு போரே இல்லை. திருடர்களைத் திருட்டுத்தனமாக வெல்ல வேண்டிய ஒரு சூழ்ச்சி அது. போர் என்பது பிறகு ஏற்பட வேண்டிய, பின்னொரு நாள் ஏற்பட வேண்டிய நிகழ்ச்சி. அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என் கவலையெல்லாம் நீலவல்லி புன்னாட்டுக்கு வந்து சேர வேண்டும் என்பதுதான்! கடம்பர்கள் அழிந்து ஒழிய வேண்டும் என்பது அரசியல் முயற்சி. நீலவல்லி புன்னாட்டுக்கு வந்து சேர வேண்டும் என்பது ஒரு தம்பியின் ஆசை. இந்த இரண்டையும் இணைக்காதீர்கள். இது தனி. அது தனி. இரண்டும் தனித் தனியாக நடைபெற வேண்டிய செயல்கள். என்னைக் கேட்டால் முதலில் நடைபெற வேண்டிய முதன்மையான நிகழ்ச்சி — நீலவல்லியின் மீட்சி. அவளை வெள்ளைத் தீவிலிருந்து மீட்போம் முதலில்! பிறகு அந்த வெள்ளைத் தீவு அழிந்தாலும், தரையோடு தரையாகப் போனாலும் அல்லது ஆழ் கடலிலே அழுந்தி விட்டாலும் எனக்குக் கவலை இல்லை!''



''கருதி, லயம் பிசகாமல் உங்க பெண்ணுக்கு டைப் அடிக்கச் சொல்லித் தரேன். என்னை 'டியூஷ'னுக்கு வைச்சுக்கோங்கோ சார்!''

''அப்படிச் சொல்லாதீர்கள் மன்னர் பெருமானே!'' என்று மறித்தான், வேலவன் கோதை. ''அப்படிச் சொல்லாதீர்கள். வெள்ளைத் தீவு அழிந்து போவதையோ, அல்லது கடலில் மூழ்கி ஒழிவதையோ நீலவல்லி விரும்பமாட்டாள். வித்தை முனிவர்கள் வாழ்ந்து அறம் புரிந்த அந்தத் தீவு அழிவதைச் செவ்வந்தி அடிகளுமே விரும்ப மாட்டார்!''

''செவ்வந்தி அடிகளா? அவருக்கு விருப்பம் என்று ஏது? அவர் விரும்புவது என்று ஒன்று இல்லை. உணர்வது என்றுதான் உண்டு அவருக்கு! அவருடைய பேருணர்விலே வெள்ளைத் தீவின் எதிர்காலம் என்ன என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்! ஆனாலும் நம்மோடு சேர்ந்து அவரும் வேடிக்கை பார்ப்பார். நன்றாகப் படித்துத் தெரிந்துள்ள ஒரு கதையைக் கூத்தர்கள் நாடகமாக நடத்திக் காட்டினால், கதையின் நிகழ்ச்சிகள் முடிவுகள் எல்லாம் தெரிந்த போதிலும், அதைச் சுவை குன்றாமல் நாம் அநுபவிக்கிறோம் அல்லவா, அப்படியே செவ்வந்தி அடிகளும் வாழ்க்கை நாடகங்களைக் கண்டு களிப்பார்! அது அவருக்கு இயல்பு! அங்கங்கே சிரிப்பார்! அழக்கூடச் செய்வார்! நாடகத்தில் நடிப்பவர்களோடு சேர்ந்து நாமும் மெய்ப்பாடு கொண்டு சிரிக்கிறோம், அழுகிறோம் அல்லவா? அது போல அடிகளும் செய்வார்! அதுவும் ஒரு நடிப்பு! ஆனால் ஞான நடிப்பு அது! அது இந்த உலகம் முழுவதையும் படைத்துக் காத்துத் துடைக்கிறானே அந்த நீண்ட சடைக் கடவுளின் நடிப்பைப் போன்ற ஒரு கூத்தாட்டு நடிப்பு! அதைப் பற்றி நாம் என்ன கூறுவது! என்ன கூறத் தெரியும் நமக்கு!''

மலர்வேணிய மன்னனின் விழிகளிலே கண்ணீர் மல்கியது. பேரன்பு, கடவுட் காதல் என்றெல்லாம் சொல்லுகிற மெய்யார்வக் கண்ணீர் அது! அதில் வயமாகி வேலவனும் சொல்லற்று இருந்தான் நெடுநேரம்! அவனுக்குமே உள்ளம் உருகியது!

ஃ ஃ ஃ

பத்து நாட்களில் செவ்வந்தி அடிகள் புன்னாட்டுக்கு வந்து சேர்ந்தார்! அவருடைய விழி நாட்டத்திலே நடைபெற்றது விண்ணவர் வழிபாட்டுத் திருவிழா!



புன்னாட்டு அரசர்களின் புகழையும், அவர்களின் வழி வந்த வீரர்களின் ஆற்றலையும், பண்டை நாளில் புன்னாட்டு நீலக் கல் சுரங்கத்துக்குக் கேடு வந்த போதெல்லாம் அந்த வீரர்கள் எப்படி அதைப் பாதுகாத்தார்கள் என்ற ஆண்மைமிக்க கதைகளையும் பாணர்கள் பாடினார்கள். கூத்தர்கள் ஆடினார்கள்!



மனிதாபிமானத்துடன் அணுகுங்கள்

உங்கள் ஸ்தாபனத்தில் தொழிலாளர் தகராறுகளைப் பற்றியும், அநேக இதர பிரச்னைகளைப் பற்றியும் பேசுகிறீர்கள். தொழிலாளர்கள் ஹிம்சை வழியில் இறங்கினால் நீங்கள் புகார் செய்வதில் முற்றிலும் நியாயம் இருக்கிறது. அரசாங்க நீதியிலும் சட்டம், ஒழுங்கு முறை அடிப்படையிலும் தவிர நீங்கள் எந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறீர்கள் ? எண்ணற்ற மக்களிடம் இத்தகைய நடவடிக்கை சாத்யமில்லை. மனிதாபிமானத்துடன் அவர்களிடம் பேசி, அவர்கள் வெறும் சாதாரண விறகு வெட்டியோ, ஜலம் சேந்துபவரோ அல்ல, என்றும் ஒரு தொழிலில் முக்கியமான, அத்யாவசியமான பணியாற்றுபவர் என்றும் உண்மையில் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தின் இயக்கத்தில் பங்காளிகள் என்றும் எடுத்துக்காட்டி உணரச் செய்ய வேண்டும். உங்கள் அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலுமுள்ள மக்களிடம் மனப்பூர்வமான மனிதாபிமான் உணர்ச்சியுடன் எந்த அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும், உங்கள் பெரிய ஸ்தாபனத்தில் அவர்களும் பங்காளிகள்தான் என்று அவர்கள் எந்த அளவுக்கு உணரச்செய்திருக்கிறீர்கள் என்பதையும் நீங்களே யோசித்துப் பாருங்கள் ...

"இத்தகைய மனிதாபிமான மார்க்கம் எப்பொழுதும் அவசியமானதுதான். ஆனால் இன்று ஜனநாயக அமைப்பில் இது இருமடங்கு அவசியமாகும். காரணம் உண்மையில் பிரச்னைகளை முடிவாகத் தீர்மானிப்பவர்கள் மக்களே."

— ஜவாஹர்லால் நேரு.

(கல்கத்தா அசோஸியேட்டட் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸில் டிஸம்பர் 14, 1953 அன்று சொற்பொழிவில் கூறியது)

வெளியிட்டவர்கள் IOL இண்டியன் ஆக்ஸிஜன் லிமிடெட்

OC-102 TAM

அஞ்சலி




காலச்சக்கரத்தின் சுழற்சியில் எது மாறியபோதிலும் அன்பின் வலிமை மட்டும் மாறுவதில்லை. அன்பில் பிரிவும் சேர்ந்து விட்டால் அதன் உறுதி நாளுக்கு நாள் அதிகமேயாகிறது. டிசம்பர் 13-ந் தேதியுடன் ஸ்ரீமதி சுந்தரம்மாள் மறைந்து ஆண்டுகள் ஆறுகின்றன. இன்றும் மாறாத அன்புடன் அவரது கணவர் திரு வி. தியாகராஜன் (முன்னாள் 'அபீஷியல் அஸ்ஸைனி') அவர்களும் அவரது குடும்பத்தினரும் சுந்தரம்மாளின் உத்தமமான குண நலன்களைக் கனிந்த உள்ளத்துடன் நினைவு கூராத நாளில்லை. அவர்களது நினைவு மேலுலகை எய்துவிட்ட அப்பெருமாட்டி ஸ்ரீமதி சுந்தரம்மாளின் ஆன்மாவுக்கு என்றென்றும் சாந்தியளிக்குமாக!

மறு நாள் பொழுது விடிந்ததும் வேலவன் கோதை மரக்கலத்திலே வெள்ளைத் தீவுக்குப் புறப்படுவது என்று ஏற்பாடு. தொடக்கத்தில் கொற்றவை விழா முடித்து அல்லவா புறப்பட்டான் வேலவன்! இப்போது விண்ணவர் விழாவைத் தொடர்ந்து வெள்ளைத் தீவு நோக்கிப் பயணமானான் அந்த வீரக் கோதை! செவ்வந்தி அடிகள் வாழ்த்து வழங்கும் போதே மலர்வேணியனைக் கூர்ந்து பார்த்தார். அந்தக் குறிப்பைப் புரிந்துகொண்டு மன்னவன் சொன்னான்:

"வெளிப்படையாக நாம் கடம்பர்களின் எதிரிகள் என்று அறிவித்து அவர்களைத் தாக்கும் வரையில், புன்னாட்டுக்கும் உங்களுக்கும் உள்ள இந்தத் தொடர்பு யாருக்கும் தெரியாமல் ஆயமாகவே இருக்க வேண்டும். நீலவல்லி இந்தப் புன்னாட்டு மண்ணிலே அடியெடுத்து வைக்கும் வரை, சேரலாத மன்னருக்குமே இது செய்தி தெரிய வேண்டுவதில்லை. ஆகையால் நான் உங்களிடம் ஒப்படைக்கும் மரக்கலம் நமது புன்னாட்டு அரச மரக்கலம் அன்று! ஒரு வணிக மரக்கலம் அது. சில ஒற்றர்கள் மட்டும் உங்களுக்குத் துணையாக வருகிறார்கள். வெள்ளைத் தீவில் உள்ள இரண்டு யவனர்களைப் போல இவர்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆற்றல்மிக்க வீரர்கள் இவர்கள்! என்றாலும் மறைவான இரவிலேயே நீங்கள் மீண்டும் புன்னாடு நோக்கிப் புறப்பட்டு வர வேண்டும்!"

இவ்வாறு சொல்லி வழியனுப்பினான் மலர்வேணியன். அப்போது செவ்வந்தி அடிகள் ஒரு ஞானப் புன்முறுவல் செய்தார்! மரக்கலம் வெள்ளைத்தீவை நோக்கிப் புறப்பட்டது!

(தொடரும்)





அமர்நாத் குகையினுள்ளே வெண்பனியாலான ஐந்தரை அடி உயரமுள்ள லிங்கம்

நடமாடும் நகரத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பாரதத்தின் வடக்குக் கோடியில் ஒவ்வோர் ஆண்டும் அப்படி ஒரு நகரம் திரண்டு இமயமலையின் மடியில் அமர்நாத் குகை வரைக்கும் சென்று திரும்புகிறது.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் பாரதத்தின் பல பாகங்களிலிருந்து கூடுகிறார்கள். அவர்கள் உபயோகத்திற்காக 6000 மட்டக் குதிரைகள் கூட வருகின்றன. அங்கங்கே முகாம் போடத் தேவையான கூடாரங்கள், சமையல் செய்து சாப்பிட வசதிகள், மளிகைக் கடைகள், தபால் தந்தி ஆபீஸ், ஆஸ்பத்திரி எல்லாம் கூடவே வருகின்றன. தண்ணீர்க் குழாய் வசதியும் மின்சார வசதியும் கூடச் செய்து தருகிறார்கள்.

காஷ்மீர் அரசாங்கம் முன் நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறது.

ஸ்ரீநகரிலிருந்து 90 மைல் வடகிழக்கில் உள்ள அமர்நாத் புண்ணிய ஸ்தலத்தில் பனிலிங்க ஸ்வரூபமாய்க் காட்சி அளிக்கும் சிவபெருமானைத் தரிசிக்கவே இந்த நகரம் திரள்கிறது.

தரிசனம் ஒரு நாள்தான். ஆனால் போக வர ஒரு வாரம் பிடிக்கும்.

ஆதியில் மகா முனி யாக்ஞவல்கியரின் பிதா ஸ்ரீ புருகு முனிவர் ஹிமோத் பர்வதத்தைச் சுற்றி வரும்போது சிவபெருமான் இவ்விடம் அவருக்குத் தரிசனம் கொடுத்ததாக ஐதீகம். மூவாயிரம் ஆண்டுகளாக யாத்திரிகர்கள் இவ்விடம் சென்று ஸ்ரீ அமரநாதனைத் தரிசித்து வருகிறார்கள்.

யாத்திரை மிகவும் கடினமானதே. செங்குத்தான மலையேற்றம்; கரடுமுரடான மிகக் குறுகலான பாதைகள். மழை பெய்யுமே யானால் சர்வ ஜாக்கிரதையாக நடக்க வேண்டும். இல்லாதபோனால் சறுக்கிவிட்டுவிடும். வெண்பனி மழை, கடினமான குளிர் இவற்றையும் தாங்க வேண்டும். ஆயிரக் கணக்கான மக்கள் வருடா வருடம் இந்த யாத்திரையை மேற்கொள்ளுகிறார்கள்.

ஸ்ரீநகரிலிருந்து அறுபது மைலில் உள்ள பகல்காம் என்ற இடத்திலிருந்துதான் இந்த நடமாடும் நகரம் திரளாக நகரத் தொடங்குகிறது. பகல்காம் (முதல் கிராமம்) என்ற நகரம் மிகவும் அழகான இடம். கோடை காலத்தில் உலகத்தில் பல நாடுகளிலிருந்தும் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருகிறார்கள்.

இவ்வருடம் காஷ்மீர் கவர்னர் யுவராஜ் கரன்சிங், அமர்நாத் யாத்திரையைத் தொடங்கி வைத்தார். ''சடி'' என்று சொல்லப்படும் ஈசனின் திரிசூலத்துக்குப் பூஜை செய்தான பின் ''சடி சாஹிப்'' என்னும் பூசாரி அதைத் தூக்கிக் கொண்டு முன்னே செல்கிறார். இவர் அமர்நாத் குகையில் வீற்றிருக்கும் லிங்கத்துக்கு பூஜை செய்பவர். இவர் கால்நடையாகச் செல்ல, இவர் பின் கால்நடையாகவும், மட்டக் குதிரைகள் மீதும் பிரயாணிகள் தொடருவர். வேறு சில யாத்திரிகர்களை நாற்காலி போன்ற அமைப்பில் உட்காரவைத்துத் தூக்கிக் கொண்டு செல்லும் கூலியாட்களும் உண்டு. இவற்றைத் 'தாண்டி' என்கிறார்கள்.

பகல்காமிலிருந்து பார்க்கும்போது பனி மூடிய மரங்களும், தேவதாரு மரங்களின் வரிசையும் கண்கொள்ளாக் காட்சியாகத் தெரிகின்றன. இவற்றை யெல்லாம் கடந்து போக வேண்டுமே என்ற பிரமிப்பும் ஏற்படுகிறது.

யாத்திரிகர்களுக்கு வேண்டியசாமான்களைப் பகல்காமிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஒரு மட்டக் குதிரை ரூ. 60. சாமான்களைச் சுமந்து வரவேண்டிய குதிரைக்கும் அக்கட்டணமே. ஒரு பல்லாக்கு ''தாண்டி'' ரூ. 250 என்று - இப்படி வாடகைக்குச் சகல பொருள்களும் கிடைக்கும். கூடாரம் (ரூ. 25) முதல் ஸ்டவ் வரை என்னென்ன வேண்டும் என்கிற ஜாபிதாவும் தந்து விடுகிறார்கள்.

யாத்திரிகர்களில் பெரும்பாலும் வட இந்தியர்களாகவே இருப்பதால் அவர்கள் உண்ணும் உணவு வகைகளே கிடைக்கும். தென்னிந்தியர்கள் இந்த யாத்திரையில் அதிகமாகக் காணப்படவில்லை. ஒருசிலர் மதுரையிலிருந்து வந்திருந்தனர்.

பகல்காமில் ஸ்படிகம் போல ஓடும் மலையருவி ஒன்றில் குளித்துவிட்டுச் சாப்பிட்டபின் ஆகஸ்ட் 27ந் தேதி பிரயாணத்தைத் தொடங்கினோம். எங்களுக்குக் குதிரைச் சவாரிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். முதல் நாள் யாத்திரை சந்தன்வாடி என்ற இடத்தை நோக்கிச் சென்றது. சந்தன்வாடி 9500 அடி உயரத்திலுள்ள அழகான இடம். யாத்திரைக் கும்பலில் குழந்தைகள், வயோதிகர்கள் ஏராளம். நொண்டி, குருடு, பிச்சைக்காரன் எல்லாம் அடக்கம். சந்தன்வாடி போய்ச் சேர்ந்த போது பல குடும்பங்கள் பிரிந்து ஒருவரை ஒருவர் தேட வேண்டியதாகிவிட்டது. ஒலி



அமர்நாத் குகை

பெருக்கி மூலம் இன்னாரை இன்னார் தேடுகிறார் என்று அறிவித்துக் கொண்டே யிருந்தார்கள். எங்கள் கூடாரத்தில்தான் ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. இரவு முழுதும் ஒலிபெருக்கி அலறிக் கொண்டே யிருந்ததால் தூங்கவே முடியவில்லை. அதோடு அமரநாத் பஜனையையும் ஒலி பெருக்கி மூலம் இரவு முழுவதும் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் 28ந் தேதி எட்டு மைல் தொலைவிலுள்ள சேஷநாக் என்னும் இடத்துக்கு யாத்திரை ஆரம்பமாயிற்று. முதல் மூன்று மைல் மிகவும் கடினமானது. இதற்கு "பிஸர்கட்" என்று பெயர். சுமார் மூவாயிரம் அடி உயரமுள்ள மலையைக் கடக்க வேண்டும். மலைமேல் காடுகள் வழியே செல்லும் ஒற்றையடிப் பாதை. ஒருபுறம் கிடுகிடு பள்ளம். குதிரை மேல் சவாரி செய்பவர்கள் மனத்தில் பயம். ஆனால் இந்தக் குதிரைகளுக்கு ஒரு பயமும் இல்லை. உறுதியாக அடியெடுத்து வைத்து அனாயாசமாக நம்மையும் சாமான்களையும் தூக்கிக் கொண்டு குறுகலான மலைப் பாதைகளில் செல்கின்றன. இந்த மலையைக் கடந்த பிறகு மரங்களைக் காண முடியாது. சிற்சில இடங்களில் புல் தரையையும், ஓடும் நதிகளையும், மலையருவிகளையும் காணலாம். சேஷநாக் போகும் வழி மிகவும் அழகான காட்சிகளைக் கொண்டதாக இருக்கிறது. 12,700 அடி உயரத்தில் உள்ளது சேஷநாக். அதைவிட உயரமான மலைகள் இருபுறமும் பனி உறைந்த உச்சியுடன் தோற்றம் அளிக்கின்றன.

சேஷநாக்கில் பச்சைக் கிளி வர்ணமான அழகான ஏரி ஒன்று இருக்கிறது. இதை ஒரு மகா தீர்த்தமாகக் கருதுகிறார்கள். நவம்பர் வந்தால் இந்த ஏரியில் தண்ணீர் இருக்காது. பனிக்கட்டி தான்! இதில் ஸ்நானம் செய்வது மிகவும் விசேஷம்.

சேஷநாக்கிலிருந்து ஏழு மைலில் பஞ்சதர்ணி என்ற உன்னதமான ஸ்தலம் உள்ளது. யாத்திரிகர்கள் இந்த இடத்தை நோக்கி ஆகஸ்ட் 29ந் தேதி காலையில் புறப்பட்டார்கள். பாதை அவ்வளவு கடினமில்லை என்றாலும் 14,900 அடி உயரமுள்ள 'மகாகுண' என்ற மலைச் சிகரத்தைத் தாண்டிப் போக வேண்டும். பல யாத்திரிகர்கள் காற்றின் அழுத்தம் குறைவாக உள்ள இந்த உயரத்தில் மூச்சு விடக்கூடச் சிரமப்பட்டார்கள் என்பதால் அவர்களுக்குச் செயற்கையாகப் பிராணவாயு தந்தார்கள்.

பஞ்சதர்ணி என்றால் ஐந்து அருவிகள் என்று பொருள். பரமேசுவரன் தாண்டவ நடனம் செய்தபோது இறைவனுடைய முதல் ஜடை அவிழ்ந்து அதனின்றும் ஐந்து பவித்ரத் துளிகள் இங்கே விழுந்தனவாம். அத்துளிகள் பிரவாகமாகி ஐந்து நதிகளாகி விட்டன. சிந்து நதி இவற்றில் ஒன்று. இதன் கரையில் கூடாரமடித்துத் தங்கினோம். கடுங்குளிரிலும் இந்நதியில் ஸ்நானம் செய்வது இன்பமாக இருந்தது.

அமர்நாத் யாத்திரையின் கடைசிக் கட்டம் இங்கிருந்து ஆரம்பமாகிறது.

என் கணவர் சிந்துநதிக் கரையில் சிராவணைச் சடங்குகளை முடித்துக் கொண்டார். பின்னர் பல இடங்களில் இரண்டு மூன்று அடி அகலமே உள்ள குறுகலான வழுக்குப் பாதைமீது நாங்கள் அமர்ந்திருந்த குதிரைகள் சென்றன. ஒரு பக்கம் செங்குத்தான மலையும் மறுபக்கம் கிடுகிடு பள்ளமுமான ஆபத்தான பாதையாக இருந்தது.



இமயமலைத் தொடருக்கு இடையில் "நடமாடும் நகரம்"

ஓரிடத்தில் செங்குத்தாக ஆறடி ஏற வேண்டும். அதில் ஒரு படிக்கட்டு செதுக்கிச் செய்திருக்கிறார்கள். உடன் வரும் ஜவான்கள் கால் நடையாகச் செல்லும் ஒவ்வொருவரையும் பிடித்துத் தூக்கி விடுகிறார்கள். குதிரைகள் எப்படிச் செல்கின்றன என்பது ஆச்சரியமாயிருக்கிறது.

அமர்நாத் குகையை அடையும் முன் பனிக்கட்டியாக உறைந்து கிடக்கும் அரை மைல் அகலமுடைய ஆற்றைக் (Glacier) கடக்க வேண்டும். ஆற்றுக்கு மறுபுறம் 1400 அடி உயரத்தில் அமர்நாத் குகை தெரிகிறது.

குகையின் சிகரத்திலிருந்து ஓடிவரும் நதிக்கு "அமராவதி" என்றும், "அமர கங்கை" என்றும் பெயர். சிலர் உறையும் குளிரைப் பொருட்படுத்தாமல் அந்த நதியில் ஸ்நானம் செய்தார்கள். மற்றவர்கள் தண்ணீர்த் துளிகளைத் தலையில் தெளித்துக் கொண்டார்கள்.

வளைந்து வளைந்து உயரே செல்லும் கரடு முரடான பாதையை ஒரே மூச்சில் கடப்பது கஷ்டம். அங்கங்கே இளைப்பாறிக் கொண்டு தான் போக வேண்டும். மழை வேறு பொழியத் தொடங்கியது. ஒரு வழியாக மத்தியானம் இரண்டு மணிக்குக் குகை வாயிலை அடைந்தோம். ஜனங்கள் நெருக்கி அடித்துக் கொண்டு தரிசனம் செய்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

குகைக்குள் ஐந்தரை அடி உயரத்தில் லிங்க ரூபமாய்ப் பரமேசுவரர் தோற்றமளிக்கிறார். அன்னை பார்வதி, கணேசர் இருவரும்கூட லிங்க வடிவத்தில் வலது பக்கம் வீற்றிருக்கிறார்கள். கடல் மட்டத்திலிருந்து 13,600 அடி உயரத்தில் உள்ள இக் குகை, 60 அடி அகலமும் 60 அடி நீளமும் 70 அடி உயரமும் கொண்டது. மேலிருந்து நீர்த்துளிகள் சொட்டிச் சொட்டிப் பனிக்கட்டியாக உறைந்து லிங்கமாகிறது. வெளியில் ஓர் இடத்திலும் சமீபத்தில் பனிக்கட்டி இல்லை. குகையின் கூரையிலிருந்து அமர கங்கையின் நீர்த் துளிகள் விழுகின்றன. இது தெய்வீக அற்புதம்தான்.

பகல் இரண்டு மணிக்குத் தரிசனம் கிடைத்தது. அர்ச்சனை ஆரத்தி ஒன்றும் கிடையாது. பூஜை திரவியங்களை லிங்கத்தின் பாதத்தில் சமர்ப்பித்து நமக்குப் பிரசாதம் வழங்குகிறார்கள். லிங்கத்திலிருந்து உதிரும் பனித் தூள்களையும் 'அமிர்த்' என்றபெயரில் பிரசாதமாக வழங்குகிறார்கள். குகையிலிருக்கும் மிருதுவான வெண்மை நிறமுள்ள கல் துகள்களை விபூதியாகத் தருகிறார்கள். அந்தத் திருநீற்றை வாங்கிப் பய பக்தியுடன் இட்டுக் கொண்டபோது எவ்வளவோ சிரமப்பட்டு இவ்வளவு தூரம் வந்து சேர்ந்த பிரயாணக் களைப்பெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மாயமாக மறைந்து விட்டது.

மனத்தில் அமைதி, உள்ளத்தில் நிறைவு, புனிதமான ஒரு சாந்தி, தேகம் முழுவதும் வியாபித்திருக்க ஸ்ரீநகருக்குத் திரும்பினோம்.



நேருஜி காஷ்மீரத்தை எந்த அளவுக்கு விரும்பினார் என்று நம் அனைவருக்கும் தெரியும். அவருடைய ஒரு வர்ணனை இதோ :

சில பெண்மணிகள் அசாதாரணமான சௌந்தர்யத்துடன் இருப்பார்கள். அவர்களைப் பார்க்கும்போது சாமான்யமான ஆசைகள் ஏதும் தோன்றுவதில்லை. இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாகத் தெய்விக அழகு படைத்தவர்களாக விளங்குவார்கள். காஷ்மீரம் இத்தகைய ஒரு பெண்மை அழகு பூண்டு விளங்குகிறது. அதன் நதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஏரிகளிலும் நளினமான மரங்களிலும் இந்தப் பெண்மை அழகைக் காண்கிறோம். பிறகு இன்னொரு அழகு நமக்குத் தென்படும். அது ஆண்மை அழகு. கடினமான மலைகள், அதன் பனிபடர்ந்த உச்சிகள், செங்குத்தான மலைச் சரிவுகள், பனிக்கட்டிப் பாறைகள், கொடுமையான, கொடூரமான வேகத்துடன் பள்ளத்தாக்கை நோக்கிப் பாயும் ஆறுகள் போன்றவை.

காஷ்மீரத்தின் இந்த அழகுக்கு நூறுவித முகங்கள் உண்டு. அவற்றின் பாவங்களோ அடிக்கடி மாறி மாறித் தோன்றும். சில சமயம் சிரிக்கும். சில சமயம் துயரமே வடிவாகக் காட்சி தரும். தால் ஏரியிலிருந்து புகை மூட்டம் போன்ற மூடு பனி மெல்ல எழும். முகத்தை மூடியுள்ள ஒரு சல்லாத் துணிபோல் பின்னால் உள்ளதை இலேசாகக் காட்டி மறைக்கும். மலை உச்சிகளை மேகக் கூட்டங்கள் கரங்களை நீட்டிக் கட்டித் தழுவும்; அல்லது ஒளிந்து விளையாடும் குழந்தைகளைப் போல் ஓசைப்படுத்தாமல் மெல்ல ஊர்ந்து கீழிறங்கும்.

மாறி மாறி வரும் இந்தக் காட்சிகளை நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். சில சமயங்களில் இந்தப் பேரழகெல்லாம் என்னைத் திக்குமுக்காடச் செய்து மயக்கமடையும் நிலைக்குக் கொண்டு சென்று விடும். நான் கண்ணிமைக்காமல் பார்க்கையில் இதெல்லாம் ஏதோ கனவுபோல, நிஜமல்ல போலத் தோன்றும். உள்ளத்தில் எழும் ஈடேறாத அபிலாஷைகள் போல; காதலுக்குப் பாத்திரமான ஒருத்தியின் முகத்தைக் கனவிலே காண்பதும், விழித்தெழுந்ததும் அம்முகம் மங்கி மறைந்துவிடுவதும் போல இது இருந்தது.

(கேம்பிரிட்ஜில் முதல் நேரு நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்திய பட்லர் பிரபு கூறியது. நவம்பர் 10, 1966.)



HIS MASTER'S VOICE
VOLUME
TUNING
மிகப்
பெரிய
சூப்பர்
:பிடலிடி
எலிப்டிகல்
ஸ்பீக்கருடன்
நிகழசசிகளை ததரூபமாயும், தொனிச் சிறபபுடனும், வெளிப்படுத்தும்படி விசேஷமாக அமைக்கப்பட்டது.
6 வால்வுகள் • 4 அலைவரிசைகள் • பியானோகீ கட்டுபபாடு விசை • தனிப்பட்ட கீழ் ஸ்தாயீ, மேல் ஸ்தாயீ கட்டுப்பாடு விசைகள் • 10¾" × 6" அளவில் எலிப்டிகல் ஸ்பீகர் • சௌகரியமான பிக-அப் இணைப்பு.
மாடல் 5175-ஏ‌லி
விலை ரூ. 516.67 எக்ஸைஸ் வரியுளபட. உள்ளூர் வரிகள் தனி.
"HIS MASTER'S VOICE"
His Master's Voice
C-179 TAM



பலரைப் போல் இதன் இன்சுவையைப் பருகுங்கள்

ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூள் இன்சுவையில் நிகரற்றது. மதிப்பில் ஒப்பற்றது. ஏனென்றால் ஒரு பாக்கெட்டிற்கு அதிக கப்புகள் சுவையான தேநீரை ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூள் உங்களுக்குக் கொடுக்கிறது. ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத்தூளைச் சுவைத்துப் பாருங்கள். லட்சக்கணக்கான மக்கள் முன்பே சுவைத்து வருகின்றனர்.

JWT BB-3438

கௌரி கல்யாணம்

தங்கையின் மீது உயிரையே வைத்திருக்கும் அண்ணன் திரையுலகுக்குப் புதியவனல்ல; அந்த அண்ணனுக்குத் தெரியாமல், அவனுக்குப் பிடிக்காத வாலிபனை அவள் காதலிப்பதும் புதிதல்ல; அண்ணன் தங்கையின் நல்வாழ்வுக்காகத் தன் காதலைத் துறப்பதும் புதிதல்ல. ஆனால் இந்தப் படத்தில் அதில்தான் ஒரு மாறுதல். தான் காதலித்த பெண் தன்னைக் காதலிக்கவில்லை என்று தெரிந்ததும், அண்ணன் தன் மனசைத் தேற்றிக் கொண்டு விடுகிறான்; தன் தங்கையின் காதலன் ஒரு பணக்கார வாலிபன் என்று தெரிந்ததும், அண்ணன் சீற்றம் கொள்கிறான்; அதுவும் புதிதல்ல. பணக்கார வாலிபனின் தந்தையும், ஏழை அண்ணனின் தந்தையும் நெடுநாளைய நண்பர்கள் — அந்த உண்மை கடைசியில் தெரிகிறது.

ஜெயசங்கர் போஸ்ட்மேன் ராஜு—அதாவது அண்ணன். ஜெயலலிதாதான் தங்கை—கௌரி. ஜெயசங்கரின் நடிப்பு நன்றாக இருக்கிறது.

ரவிச்சந்திரன் பணக்கார வாலிபன் ராமுவாக வருகிறார்.

ஜெயலலிதா உடல் கவர்ச்சியைக் காட்டி, துள்ளிக் குதித்து நடனம் ஆடிக் காதல் காட்சிகளில் அதிகமாகவே ஒட்டி, உரசி, இடையில் கொஞ்சம் கண்ணீர் உகுத்துத் தம் பாகத்தை ஒப்பேற்றியிருக்கிறார். வி. எஸ். ராகவன் வேதகிரியின் பாகத்தை ஏற்று அதி அற்புதமாக நடித்திருக்கிறார். நண்பனிடம் கொண்டுள்ள நன்றி உணர்ச்சியை மிகவும் இயல்பாகக் காட்டுகிறார்.


இந்தச் சிக்கலான கதையைப் புனைந்து வசனமும் எழுதி வெற்றி கண்டிருக்கும் எழுத்தாளர் பிலஹரி பாராட்டுக்குரியவர்.

பள்ளி உபாத்தியாயராக வரும் நாகேஷின் இயற்கையான தமாஷ்கள் நன்றாயிருக்கின்றன. பழைய மாணவன் கலெக்டரானதும் பழைய உபாத்தியாயரைச் சந்திக்கவருகிறான். அந்தக் காட்சிக்கு நாகேஷ் உயிர் கொடுக்கிறார். ஆனால் ஒரு மாணவனின் முரட்டுத் தகப்பனிடம் அடிபடாமல் உபாத்தியாயர் ஓடித் தப்பும் காட்சி தேவையில்லை. உபாத்தியாயரை அத்தனை இழிவாகக் காட்டியிருக்க வேண்டாம்.


''திருப்புகழைப் பாடப் பாட'' என்னும் பாட்டு நன்றாயிருக்கிறது. பாரதியாரின் ''வெள்ளைக் கமலத்திலே'' என்னும் பாட்டு நன்றாயிருப்பதில் அதிசயமில்லை. ஆனால் மற்றப் பாடல்கள்...?

சில அநாவசியக் காட்சிகளை வெட்டிவிட்டுப் படத்தை வேகமாக ஓடவிட்டிருந்தால் சரவணா கம்பைன்ஸின் ''கௌரி கல்யாணம்'' வெற்றிப் படமாயிருந்திருக்கும்.





" பலே பாண்டியா! பிள்ளை!
நீர் ஒரு புலவன் ஐயமில்லை "
என்று பாரதியாரால் பாராட்டப்பெற்ற நாமக்கல் கவிஞருக்கு ஸ்ரீ உஜ்ஜல்சிங் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கிறார்.



" கி.ஐ.ர. மேடையேறிப் பேசுவதே ஒரு மறுமலர்ச்சி தான் " என்று ராஜ. சொ. ஒருமுறை குறிப்பிட்டாராம். அப்படி அடக்கமே உருவான கி.ஐ.ர.வுக்குத் தமிழக கவர்னர் கேடயம் வழங்கிக் கௌரவிக்கிறார்.

கெட்டிக்கார எழுத்தாளர்கள்

எஸ். வி. எஸ்.

'என்ன ஆச்சரியம்! என்ன அதிசயம்! எழுத்தாளர்கள்கூட அல்லவா கெட்டிக்காரர்களாகி வருகிறார்கள்!' என்ற உணர்ச்சிதான் சென்ற 3, 4 தேதிகளில் சென்னை ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற பதினைந்காவது எழுத்தாளர் மகாநாட்டைக் கண்டவர்கள், பங்கெடுத்துக் கொண்டவர்கள் அனைவர் உள்ளத்திலும் எழுந்திருக்கும். 'எழுத்தாளர்களா? அவர்கள் நெல்லிக்காய் மூட்டையாயிற்றே' என்று சொல்லப்பட்டு வந்த குறை படிப்படியாக மாறி வருகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல. இந்த மகாநாட்டுக்கு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து வரவேற்புரை நல்கிய திரு வி. ஆர். ராதாகிருஷ்ணன், ''வாழ்க்கையை அப்படியே சித்திரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் காம விகார உணர்ச்சிகளையும் தீய குணாதிசயங்களையும் எழுதி மக்களிடையே அத்தீய எண்ணங்களை உண்டாக்குவது நியாயமாகுமா என்பதை எழுத்தாளர்கள் சிந்தனை செய்து முடிவு செய்ய வேண்டும்.... ஒருசில பத்திரிகைகளில் வரும் படங்கள் மிருக உணர்ச்சிகளைத் தூண்டுவனவாக இருக்கின்றன. பல சினிமாப் படங்களும் சுவரொட்டிகளும் மனிதனின் கீழான உணர்ச்சிகளைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன'' என்று மிகவும் தர்மசங்கடமான ஒரு சர்ச்சையைக் கிளப்பி விட்டார். சரி, மறுநாள் மகாநாட்டில் பலமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெறப் போகின்றன என்று எதிர்பார்த்திருந்தவர்கள் ஏமாற்றமடையவே நேர்ந்தது. ஏனெனில் மகாநாட்டில் பலரும் அந்தக் கருத்தை முழு மனத்துடன் ஆதரிக்கவே தொடங்கி விட்டனர். திரு எஸ். டி. சுந்தரம் அவர்களும், டி. கே. ஷண்முகம் அவர்களும் பகிரங்கமாக ஆதரித்து இத்தகைய உணர்ச்சிகளைத் தூண்டக்கூடாது என்றே முடிவு கட்டினர். கூடியிருந்த நூற்றுக்கணக்கான எழுத்தாளப் பெருமக்களும் இதை ஆதரித்ததாகவே தோன்றியது. இது ஒரு நல்ல சூசகம் அல்லவா?

இவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழுக்கு அருந் தொண்டு புரிந்துள்ள இரு பெரியார்களுக்குக் கேடயம் வழங்கியும், தமிழ் இலக்கியத்தைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து வழங்கித் தமிழ் முன்னேற்றத் தொண்டாற்றியுள்ள இரு அன்பர்களுக்குப் பதக்கங்கள் வழங்கியும் கௌரவித்துள்ளது.


கேடயங்கள் பெற்றவர்கள் நாமக்கல் கவிஞரும், மஞ்சரி ஆசிரியர் கி.ஐ.ர.வும். நாமக்கல் கவிஞரைப் பற்றித் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகப்படுத்துவது கொல்லர் தெருவில் ஊசி விற்பது போலாகும். ஆனால் கி. ஐ. ர. அப்படியல்ல. அவர் ஒரு குடத்து விளக்கு. சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம் ஆகிய பல துறைகளிலும் புகுந்து சென்று

நாற்பதாண்டுகளுக்கு மேலாக அவர் சிரிய பணியாற்றியிருக்கிறார்.

அருள் திரு தருமரதன தேரோ சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை சிங்களத்தில் மொழிபெயர்த்ததுடன் 'சிங்கள மொழி மேல் தமிழ் ஆதிக்கம்' போன்ற பல நூல்களைச் சிங்கள மொழியில் எழுதி, இலங்கை அரசாங்கத்தின் பரிசும், யுனெஸ்கோவின் பரிசும் பெற்றவர். தமிழ், சிங்களம் மட்டுமின்றி, சம்ஸ்கிருதம், பாலி போன்ற மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்.

மத்தூர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேராசிரியர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களின்

இவர் பெயரை உச்சரிப்பது கடினம்தான் — வண. பண்டித ஹிஸ்ஸெல்லே தருமரதன தேரோ, இலங்கை நாட்டைச் சேர்ந்தவர். பதக்கப் பரிசு பெறுகிறார்.



''அலை ஓசை''யை மொழி பெயர்த்துக் கன்னடப் பத்திரிகையில் வெளியிட்டார்! அப்போது அந்தப் பத்திரிகையின் விற்பனை வாரத்துக்கு வாரம் ஆயிரக் கணக்கில் பெருகி வந்தது. இதைப் பத்திராதிபரின் அனுமதி பெற்றுப் புள்ளி விவரத்துடன் அவர் கூறிய போது மன எழுச்சி கொள்ளாதவர் யார்? மத்தூர் கிருஷ்ணமூர்த்தி, ராஜாஜி, அகிலன் போன்ற பல எழுத்தாளர்களின் கதைகளையும் கட்டுரைகளையும் கன்னடத்தில் புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்.

கவியரங்கினைப் பற்றி ஒரு வார்த்தை. அது ''படா போராகப் போய் முடிந்தது'' என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏழு எட்டுக் கவிஞர்களுக்கு மேல் போகாமல் இருந்தால்தான் ரசப்படும். இப்படியொரு கவியரங்கு நடத்தினால் மக்களுக்குக் கவிஞர்கள் மீது கோபம் வருவது இருக்கட்டும்; கவிதையின் மீதே கோபம் வந்துவிடுமே!

இந்த மகாநாட்டைச் சென்னை மாநில கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் தொடங்கி வைத்தார். கல்கி ஆசிரியரின் பணிகளை நினைவு கூர்ந்தார். இலக்கியம், தேசத்தை ஒன்று படுத்தும் பாலமாக விளங்குவதையும் ஞாபகப்படுத்தினார்.

மறுநாள் சென்னை முதல் மந்திரி அவர்கள் ''எழுத்தாளர் யார் — எவர்'' என்ற நூலை வெளியிட்டார். சென்னை அரசாங்கம் இந்நூல் வெளியிட ஆயிரம் ரூபாய் உதவியதற்கு எழுத்தாளர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மாலை பிரதம நீதிபதி மா. அனந்த நாராயணன் அவர்கள் எழுத்தாளர்களுக்குப் பயன்படும் வகையில் ஓர் அறிவு சான்ற சொற்பொழிவு நிகழ்த்தினார்.



தமிழ் - கன்னட மொழிகளுக்கிடையே இலக்கியப் பாலமாகத் திகழும் மத்தூர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குப் பதக்கம் கிட்டுகிறது

மொத்தத்தில் இவ்வாண்டுத் தலைவர் திரு அழ. வள்ளியப்பா வர இயலாத குறையைச் சென்ற ஆண்டுத் தலைவர் சோம. லெ. சிறப்பாக இட்டு நிரப்பினாலும் அழ. வள்ளியப்பா இல்லாதது பெருங் குறையாகத்தான் இருந்தது. எப்போதும் போல் எல்லாரிடையிலும் புன்னகை தவழப் பழகும்படி அவர் சீக்கிரம் உடல்நலம் பெற்று வந்து சேர வேண்டும் என்பதே எல்லாருடைய ஏகமனதான பிரார்த்தனையாக இருந்தது. சுமார் எழுநூறு எழுத்தாளர்களின் பிரார்த்தனை வீண் போகுமா?

இனிய தமிழ் புத்தகங்களை படித்து
அனுபவிக்க இதோ ஓர் அரிய வாய்ப்பு!

உங்கள் வீட்டிலேயே உங்களுக்குச் சொந்தமாக ஓர் நேர்த்தியான "வீட்டு நூலகம்" அமைக்க

தென் மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டர்லிங் ரோடு, சென்னை-34

SOUTHERN LANGUAGES
BOOK TRUST

அளிக்கும் திட்டம்

முதலீடு மாதம் ரூபாய் 5-00 மட்டுமே!

18 மாதங்களில் ரூ. 90.00 மதிப்புள்ள நீங்களே இஷ்டப்பட்டு தேர்ந்தெடுத்த அரிய பல தமிழ் நூல்களும் மற்றும் ரூ. 20.00 மதிப்புள்ள 12 பரிசு நூல்களும் அடங்கிய அழகிய நூலகம் உருவாகிவிடும்.

இத் திட்டத்தின் சீரிய அம்சங்கள்:

* சிக்கல்கள் அற்ற சுலபமான வழி.
* வேண்டிய புத்தகங்களை தேர்ந்தெடுக்க உதவியாக 75க்கு மேற்பட்ட புத்தகப் பதிப்பாளர்களின் பல அரிய புத்தகங்களின் பட்டியல் இலவசமாக தரப்படுகிறது. சென்னை வாசிகள் டிரஸ்டின் அலுவலகத்திற்கு நேரில் விஜயம் செய்தும் வேண்டிய புத்தகங்களை தேர்ந்தெடுக்கலாம்.
* நாவல், நாடகம், வரலாறு, சரித்திரம், சமயம், விஞ்ஞானம், இலக்கியம், ஓவியம், காவியம் சிறுவர் இலக்கியம் போன்ற எல்லாவித புத்தகங்களும் உள்ளன.
* திட்டத்தில் சேரும் நேயர் மாதச் சந்தாவான ரூபாய் ஐந்தைத்தவிர தபால் செலவு போன்ற எவ்விதச் செலவையும் ஏற்கவேண்டாம்.
* டிரஸ்டின் மாத வெளியீடான "புத்தக நண்பன்" என்னும் சஞ்சிகைப் பிரதி ஒன்று அங்கத்தினர்களுக்கு ஒவ்வொரு மாதமும் இலவசமாக அனுப்பப்படுகிறது.
* 18 மாதங்களில் 12 பரிசுப் புத்தகங்களும் கிடைக்கின்றன.

கீழே கொடுத்துள்ள திட்ட விவரங்களை படித்து உடனே அங்கத்தினராக சேருங்கள்.

1. முதல் மாத சந்தாவான ரூ. 5.00 தென் மொழிப் புத்தக டிரஸ்டாருக்கு கிடைத்தவுடன் சந்தாதார் இத் திட்டத்தின் அங்கத்தினராகப் பதிவு செய்யப்பட்டு அவருக்கு கீழே கண்டவை தபால் மூலம் அனுப்பப்படும்:
   a) பதிவு செய்யப்பட்ட அங்கத்தினர் என்ற ஒரு சீட்டு.
   b) பரிசு புத்தகங்கள் மூன்று. (விளம்பரத்தில் காட்டியுள்ள 10 புத்தகங்களிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுக்கும் 3 புத்தகங்கள்).
   c) ஒரு பெரிய புத்தகப் பட்டியல்.
   *d) டிரஸ்டின் மாதவெளியீடான "புத்தக நண்பன்" என்ற சஞ்சிகையின் பிரதி ஒன்று. (இப் பிரதி தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இலவசமாக அனுப்பப்படும்.)
2. 6 மாத சந்தா தொகை செலுத்திய பிறகு அங்கத்தினர்களுக்கு டிரஸ்டார் கீழ்க்கண்டவைகளை அனுப்புவார்கள்:
   a) ரூ. 25.00 மதிப்புள்ள புத்தகங்கள்.
   b) பரிசு புத்தகங்கள் மூன்று.

   மேற்கண்டவைகளைப் பெற, அங்கத்தினர்கள் ஏற்கனவே பெற்ற புத்தகப் பட்டியலிலிருந்து சுமார் ரூ. 75-00 மதிப்புள்ள புத்தகங்களைப் பொறுக்கி அதோடு பரிசுப் புத்தகங்கள் லிஸ்டிலிருந்து தனக்கு விருப்பமான 3 புத்தகங்களையும் குறிப்பிட்டு டிரஸ்டுக்கு தெரிவிக்க வேண்டும். இத் தகவல் கிடைத்தவுடன் டிரஸ்டார் ரூ. 25.00 மதிப்புள்ள புத்தகங்களும் 3 பரிசு புத்தகங்களும் அங்கத்தினருக்கு எவ்வித செலவுமின்றி அனுப்பி வைப்பார்கள்.
3. 12 மாத சந்தா செலுத்திய பிறகு அங்கத்தினருக்கு டிரஸ்டார் மறுபடியும் ரூ. 30.00 மதிப்புள்ள அங்கத்தினரே தேர்ந்தெடுத்த புத்தகங்களும், மேலும் 3 பரிசு புத்தகங்களும் அனுப்பி வைப்பார்கள். இவைகளைப் பெற அங்கத்தினர் மேற்சொன்னபடி செய்யவேண்டும்.


4. 18 மாத சந்தா தொகை முழுவதும் செலுத்திய பிறகு அங்கத்தினருக்கு மேலும் ரூ. 35.00 மதிப்புள்ள புத்தகங்களையும், 3 பரிசு புத்தகங்களையும் டிரஸ்டார் அனுப்பி வைப்பார்கள். இவைகளைப் பெற அங்கத்தினர் முன் செய்ததுபோல் செய்யவேண்டும்.

5. 18 மாதங்களுக்கும் சந்தா செலுத்த முடியாமற்போன அங்கத்தினர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகையளவு மதிப்புள்ள புத்தகங்கள் அனுப்பப்படும். இவ்வங்கத்தினர்கள் புத்தகங்களுக்கான பாக்கிங் மற்றும் தபால் செலவையும் ஏற்கவேண்டும்.

இத் திட்டத்தில் சேர்ந்து 18 மாதங்களும் சந்தா செலுத்தும் அங்கத்தினர் அடையும் லாபம் என்ன ?

i) அங்கத்தினர் தேர்ந்தெடுக்கும் புத்தகங்களின் மொத்த மதிப்பு	...	ரூ.	90.00
ii) 12 பரிசு புத்தகங்களின் மதிப்பு	...	ரூ.	20.00
iii) இலவசமாகப் பெறும் புத்தகப் பட்டியலின் மதிப்பு	...	ரூ.	1.00
iv) இலவசமாகப்பெறும் ''புத்தக நண்பன்'' 18 பிரதிகளின் மதிப்பு	...	ரூ.	9.00
v) பாக்கிங், தபால் செலவு இலவசம்	...	ரூ.	10.00
		ரூ.	130.00
அங்கத்தினர் செலுத்தும்தொகை		ரூ.	90.00
அங்கத்தினர் அடையும் லாபம்		ரூ.	40.00

இலவசம்!
இப் பத்து புத்தகங்களில் ஏதேனும் மூன்று!



காதல் வாழ்க · ஏழாவது குதிரை · வளரும் விஞ்ஞான வித்தைகள் · சாகச சிற்பிகள்



அரசியல் மேதை முதலிய வங்கச் சிறுகதைகள் · மிருகங்களுடன் 3 மணி · புதுத் தமிழ்க் கவி மலர்கள் · ரதோத்சவம் · நிலம் தரும் செல்வம் · தாயார் கொடுத்த தனம்

கீழ்க்கண்ட கூபனை உடனே பூர்த்தி செய்து அனுப்பி அங்கத்தினர் ஆகுங்கள் :

தென் மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டார்லிங் ரோடு, சென்னை-34

ஐயா,

''வீட்டு நூலகம்'' அமைக்கும் உங்கள் திட்டத்தில், அதன் நிபந்தனைகளுக்குட்பட்டு, அங்கத்தினராக சேர விரும்புகிறேன். இதற்கான முதல்மாத சந்தாவான ரூ. 5.00 மணியாடர் மூலம்* அனுப்பியுள்ளேன். விளம்பரத்தில் காட்டியுள்ள பத்து பரிசு புத்தகங்களில் எனக்குப் பிடித்த மூன்று புத்தகங்களின் பெயர்களை கீழே கொடுத்துள்ளேன்.

1

2

3

பெயர் ....

ஊர் : .... கையொப்பம் ....

தேதி : .... முழு விலாசம் ....

....

BENSONS 1/SLB-1 TAM R.

*குறிப்பு : சந்தா தொகை எப்பொழுதும் மணியாடர் மூலம் தான் அனுப்பப்பட வேண்டும். சென்னையில் வசிக்கும் அங்கத்தினர் சந்தா தொகையை டிரஸ்டின் அலுவலகத்தில் நேரில் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.
வரும் பொங்கல் தினத்துக்குள் அங்கத்தினராக சேருவோருக்கு அதிகப்படியாக ஒரு பரிசு புத்தகம் அளிக்கப்படும்.

குட்டிக் கண்டக்டர்

நரேந்திரநாத் மித்ர

அலுவலகம் விட்டதும் மிஷனைத் தாண்டியுள்ள டிராம் நிற்கும் இடத்தை நோக்கி சிதாம்சு நடந்தான். அவன் சியாம் பஜார் போகும் வண்டியைப் பிடிக்க வேண்டியவன். டிராம் வந்து நின்றதும் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறுவதற்காக முன்னேறியவன் தயங்கினான். காரணம், அகஸ்மாத்தாக அவனது பார்வை அவனுக்கு முன்பே அறிமுகமான ஒரு பெண்ணின் மீது விழுந்தது.

அவள் பெயர் மனுஷி. அவனைப் பார்த்து ஒரு புன்முறுவலை உதிர்த்துவிட்டு மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'நீ முன்னால் போய் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறிக்கொள். நான் ஒன்றும் உன்னைப் பார்க்கவில்லை' என்று சொல்வது போலிருந்தது அவளது அந்தச் செயல்.

முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும் நிலையில் அவன் இல்லை. காரணம், மாதக் கடைசி. அவன் சட்டைப் பையில் பத்துக் காசு நாணயம் ஒன்று மட்டுமே இருந்தது. ஆயினும் அடியுண்ட தன்மானத்தைக் காத்துக்கொள்வதற்காக, முதல் வகுப்பின் கசக்கிப் பிழியும் கூட்டத்தில் இடித்து மோதிக்கொண்டு எப்படியோ ஏறித் தொத்திக் கொண்டு விட்டான். மனுஷி அப்புறம் அவனைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. வேறு ஒரு வாலிபனுடன் பேச்சுச் சுவாரசியத்தில் ஈடுபட்டு விட்டாள்.

சிதாம்சு ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் அவளோடு படித்தவன். இருவரும் இலக்கிய மன்றங்களிலும் கல்லூரிப் பத்திரிகைகளிலும் அக்கறை காட்டிப் பங்கு எடுத்துக்கொண்டதால், நன்கு அறிமுகமாகி விட்டார்கள். மனுஷி இப்போது அரசாங்க அலுவலகமொன்றில் வேலை பார்த்து வந்தாள். சிதாம்சு சாதாரண இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றில் பணியாற்றி வந்தான். அகஸ்மாத்தாகச் சந்திப்பு ஏற்படவே இருவரும் முறுவலித்துக் கொண்டனர். மனுஷி தன்னை அடையாளம் கண்டுகொண்டு தன்னோடு பேச முன்வருவாள் என்று நம்பினான் சிதாம்சு. ஆனால் அவனுக்கு ஏமாற்றமே கிட்டியது.

முதல் வகுப்புப் பெட்டியிலோ தாள முடியாத கூட்டம். இரண்டாம் வகுப்புப் பெட்டியாயிருந்தால் அவனுக்குச் சுலபமாக உட்காரக்கூட இடம் கிடைத்திருந்திருக்கும்.

இப்பொழுது அவன் தன் முட்டாள் தனத்தை எண்ணி வருந்தினான்.

டிராம் லால் பஜாரைத் தாண்டியது. பஹுபஜார், சித்தரஞ்சன் அவென்யூ கிராஸ் இவற்றையும் தாண்டி ஒரு ஸ்டாப்பில் நின்றது. இங்கு யாரும் இறங்கவில்லை. உட்கார இடம் கிடைத்து ஆசனங்களில் அமர்ந்து விட்டவர்களுக்குத் தாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்ற எண்ணம். நின்றிருந்த பிரயாணிகளைப் பார்வையில் ஏளனம் கூத்திட நோக்கினர். தங்கள் ஆசனத்தில் வசதியாக உட்காருவதாக நினைத்துக் கொண்டு ஒருமுறை உடம்பை நெளிந்து கொடுத்துக் கொண்டனர். 'எப்பொழுதுமே இவர்கள் இங்கேதான் இருக்கப் போகிறார்களா?' — இப்படி எண்ணி வியந்தான் சிதாம்சு.

கண்டக்டர் கூட்டத்தில் மறைந்து விட்டான். அவன் தலையைக் குனிந்து ஒவ்வொரு பிரயாணிக்கெதிரிலும் டிக்கட் காசுக்காகக் கையேந்தி நின்றான். இப்படியே நகர்ந்து வந்தவன் சிதாம்சுவின் அருகிலும் வந்து விட்டான். தவிர்க்க முடியாத சங்கடம் எதிரே நிற்பதைக் கண்டு கதிகலங்கி விட்டான் சிதாம்சு. அவன் தனது விலைமதிக்க முடியாத மூலதனத்தை — பத்துக் காசைக் கை கழுவும் நேரம் தொலைவில் இல்லை என்பதையும் உணர்ந்தான். மனுஷியைப் பார்க்காமல் இருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! ஆனால் அவன் அவளைப் பார்த்து ஒரு வார்த்தை பேசவில்லையே! பேசியிருந்தாலாவது ஒருவேளை... சீ!... அநாவசியமாக மூன்று காசு நஷ்டப்படும்படியாகி விட்டதே! நம் முட்டாள்தனத்தை



என்னவென்று சொல்வது?—சிதாம்சு தன்னைத் தானே திட்டிக் கொண்டான்; நொந்து கொண்டான்.

கண்டக்டர் அவனை நெருங்கிவிட்டான். 'சார், டிக்கட்!' என்று கேட்டும் விட்டான். சிதாம்சு தன் சட்டைப் பையைப் பார்த்தான்; பிறகு காசை எடுக்கக் கையை எடுத்தான். அதற்குள்ளாகக் கண்டக்டர் நகர்ந்து விட்டான். அவன் ஒரு கணத்தையும் வீணடிக்க முடியாதே!

சிதாம்சு நிம்மதியாக ஒரு மூச்சு விட்டான். அந்த நிமிஷத்துக்குத் தன் காசு தப்பியதை நினைந்து மகிழ்ந்தான்.

கண்டக்டர் இந்தக் கோடிக்கு மீண்டும் வருவதற்குள் இறங்கி விட்டால்...? ஆம், மீதி வழியை நடந்தே கடந்து விடுவோம். அதுதான் நல்லது.

டிராம் சங்கர் கோஷ் சந்தையும் தாண்டி விட்டது. சிதாம்சு போக வேண்டிய இடம் அங்கிருந்து வெகு தொலைவில் இல்லை. இதற்கு முன் இதுவரை சிதாம்சு டிக்கட் வாங்காமல் பயணம் செய்ததில்லை. கண்டக்டர் மறந்து விட்டாலும் கூட அவனாகவே கூப்பிட்டு டிக்கட்டுக்கான கட்டணத்தைக் கொடுத்து விடுவான். அவனுடைய இந்த நாணயப் பொறுப்பை அவனுடைய எத்தனையோ நண்பர்கள் எள்ளி நகையாடியிருக்கிறார்கள். 'நீ ஒருவன் டிக்கட் வாங்காததால், இவர்களுக்கு ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை' என்று கடிந்து கொண்டுமிருக்கிறார்கள்.

ஆனால் சிதாம்சு நேர்மையானவன். ஒரு சில காசுக்காக இந்தக் குறுகிய புத்தியெல்லாம் எதற்கு என்று எண்ணுபவன். 'கூடாது, கூடாது. நாணயமாக இருப்பதுதான் நல்லது' என்று சொல்லிவிடுவான்.

ஆனால் இன்று அதே சிதாம்சு வேறுவிதமாக எண்ணலானான். அவனும்தான் ஏன் ஏமாற்றக்கூடாது? உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஏமாற்றவே முயல்கிறான். அவனோ காலை பத்து மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை எண்பது ரூபாய் சம்பளத்துக்கு அலுவலகத்தில் மாடாக உழைக்கிறான். கண்ட பலன் என்ன? மாதா மாதம் மூன்றும் வாரமே கடன் வாங்கிப் பிழைக்க வேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு அவன் மனைவி மல்லிகா வேறு தொணதொணத்தெடுத்து விடுகிறாள். "உங்களுக்கென்று ஒரு வேலை கிடைத்திருக்கிறதே! நாளைக்கு இரண்டு வேளைச் சோற்றுக்குக் கூடப் பற்றாமல்! அலுவலகத்துச் சேவகர்கள் முதற்கொண்டல்லவா இந்த எண்பது ரூபாய்க் காசை அநாயாசமாகச் சம்பாதித்து விடுகிறார்கள்! உங்களைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது!" என்பாள்.

"ஆபீஸ் பையன்களே எண்பது ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள் என்றால் அது என் தவறா?" என்று கூறிச் சிரிப்பான் சிதாம்சு.

"சிரிக்காதீர்கள். எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. நம் குழந்தைக்கு வேளா வேளை உண்ண நல்ல உணவு கிடையாது. உடுக்க உடை கிடையாது. நான் உள்ளதைச் சொன்னால் உங்களுக்குச் சிரிப்பு வருகிறதே! அடுத்த வீட்டு அமல் பாபுவைப் பாருங்கள். அவருக்கு உருப்படியான ஒரு வேலை கிடையாது. இருந்தாலும் கைநிறைய எத்தனை ரூபாய் சம்பாதித்துக் கொண்டு வருகிறார்? நீங்களும் நினைத்தால் அவரைப் போல் ஆக முடியாதா?" என்று சன்னென்று விழுவாள்.

மல்லிகாவின் இந்த வார்த்தைகள் அவன் மூளையில் எதிரொலி எழுப்பின. உண்மையில் அவள் சொல்வது சரிதானே? ஒவ்வொருவனுமே இதைத்தானே செய்கிறான்? அவன் மட்டும் ஏன் செய்யக் கூடாது? நாணயத்துக்கு எப்பொழுதுமே நல்ல பலன் கிட்டுவதில்லை! சிதாம்சுவின் மனத்தில் இப்படிச் சிந்தனை ஓடியது.

கண்டக்டர் மீண்டும் அவன் பக்கமாக வந்தான். 'டிக்கட் பிளீஸ்!' என்று கேட்டவாறே நடந்தான். சிதாம்சு தலையை ஆட்டிவிட்டு ஜன்னல் வழியே பார்க்கலானான். ஆனால் காக்கியுடைக்காரன் அவன் அருகிலிருந்து நகரும் வழியைக் காணோம். சிதாம்சுவும் அவன் அங்கிருந்து நகரும்வரை கம்பீரமாகி விட்டான். தெருவில் ஓடவிட்ட கண்களை அவனும் இலேசில் திருப்பவில்லை.

தன் கண்களைத் திருப்பாமலே கண்டக்டர் நகர்ந்து விட்டான் என்பதைக் கண்டு கொண்ட பின்னரே அவன் தன் நிலைக்கு வந்தான். அடுத்த நிமிஷமே, அதாவது தான் இறங்க வேண்டிய இடத்துக்கு முந்திய இடத்திலேயே அவன் இறங்கி விட்டான்.

சிதாம்சு இப்போது பெரு மகிழ்ச்சியில் மிதந்தான். அவன் பிரயாணக் கட்டணம் செலுத்தாமலே அல்லவா இன்று பயணம் செய்திருந்தான்! அவனாலும் ஏமாற்ற முடியும்; ஏமாற்றி வெற்றி காண முடியும் என்



பது உறுதியாகி விட்டது. இனி இப்படிச் செய்ய வேண்டியதுதான் என்று அவன் எண்ணினான். நாளடைவில் அவனும் அமல் பாபுவைப் போல 'வெற்றி காண முடியும் என்ற திர்மானத்துக்கு வந்தான்.

வழக்கம் போல் மூலைக் கடையை அடைந்தவன், தினம் போலச் சாதாரண பீடி கேட்காமல், 'இரண்டு விஸர்ஸ் சிகரெட் கொடு!' என்றான்.

சிதாம்சு சிகரெட்டுக்காக வீணில் காசு செலவிட்டதில்லை. கடைக்காரனே வியப்போடு அவனைப் பார்த்தான். சிகரெட்டுகளை எடுத்துக் கொடுத்து அவன் பெற்றுக் கொள்ளும்வரை அவன் வியப்பு அடங்கவில்லை.

அந்தப் பத்துக் காசைக் கொடுக்கும் பொழுது சிதாம்சுவுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! பெரிதாகக் கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுப்பது போன்ற உணர்ச்சி! ''தீப்பெட்டி!'' என்று கைநீட்டினான்.

'அதோ தொங்குகிறது பாருங்கள் கயிறு!' என்று சொல்லத்தான் வாயெடுத்தான், கடைக்காரன். இருந்தாலும் சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டு, தீப்பெட்டியை எடுத்து நீட்டினான்.

சிதாம்சுவுக்குச் சந்தோஷம். 'பீடி குடிப்பதாக இருந்தால் அந்தக் கயிறே போதும். இதுவோ சிகரெட் ஆயிற்றே!' என்று எண்ணம் ஓடியது.

உடனே ஒரு குச்சியைக் கிழித்துச் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். மற்றொரு சிகரெட்டைப் பையில் போட்டுக் கொண்டான். வீட்டுக்குப் போன பின் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மற்றொன்றைப் பற்றவைத்துப் புகை விடலாமே என்று மனத்துக்குள் கூறிக் கொண்டான்.

சொல்லப் போனால் கடந்த இரண்டு நாட்களாக அவன் பீடி கூடக் குடிக்கவில்லை. குடும்பத்துக்காகத் தன் சுகத்தைத் தியாகம் செய்யக் கூடாது என்று சிகரெட் போதையில் மூழ்கிய அவன் மனக் குறளி கூறியது.

பொதுவாக அவன் வீட்டுக்குள் போகும் பொழுது பூட்ஸைக் கழற்றி விடுவான். இன்று அவன் பூட்ஸ் காலுடனேயே வீட்டுக்குள் நுழைந்தான்.

மல்லிகா தன் மகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''மனிதனுக்கு நாணயம்தான் முக்கியம். வாழ்க்கையில் எத்தனைதான் இன்னல்கள் ஏற்பட்டாலும் நாணயத்தை மட்டும் விடக் கூடாது.''

சிதாம்சுவைப் பார்த்ததும் பீனு, ''அப்பா அப்பா! அப்பா வந்து விட்டார்!'' என்று கூவியவாறே எழுந்து விட்டான்.

மல்லிகா தூய்மையான புடவை உடுத்தியிருந்தாள். வெளிர் நிறப் புடவையில் ரோஜாப்பூ கலர் பார்டர். அது அவள் அழகுக்கு அழகூட்டியது. அவள் தலை வாரிக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். வகிட்டில் குங்குமம். நெற்றியில் பனிச் சென்ற பொட்டு. சாட்சாத் மகாலட்சுமியாகத் தோற்றமளித்தாள் மல்லிகா.

சிதாம்சுவைப் பார்த்ததும் மகிழ்ச்சியோடு, ''என்ன, விசேஷம்? இன்றைக்கென்று சிகரெட்? சம்பளம் கிடைத்து விட்டதா, என்ன?'' என்று கேட்டாள்.

''சம்பளம் கிடைக்கா விட்டால் நான் என்ன சிகரெட் குடிக்கக் கூடாதா?'' குரலில் கடுமை தொனிக்கக் கேட்டான் சிதாம்சு.

''நான் அப்படி எங்கே சொன்னேன்?'' குரலில் இனிமை கலந்து பதில் சொன்னாள் மல்லிகா. அதற்குச் சில கணங்களுக்குப் பிறகு அவள் செய்தி சொல்லலானாள்:

''இன்று சோனு சித்தப்பா வந்திருந்தார். உங்களை ஒரேயடியாகப் புகழ்ந்தார். உங்களைப் பற்றிப் பெருமையாக 'ஒரு ரத்தினம்' என்றே குறிப்பிட்டார்!''

சிதாம்சு சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தான். அவன் ஒன்றும் பேசவில்லை.

''எனக்கு என்ன வாங்கி வந்தாய், அப்பா?'' என்று கேட்டான் பீனு.

''அட, போக்கிரி! அப்படிக் கேட்கலாமா?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் மல்லிகா.

சிதாம்சு மாதத் தொடக்கத்தில் பீனுவுக்கு ஏதாவது பெப்பர்மிட், மிட்டாய், பிஸ்கட், ஆரஞ்சு — என்று வாங்கி வருவான். ஆனால் மாதக் கடைசியில் அவன் வெறுங் கையோடுதான் வருவது வழக்கம். மாதத் தொடக்கத்துக்கும் மாத இறுதிக்கும் உள்ள வேறுபாட்டை பீனுகூட அறிந்திருந்தான். அவன் அம்மா அதட்டவே, வெட்கிப்போய் விட்டான். அம்மாவுக்குப் பின்னால் போய் மறைந்தும் கொண்டான். கொஞ்ச நேரத்துக்குப் பின் மெதுவாக எட்டிப் பார்த்து, ''என் டிக்கட் எங்கேப்பா?'' என்று கேட்டான்.

சிதாம்சு வெறுங்கையோடு வரும்போதெல்லாம் பீனுவுக்குத் தன் டிராம் டிக்கட்டையாவது கொண்டு தருவது வழக்கம். இன்று அதுகூட அவனிடம் இல்லை. ''அப்பா! டிக்கட்டை என்கிட்டக் கொடுத்துவிடு!'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே நின்றான் பீனு.

மல்லிகா முறுவலித்தாள். ''உங்கள் சின்னக் கண்டக்டர் இருக்கிறானே, அவன் மிகக் கண்டிப்பானவன். அவன் கேட்பதைக் கொடுத்துவிடுவதுதான் நல்லது!'' என்றாள் கண்களைச் சிமிட்டி.

சிதாம்சு குரலில் காம்பீரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''என்னிடம் டிக்கட்டு இல்லையே!'' என்று கையை விரித்தான்.

''என்ன? என்ன! அப்படியானால் அலுவலகத்திலிருந்து இன்று நடந்தே வந்துவிட்டீர்களா? நடக்க நடக்க மாளாதே வழி!'' என்று கவலையோடு கேட்டாள் மல்லிகா.

சிதாம்சுவை அவளது அந்தக் கவலை வியப்பில் ஆழ்த்தியது. பரிதாபச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.


மல்லிகாவோ எதுவும் பேசாமல் தூரத்தை அளவிடுவது போல் வாசற்புறம் பார்வையை ஓட்டினாள்.

ஆனால் சிதாம்சுவுக்குச் சின்னக் கண்டக்டரிடமிருந்து விடுதலை கிடைக்கவில்லை. அவன் உண்மைக் கண்டக்டருக்கும் ஒரு படி மேலாகப் போய், ''அப்பா! உங்கள் டிக்கட்...?'' என்று நச்சரித்துக் கொண்டிருந்தான்.

['ஸாப்தாஹிக் ஹிந்துஸ்தா'னிலிருந்து : ரா.வீ.]

அவள் பெருமையுடன் போற்றும் உடைமைகளில்

ஒன்று உஷா தையல் மெஷின்...



உஷாவின் உதவியால் அவளது குழந்தைகள் தங்கள் புதிய யூனிபாரம் உடைகளில் மகிழ்ச்சியுடன் திகழ்கிறார்கள். தாய்க்கோ, அவ்வுடைகளைத் தானே தைத்துக் கொடுத்த பெருமை. உஷா வாங்குவது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு. மேலும் அதிகமான புதிய உடைகளை குறைவான செலவில் தைக்க உதவுகிறது.


இது தவிர ஓய்வு நேரத்தை உத்ஸாகமாகக் கழிக்கவும் அற்புதமான வாய்ப்பு. தொந்தரவற்ற உஷாவில் தைப்பதே ஓர் ஆனந்தம். இதன் காரணமாகவே ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலுள்ள மாதர்கள் உஷா வாங்கி வைத்துக் கொள்வதில் பெருமையடைகிறார்கள்.

கலாசாரீக முறையில் தைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். நாடு முழுவதிலும் 1200க்கு மேற்பட்ட உஷா எம்ப்ராய்டரி, தையல் பள்ளிக்கூடங்களும் 2400க்கு அதிகமான உஷா விற்பனை மற்றும் ஸர்வீஸிங் கேந்திரங்களும் உள்ளன.

சுலபமாகத் தைக்கலாம்—

உஷா

விக் தையுங்கள்



ஒரு JAY தயாரிப்பு

ஜே என்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா - 31

மங்காவின் அழைப்பை ஏற்றுக் காளியண்ணன் சென்றான். மங்கா மரத்தடியில் அமர்ந்தாள். அவனெதிரே ஒரு கல்லில் உட்கார்ந்து கொண்டான் காளி.

''சாப்பிடு'' என்று சோற்றுத் தட்டை அவனெதிரே வைத்த மங்கா பாத்திரத்திலிருந்து ஒருபிடிச் சோற்றை அள்ளி எடுத்துக் கொண்டாள்.

காளியண்ணன் ஒன்றும் பேசவில்லை. மௌனமாகத்தான் எதிரேயிருந்த சோற்றில் ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

மங்கா பசி மிகுதியில் பாத்திரத்தில் மிச்சமிருந்த சோற்றை அள்ளி அள்ளிச் சாப்பிட ஆரம்பித்தாள். அவனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த காளி சட்டென்று மௌனத்தைக் கலைத்தான்: ''மங்கா, நான் எதுக்கு வந்திருக்கேன்னு நீ கேட்கவே இல்லையே.''

''ஆமாய்யா, கேக்க மறந்திட்டேன். டூட்டி இல்லாத நாளைக்கு நீ மதகுக் கரையிலே மீன் பிடிக்கத்தானே போவே! இன்னிக்கு மீனெல்லாம் உன்னைக் கண்டு ஓடிடுச்சா?''

''கேலியா இருக்கா உனக்கு? எவ்வளவு கோவத்தோடே நான் இங்கே வந்திருக்கேன்னு உனக்குத் தெரியாதில்லே....?''

''ஆமாம், நீ கோவமாயில்லாமே குணமாயிருந்த நாள்தான் என்னிக்கு?''

''மங்கா, நீ இங்கே வந்து வேலை செய்யறது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலே'' என்றான் காளி.

''எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றாள் மங்கா.

''ஏட்டிக்குப் போட்டி பேசி என் கோவத்தை அதிகப்படுத்தப்போறயா?''

''உன் கோவத்துக்கு நான் பயந்து கிடக்கேன்னு நெனைச்சியா?''

''மங்கா, எம் மனசு எப்படிக் கொதிச்சுக்கிட்டிருக்குன்னு உனக்குத்

முதல் பரிசு
நாவல்



தெரியாது. என் பேச்சைக் கேக்காம, என்னைக் கொஞ்சம்கூட மதிக்காம இந்த வேலைக்கு வந்திருக்கியே, உனக்கு என்ன நெஞ்சழுத்தம் இருக்கணும்?''

''நெஞ்சழுத்தம் இல்லேய்யா, வயித்துப் பசி. ரெண்டு பேர் வயித்துக்கு யாராவது ஒருத்தர் வேலை செய்துதானே ஆகணும்?''

''நீ செய்யவேண்டியவேலையா இது?''

''ஏன், புதிசா ஒண்ணும் செய்திடலேயே. மாசக்கணக்கா ஆத்தா செய்துக்கிட்டிருந்த வேலைதானே இது.''

''ஆத்தா மாதிரித்தானா நீயும்? வயசுப் பொண்ணு இங்கெல்லாம் வந்து வேலை செய்யறதாவது!''

''நான் ஒரு பொண்ணுதானா இங்கே வேலை செய்யறேன்? என்னைப் போலே எத்தனையோ பொண்ணுங்க.''

''மத்தப் பொண்ணுகளும் நீயும் ஒண்ணாயிட முடியுமா மங்கா?'' என்று காளி உண்மையான கனிவுடன் கூறியதும் மங்கா சிரித்து விட்டாள்.

''ஏன்? எனக்கென்ன? தலையிலே கொம்பா மூளைச்சிருக்கு?'' என்றாள்.

காளியண்ணனுக்குச் சட்டென்று கோபம் வந்தது. ''உனக்குத் தலையிலே ஏதாவது இருந்தா, இதுக்குள்ளே என் மனசைப் புரிஞ்சிக்கிட்டிருப்பே!''

''உம் மனசை நான் ஏன் புரிஞ்சிக்கிடணும்?''

காளியண்ணனின் கண்கள் இன்னும் பயங்கரமாகச் சிவந்தன. ''மங்கா! மறுபடியும் மறுபடியும் என் கோவத்தைக் கிளப்பிவிடறமாதிரியே பேசிக்கிட்டிருக்கே நீ!'' என்று சீறினான்.

''நல்ல ஆளய்யா நீ. என்கூடச் சண்டை போடறதுக்குத்தான் வேலை மெனக்கிட்டு உச்சிக் கடவிலிருந்து வந்திருக்கயா?''

''ஆமாம், சண்டை போடத்தான் வந்திருக்கேன். உன்னை வேலை செய்ய வொட்டாமே அடிச்சுக் கரகரன்னு இழுத்துக்கிட்டுப் போகலே, எம்பேரு காளி இல்லே.''

''அப்படியெல்லாம் சொல்லாதே, வள்ளியண்ணே. நீ பேரை மாத்தி வைச்சுக்கிட்டா ஒலகம் தவிச்சுப் போயிடுமே'' என்று மங்கா போலி பயத்துடன் கண்களை உருட்டிக்கொண்டு கூறியதும் காளியண்ணனின் எரிச்சல் எல்லையை மீறியது.

''சேச்சே...சுத்த மோசம். போக்கத்துப் போய் உன்கூடப் பேச வந்தேன் பாரு, என் புத்தியைத்தான் செருப்பாலே அடிச்சுக்கிடணும்'' என்று கூறிச் சட்டென்று எழுந்தான்.

''தட்டிலே போட்ட சோறு அப்படியே இருக்கேய்யா......''

''சோறும் சோறு. யாருக்கு வேணும் உன் சோறு'' என்று உறுமிக்கொண்டே காளி அங்கிருந்து நடக்க ஆரம்பித்தவுடன் மங்கா, ''உனக்கு வேண்டாம்னு நான் சாப்பிட்டுடவா ?'' என்றாள்.

''சாப்பிடு, சாப்பிடு'' என்று எரிச்சலுடன் கூறிய காளி வேகமாக அங்கிருந்து நடந்தான். பத்தடி சென்ற பிறகு அவன் திரும்பிப் பார்த்தபோது மங்கா தட்டிலிருந்த சோற்றை அள்ளி அள்ளிச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு அவன் மனத்தில் ஆத்திரம் மூண்டது.

''ஏன்தான் இவ இப்படி இருக்காளோ?'' என்று முணுமுணுத்தவாறு மேலே நடந்தான் காளி.

உண்மையிலேயே அப்போது அவனுக்குப் பசியெடுக்க ஆரம்பித்திருந்தது. ஆனால் தோல்வியை ஒப்புக் கொண்டு



முள்ளும் மலரும்

உமாசந்திரன்

உடனே வீட்டுக்குத் திரும்பிவிட அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. வெற்றியை எதிர்பார்த்து வந்திருந்தானு என்றால் அதுவும் இல்லை. பின் எதற்காக அவன் அங்கேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்? காலாகாலத்தில் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியதுதானே ? ஆனால் அவனுடைய மனக் குரங்கு தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க மறுத்தது.

மறுபடியும் வேலை ஆரம்பிப்பதற்கான சங்கு ஒலித்தது. அங்கங்கே சிதறிக் கிடந்த தேனீக்கள் மறுபடியும் சுறுசுறுப்படைந்து ஒன்றுகூடியியங்க ஆரம்பித்தன. மீண்டும் மங்காவின் திசையில் திரும்பிப் பார்த்தான் காளி. தூக்குப் பாத்திரத்தைக் கையில் எடுத்துச் சுழற்றிக் கொண்டு மங்கா வேலைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருப்பது தெரிந்ததும் ஒரு பெருமூச்சுடன் மேலே நடக்க ஆரம்பித்தான்.

பவர்ஹவுஸ் பகுதியிலிருந்து சற்று ஒதுங்கினாற் போல் நிழற் பாங்கான ஒரு சிற்றோடையின் கரையில் ஒரு தகரக் கொட்டகை போட்டுக் கொண்டு சங்கர குருப் நடத்தி வந்த டீக்கடை இருந்தது. பகல் வேளைக்குக் கையோடு சாப்பாடு எடுத்து வர வசதியில்லாத தொழிலாளிகளுக்கு அந்த டீக்கடை தான் பசியாற்றும் அமுதசுரபியாக இருந்து வந்தது. மற்ற டீக்கடைகளைப் போல் காய்ந்த புரை ரொட்டியையும், பன்னையும் கொடுத்து டீ வியாபாரம் செய்வதோடு சங்கர குருப் திருப்தி அடைந்து விடுவதில்லை. தொழிலாளிகளின் பசியறிந்து அந்த வேளைக்குச் சூடாக ஏதாவது சித்திரான்னமோ, இட்டிலியோ உப்புமாவோ தயார் செய்து வைத்திருப்பான். அந்த அரை மணி நேரத்தில் அவனுக்கு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் வியாபாரம் ஆனதில் ஆச்சரியம் இல்லை.

கால் இழுத்த போக்கில் நடந்து சென்று காளியண்ணன் அந்த டீக் கடையை அடைந்த போது அன்று தயாரான சிற்றுண்டிகளெல்லாம் அறவே தீர்ந்து விட்டிருந்தன. தொழிலாளரின் பசிக்குத் தப்பி அங்கு மிஞ்சியிருந்தவை இரண்டு காய்ந்த ரொட்டிகளும் ஒரு பழமும்தான். ஆனால் காளியண்ணன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. சங்கரகுருப் அவற்றைத் தட்டில் போட்டுக் கொண்டு வந்து வைத்ததும் யந்திரம்போல் அவற்றைச் சாப்பிட்டுத் தீர்த்தான். அடுத்து வந்த டீயையும் அதே போன்று லயிப்பில்லாமலே குடித்து முடித்தான். பின்பு ஒரு மூலையில் சங்கர குருப் தொங்க விட்டிருந்த கயிற்றுச் சுருளின் நுனியில் கனிந்து கொண்டிருந்த நெருப்பில் பீடியையும் பற்ற வைத்துக்கொண்டு அதைப் புகைத்தவாறு அங்கேயே ஒரு பெஞ்சியில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான்.

இப்போது அவன் மனம் ஓரளவு சாந்தம் அடைந்திருந்தது. நெடு நேரம் கழித்து நெஞ்சிலேறிய பீடிப் புகை அவனுக்கு இதமா யிருந்தது.

''இருக்கட்டும், அந்த மங்காவைச் சரியானபடி பழி வாங்கறேன்'' என்று நினைத்தவாறு எழுந்து மீண்டும் அந்த வாகை மரப் பகுதியை நோக்கிச் சென்றான்.


இப்போது ஜல்லியை வாரிக் கூடைகளில் கொட்டுவதற்கு வேறோர் ஆள் அங்கு வந்து விட்டிருந்தான். முந்திய ஆளைவிட இவன் சற்று முரட்டு ஆசாமி என்று பார்த்தாலே தெரிந்தது. சிற்றாள் பெண்களிடம் அவன் நடந்து கொண்ட முறையும் எரிச்சலூட்டுவதா யிருந்தது. ஒவ்வொரு கூடையிலும் அதிகப்படியான ஜல்லிக் கற்களை அள்ளிப் போட்டுச் சிற்றாட்கள் அவற்றைத் தூக்கக் கஷ்டப்படுவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான் அந்த ஆசாமி.

''இருக்கட்டும். மங்காகிட்டேயும் இப்படியே நடந்துகிட்டால் தகுந்தபடி விசாரிக்கறேன்'' என்று மனத்தில் கறுவிக் கொண்டான் காளி.

ஆனால் மங்கா வரவே யில்லை. ஜல்லிக் கூடைகளைத் தூக்கிச் செல்வதற்கு வேறு சிற்றாள் பெண்கள் திரும்பத் திரும்ப வந்து போய்க் கொண்டிருந்தார்களே ஒழிய மங்கா வரும் வழியாயில்லை. ஒரு வேளை வேறு ஏதாவது பகுதியில் வேலை செய்வதற்கு அவளை அனுப்பிவிட்டார்களா, என்ன?

மேஸ்திரியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அந்தத் திசையை நோக்கிச் சென்றான். ஜல்லிக் கூடைகளைச் சுமந்து நின்ற பெண்கள் இருபது முப்பது கஜ தூரத்துக்கப்பால் அமைக்கப்பட்டிருந்த கலவை யந்திரம் ஒன்றில் ஜல்லியைக் கொட்டிவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். கட்டைச் சுருட்டு ஒன்றைப் பிடித்துக் கொண்டு அங்கு நின்றிருந்த மேஸ்திரியைக் கண்டதுமே காளியண்ணன் புரிந்து கொண்டான். நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் கருளியாற்றில் அணைக்கட்டு வேலை நடந்து கொண்டிருந்த போது இதே மேஸ்திரி

அவ்வளவு சிறந்தது, இந்த விலைச் சீட்டை அணியத் தகும் !



...ஆனாலும் நிர்ணய விலை ரூ.50 க்குள் தான்

இதோ ஒரு முதல்தரமான, மிகவும் நம்பத் தகுந்த ஆக்பா காமிரா. வாங்கிய நாள் முதலே அது உங்களுக்கு வெற்றியைத் தேடித் தருகிறது. ஏனெனில் படமெடுக்க வேண்டியவற்றை நோக்கி காமிராவைப் பிடித்து ஷட்டரை அமுத்தினால் போதும்—கணக்கிடும் தொல்லையோ, குழப்பமோ இல்லை. '120' சைஸ் சுருள் பிலிமிலே அது 12 பெரிய (6 x 6 செ.மீ.) படங்களை எடுக்கிறது. ரூ. 46.50 க்கு அது உங்களுடையதாகிறது. (உள்ளூர் வரிகள் தனி) நீடித்த மனத் திருப்திக்கு ஒரு ஆக்பா கிளிக் III வாங்குங்கள். பிரபல போட்டோக் கடைகளில் கிடைக்கிறது

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
நி கியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை

Agfa®

கிளிக் III

12 படங்களை எடுக்கும்
சிக்கனத்திற்கு
அகில உலகப் பிரசித்தி
பெற்ற காமிரா

CMAI-85 TM



''உங்களிடம் புத்தகங்கள் இரவல் வாங்கிக்கொண்டு போனேனே! என்ன சார் தற்கால எழுத்தோவியம் வேண்டியிருக்கு! படிச்சால் அப்புறம் மறந்து போய் விடுறதே !''

''திருப்பிக் கொடுக்கிறதற்கா?''

சாதாரணக் கொல்லத்து மேஸ்திரியாகத்தான் அங்கு வந்து சேர்ந்திருந்தான். இப்போது பதவியும் வருமானமும் உயர்ந்து விட்டன என்பதை அவன் அணிந்திருந்த வெள்ளைச் சட்டையும் கைவிரல்களில் டால் வீசிய மோதிரங்களும் பறைசாற்றினவே !

மேஸ்திரி அவனைப் புரிந்து கொள்ளவில்லை. '' யாரய்யா..... என்ன வேணும்....?'' என்று கேட்டான் அவனைப் பார்த்ததும்.

''இங்கே மங்கான்னு ஒரு சித்தாள் பொண்ணு....'' அதைக் கூறுவதற்கே அவனுக்குக் கஷ்டமாயிருந்தது.

''யாரு ? வெடுக்கு வெடுக்குன்னு துடுக்குத்தனமாப் பேசுமே அந்தப் பொண்ணுதானே? அவங்க ஆத்தாவுக்காக நான் அதை வேலையிலே சேர்த்துக்கிட்டேன். அது என்னடான்னா நம்மை நட்டாத்திலே நிறுத்திடும் போலேயிருக்கு.''

''என்ன நடந்திச்சு ?''

''ஒண்ணும் நடக்கலே. சாப்பாட்டு நேரம் வரைக்கும் ஒழுங்காத்தான் வேலை செய்துக்கிட்டிருந்திச்சு. அதுக்கப்புறம் என்ன நெனைச்சுக்கிட்டுதோ, தெரியலே, அரை நாள் லீவு வேணும்னு அடிக்க வராப்பலே கேட்டுது. குடுக்க முடியாதுன்னு சொன்னேன். லீவு குடுக்கல்லேன்னு வேலையிலேர்ந்தே நின்னிக்குவேன்னு பயம் காட்டிச்சு. நின்னு நிக்கட்டுமே, நமக்கா நட்டம்! ஆனா அது அறியாப் பொண்ணு. ஆத்தா வேலைக்கு வர முடியாமத்தானே அது வந்திருக்கு, பாவம்! அது மொறைக்கிற மாதிரியே நாமும் மொறைச்சுக்கிட்டா எப்படி ? கொஞ்ச நாளைக்கு விட்டுப் பிடிக்க வேண்டியதுதானே. சரி, போய்த் தொலைன்னு லீவு குடுத்து அனுப்பிட்டேன்'' என்று சளசளவென்று நிறுத்தாமல் பேசிய அந்த மேஸ்திரி அதற்குள் அணைந்து விட்டிருந்த சுருட்டை மீண்டும் பற்ற வைப்பதில் முனைந்தான்.

காளி அதற்கு மேலும் அங்கு நிற்கவில்லை. மனத்தில் துளிர்விட்ட நம்பிக்கையுடன் வேகமாக அங்கிருந்து நடந்தான்.

மங்கா மேஸ்திரியிடம் அரை நாள் லீவு வேண்டுமென்று பிடிவாதமாகக் கேட்டு வாங்கிக் கொண்டாளே ஒழிய நேரே வீட்டுக்குப் போய்விடவில்லை. உண்மையில் அன்று லீவு வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே முதலில் அவளுக்குக் கிடையாது. சாப்பாட்டு நேர முடிவைக் குறிக்கும் சங்கு ஒலித்ததுமே அவள் மறுபடியும் தன்னை வேலைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டுதான் சென்றாள். சாப்பாட்டுப் பாத்திரத்தை அதற்குரிய இடத்தில் வைத்து விட்டுத் தலையில் சும்மாடு கட்டிக் கொண்டு கையில் பிடித்த காலிக் கூடையுடன் அவள் ஜல்லியைச் சுமந்து வரப் புறப்பட்டு விட்டாள். இரண்டு மூன்று கூடைகள் ஜல்லியைச் சுமந்து வந்து கலவை யந்திரத்தில் கொட்டவும் கொட்டினாள்.

அடுத்த நடைக்காக அவள் சென்று கொண்டிருக்கும்போது நடு வழியில் இன்னொரு பெண் சிற்றாள் அவளைத் தடுத்து நிறுத்தி வைத்துப் பேச்சுக் கொடுத்தாள்.

''ஏன் மங்கா, உன்கூட மரத்தடியிலே உக்காந்து பேசிக்கிட்டிருந்தாரே, ஒத்தக்கை ஆளு — உச்சிக்கடையிலே டிராலி ஒட்டற ஆளுதானே அவரு?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; அதுக்கென்ன?''

''ஒண்ணுமில்லே, அவருக்குக் கை போயிடுச்சுங்கற சமாசாரத்தை நான் கேள்விப் பட்டிருக்கேன். இவருக்குக் கையில்லாததைப் பார்த்ததும் சந்தேகம் தட்டிச்சு.''

''இப்ப சந்தேகம் நீங்கிடுச்சில்லே?'' என்றாள் மங்கா.

''அது சரி, அவருக்கு நீ சாப்பாடு ஒண்ணும் குடுக்கலியா? ஓடைக்கரை முக்கடையிலே உட்கார்ந்து அங்கே மிச்

சம் மீந்தது எதையோ சாப்பிட்டுக் கிட்டிருந்தாரே?'' என்றாள் அந்தச் சிற்றாள்.

''அப்படியா? அங்கே போய் ஏன் சாப்பிடுது? இந்நேரம் வீட்டுக்குப் போயிருக்கும்னு நெனைச்சேனே.''

''ஒருவேளை உனக்கு வேலை முடியற வரையிலே இங்கேயே சுத்திக்கிட்டிருக்க ணும்னு திட்டம் போட்டிருக்காரோ என்னவோ?'' என்று கண்ணைச் சிமிட் டியவாறு அந்தச் சிற்றாள் தலைச் சுமை யுடன் அங்கிருந்து நடந்தாள்.

மங்காவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. காளியண்ணன் எதற்காக அங் கேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்? மாலையில் அவளுக்கு வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் சமயத்தில் அவ ளுடன் வந்து வம்பு கொடுத்தால் தொந்தரவாயிற்றே. மற்றவர்களைப் பற்றி அவளுக்கு லட்சியம் இல்லை யென்றாலும் நாலு பேர் எதிரில் வீண் தகராறு எதற்காக?

அவள் வேலை செய்து கொண்டிருக் கிறாள் என்று காளியண்ணன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு ''டிமிக்கி'' கொடுத்து விட்டுப் போய் விட்டால் என்ன? மாலையில் காளி யண்ணனுக்கு அதனால் ஏற்படும் ஏமாற் றத்தை நினைத்துப் பார்த்து மங்காவுக் குச் சிரிப்பாக வந்தது. எல்லோரும் வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்போது காளியண்ணன் மூலைக்கு மூலை அவளைத் தேடித் திரிவான். அவளை எங்கும் காணவில்லை என்றதும் அவனுக்குக் கோபம் கோபமாக வரும். எரிச்ச லும் புகைச்சலுமாக உச்சிக்கடவுக்குத் திரும்பி வருவான். அவளைப் பழி வாங்குவதற்காக அவளுடைய குடி சைக்கே அவளைத் தேடிக் கொண்டு வந்தாலும் வருவான். வரட்டுமே, அவளுக்கென்ன பயமா?

அரை நாளுக்கு லீவு எடுத்துக் கொள்ளலாமா என்ற எண்ணம் அப் போதுதான் அவள் மனத்தில் தோன் றியது. ஜல்லி அள்ளிப் போடும் ஆள் வேறு அந்த எண்ணத்தை வலுப்படுத்து வதுபோல் நடந்து கொண்டான். அவள் தூக்க வேண்டிய கூடையில் விளிம்பு வரை அவன் ஜல்லியை அள்ளிக் கொட் டியதைப் பார்த்தபோது மங்காவுக்குக் கோபம் வந்தது.

''இவ்வளவு அள்ளிப் போட்டா என்னாலே தூக்க முடியாதய்யா, பாதி எடுத்திடு.''

''சம்பளம் பாதி குடுத்தா வாங் கிக்குவியா?''

''ஏய்யா, நீதான் எனக்குப் படியளக் கறியா? பாதி எடுக்கச் சொன்னா எடுக்க வேண்டியதுதானே?''

''எடுக்க முடியாது.''

''நீ எடுக்காட்டி நான் கொட்டிக் கறேன்'' என்று கூடையைச் சரித்துப் பாதி ஜல்லியைக் கொட்டப் போனாள் மங்கா.

அந்த ஆள் கூடையின் மறுபக்கத் தைப் பிடித்துக்கொண்டான். ''தொட் டக்கூடாது. நான் அள்ளிப் போட் டதை அப்படியே தூக்கிக்கிட்டுப் போகணும்.''



சுதந்திரப் போராட்ட நாட்க ளில் நேருஜி கிராமம் கிராமமா கப் பல சந்தர்ப்பங்களில் சென்று பிரசாரம் செய்திருக்கிறார் என் பது நாம் அறிந்ததே. ஒரு சமயம் காலை எட்டு மணிக்கு அவர் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதன் பிறகு அன்றைய தினம் ஆறு பெரிய பொதுக் கூட்டங் களில் பேசினார். இவை தவிர பல சிறிய கூட்டங்களில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி னார். இந்த வரிசையில் அவரு டைய கடைசிச் சொற்பொழிவு மறுநாள் காலை நாலு மணிக்கு நடைபெற்றது. இதன் பிறகு ஓய்வெடுத்துக் கொள்ள அவர் தமது இருப்பிடத்துக்கு எழுபது மைல் பிரயாணம் செய்து போக வேண்டியிருந்தது! அவ்விடத் துக்குக் காலை ஏழு மணிக்கு வந்து சேர்ந்தார். ஆக, அன்று அவர் சேர்ந்தாற்போல் 23 மணி நேரம் உழைத்திருந்தார். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவர் அடுத்த நாளைய அலுவல்களைக் கவனிக்கத் தயாராக இருந்தார்!

(கேம்பிரிட்ஜில் முதல் நேரு நினைவுச் சொற்பொழிவில் பட்லர் பிரபு கூறியது.
-நவம்பர் 10, 1966)

''அதிகாரம் தூள் பறக்குதே! நீயே மேஸ்திரின்னு நெனைச்சிக்கிட்டயா?''

''மேஸ்திரிதான் சொல்லி யனுப்பிச்சாரு. இத்தனை ஆளுங்க குறுக்கும் நெடுக்கும் நடந்தும் மெஷினுக்கு ஜல்லி ஒழுங்கா வந்து சேரலேன்னு திட்டுறாரு.''

''அவரு என்ன வேணும்னாலும் திட்டட்டும். இவ்வளவு ஜல்லி என்னாலே தூக்க முடியாது. அவ்வளவுதான்.''

''இதெல்லாம் என்கிட்டச் சொல்லிப் பிரயோசனமில்லே. மேஸ்திரிகிட்டே போய்ச் சொல்லிக்க.''

''சொல்லிக்கறேன், சொல்லிக்கறேன். உன்னைப் போலே மேஸ்திரிக்குக் கொடை பிடிக்கற நாலு ஆளுங்க இருந்திட்டா உருப்பட்டுப் போயிடும்'' என்று முணு முணுத்தவாறு மேஸ்திரியிடம் சென்றாள் மங்கா.

''இந்தப் பாருங்கய்யா. இந்த ஜல்லி தூக்கற வேலையை இனிமே எனக்குக் குடுக்காதீங்க. வேறே எந்த வேலை யாச்சும் குடுங்க.''

''அதெல்லாம் உன் இஷ்டமா? நாங்க குடுக்கிற வேலையைத்தான் நீ செய்யணும்.''

''வேலை செய்யத்தானேய்யா வந்திருக்கோம். அதுக்காக ஒரே நாள்லே இடுப்பை ஒடிச்சு அனுப்பிட்டா மறு நாளைக்கு வேலைக்கு வரவேண்டாமா?'' என்றாள் மங்கா.

''ஜல்லி கொட்டற வேலையைத் தவிர வேறே வேலை கைவசம் இல்லையே இப்போ.''

''அந்த ஆளையாவது மாத்தித் தொலையுங்க. அவன் கூட என்னாலே மல்லுக்கு நிக்க முடியாது.''

மங்காவின் வார்த்தைகளை மேஸ்திரி வேறுவிதமாகப் புரிந்து கொண்டான்.

''இதோ பாரம்மா, இந்த வேலைக்குன்னு வந்திட்டா இதெல்லாம் பாத்தா முடியாது. ஒவ்வொருத்தன் ஒவ்வொரு மாதிரிதான் இருப்பான். ஆளுக்குத் தகுந்த மாதிரி நீதான் சாமர்த்தியமா நடந்துக்கிடணும். தெரியுதா?'' என்று சிரித்தான் மேஸ்திரி.

''அந்தச் சாமர்த்திய மெல்லாம் எனக்கு வராதய்யா. ஒண்ணு வேறே வேலை குடுங்க. இல்லாட்டி அரை நாள் லீவு குடுங்க.''

''என்ன புள்ளே விவரம் தெரியாமே பேசறே. கேக்கறவங்களுக்கெல்லாம் லீவு குடுத்து அனுப்பிட்டா எங்க வேலை நடந்தாப்பலேதான்'' என்று கூறியவாறே சுருட்டைப் பற்ற வைத்தான் மேஸ்திரி.

''இதோ பாருங்கய்யா. அந்த ஆளு அங்கே இருக்கிறவரையிலே எனக்கு வேலை செய்யப் புடிக்காது. ஏதோ மரியாதைக்காக உங்க கிட்ட லீவு கேக்கறேன். குடுத்தாக் குடுங்க, இல்லாட்டி நானே எடுத்துக்கிட்டுப் போயிடுவேன். நாளையிலேந்து வேலைக்கு வராதேன்னு சொல்லப் போறீங்க. அவ்வளவுதானே. இந்த வேலை இல்லாட்டி இன்னொரு வேலை!'' என்று கூறிய மங்கா தலைச் சும்மாட்டை அவிழ்த்து உதறிப் போட்டுக் கொண்டாள்.

மங்காவின் பேச்சைக் கேட்டு மேஸ்திரிக்குக் கோபம் வரவில்லை. சிரிப்புத்தான் வந்தது. வாழ்க்கையில் அடிபட்ட ஆள். அன்பும் அனுதாபமும் அவன் நெஞ்சிலிருந்து ஒரேயடியாக வறண்டு போய்விடவில்லை. வெள்ளாத்தாள் அவனிடம் வேலை செய்து கொண்டிருந்த போது தன் மகளைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டு அடிக்கடி அவனிடம் அங்கலாய்த்திருக்கிறாள். அவள் விவரித்ததிலிருந்து உடம்பு வணங்கி வேலை செய்தறியாத பெண் என்றுதான் அவன் மங்காவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் மங்கா வேலையில் வந்து சேர்ந்த பிறகு அவன் அந்த அபிப்பிராயத்தை அடியோடு மாற்றிக் கொள்ளும்படி ஆகிவிட்டது. மற்ற எல்லாச் சிற்றாட்களையும் விட மங்காதான் ஒரு நிமிஷம்கூட வீணாக்காமல் உடம்பு வணங்கி உழைத்தாள் என்பதை அவன் நேரில் காண முடிந்தது. அவளுடைய வஞ்சனையற்ற உழைப்பை இழந்துவிட அவன் மனம் இணங்கவில்லை. அப்போதைக்கு விட்டுப் பிடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று தீர்மானித்தான்.

ஆனால் மங்கா அவனுடைய அனுமதிக்காகக் காத்திருக்கவில்லை. சாப்பாட்டுப் பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்படத் தயாராகி விட்டாள்.

மேஸ்திரி சுருட்டைப் புகைத்துக் கொண்டே அவளருகில் வந்தான். ''மங்கா, நீ என் பொண்ணு மாதிரி. உங்காத்தா உன்னைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கா. அறியாத பொண்ணு தானே, அனுபவம் பத்தலே உனக்கு. எல்லாம் போகப் போகச் சரியாயிடும். இன்னிக்கு மனசு புடிக்கல்லேன்னா பரவாயில்லே. அதுக்காக நாளைக்கும் மட்டம் போட்டுடாதே. ஒழுங்கா வேலைக்கு வந்திடு'' என்றான்.

'இருக்கட்டும். அந்தப் பழனிப் பயலைச் சரியானபடி கண்டிச்சு வைக்கறேன்' என்று அதே சமயத்தில் தன் மனத்தில் நினைத்துக் கொண்டான் மேஸ்திரி.

(தொடரும்)


உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
Perfumed Castor
HAIR OIL
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத்
துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின்
ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க்
கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்
டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்
பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்
திருக்கின்றனர். அதன் உன்னதமான நறு
மணத்திலுல் நீங்கள் பரவசமடைவீர்கள்...
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள்
கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்
களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர்
விரும்புவர்!
எகானமி சைஸ்
வாங்கி பணத்தை
மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கூந்தலுக்கு அழகும் நறுமணமும் சேர்க்க ரோஸ், லவண்டர்,
மல்லிகை ஆகிய 3 வசீகரிக்கும் சுகந்தங்களில் கிடைக்கிறது.
CCHO-G-6.TAM.



காற்றினிலே வரும் கீதம்

ரா. கணபதி

குரு தந்த ராமநாமச் செல்வத்தைப் புகழ்ந்து கானம் செய்தாள் மீரா:

நாம ரத்தினத்தை அடைந்தேன்

மதிப்பிடவொண்ணு சேமநிதியதனை
கதிகாட்டும் சத்குரு கருணையுடன் அளிக்க (நாம)

ஜன்ம ஜன்மங்களுக்கும் குன்று மூலநிதியை
ஜகம் முழுதும் தந்து வாங்கி விட்டேன் (நாம)

செலவு செய்திடினும் செல்லாத செல்வமது
களவு போகாதது கணந்தோறும் வளர்வது (நாம)

சத்தியப் படகினை சத்குரு வலித்தார்
சம்சாரக் கடலைக் கடத்துவித்தார் (நாம)

மீராவின் பிரபு கிரிதர நாகரனின்
மாறுப் புகழ் பாடி மகிழ்ச்சியில் அமிழ்வேன்
(நாம)

தன் நாவுக்கினித்த நாமத்தின் பெருமையைப் பல படித்தாக ஏத்தினாள்:

ராமநாமம் எனும் சர்க்கரைக் கட்டியே!
தேமதுர அமுதே! நாவினில் உறைவாய்!

ராமன் திருப் பெயரைக் காமமுடன் பழிக்க
உப்பற்ற உணவாய்ச் சப்பிட்டது உலகம்

ராகவன் குணங்களை ராகத்துடன் இசைக்கும்
சிலமறிந்தோரிடம் காலனும் வருவானோ?

வையகமே, மீரா ஆணையினைக் கேட்டு
ஐயன் நாமத்தைச் சொல்லி அடியினை
அடைவாய்

ஜன்மாவுக்குப் பூரணத்துவம் தருவது நாமம்தான் என்று கண்டு கொண்ட மீரா மற்றவர்களும் முழுமை பெற அந்த வழியைக் காட்டினாள்:

ஹரி நாமம் அதனை
அறியாப் பிறவி வீண்

தீபமில்லாத தேவாலயம் போல்
நிலவு இல்லாத நீல வானம் போல்
லவணம் இல்லாத உணவது போல
காந்தன் இல்லாத காமினியைப் போல்
சேயினை இழந்த தாயவள் போல
வேரினை இழந்த தருவினைப் போல
நீரினை இழந்த நீரஜம் போல
பெயரினை இழந்த பிறவியும் வீணே

என்று நாம மாகாத்மியத்தை எடுத்தியம்பினாள். இனி எது எப்படிப் போனாலும், யார் என்ன சொன்னாலும் பொருட்டில்லை என்கிற பாவனையில் வீறு கொண்டு பாடினாள்:

ஹரி நாமத்தை அறிந்து மனம் நிறைந்தேன்
புரியா உலகினைப் புறக்கணித்து விட்டேன்

தைத்தது இதயத்தில் சத்தியத்தின் பெயர்
பைத்தியமென்றுலகு பரிகசித்தாலென்ன?

மாமந்திரமது செவியில் சிந்தியவுடன்
சாமனன் எந்தன் முன் ஸ்வச்சமதாய் நின்றான்

தெளிவுற வழியினைக் குருபரன் காட்டிட
எளிமையினைத் தொட்டேன் அரசபோகம் விட்டேன்

என்று தனக்குக் கிட்டிய மந்திரோபதேசத்தையும், அந்த மகோன்னதத்தால் தனக்குக் கிட்டிய எளிமையையும் வியந்து பாடினாள். உன்னதம் செய்கிற அதிசயம், அந்த உன்னதத்தை எய்தியவர் தாழ்ந்து பணிந்துவிடுவதுதானே? உன்னதத்தை எய்தும் மேகம் கனத்தவுடன் பாருக்கு மழையாக இறங்கி வர வேண்டியதே இயற்கை விதி அல்லவா? மெல்லிய மலர்கள் கனத்துக் கனியானவுடன் கிளை வணங்கித் தழைந்துவிட வேண்டியதே பிரகிருதி நியதி அன்றோ? தாரஸ்தாயியில் சஞ்சரித்து ஓர் உச்சத்தைத் தொட்டவுடன் மந்தரஸ்தாயியின் நாதக் குழுறலில் தோய்வதே அல்லவா சௌந்தரிய லட்சணம்? உச்சத்தை அடைந்த மீரா எளிமையில் நிறைவு பெற்றாள். நாலுவண்ண பேதங்களும் கலந்து எளியதொரு தெளிவாக, வெண்மையாக மாறிவிடுவது போல் பலப்பல அநுபவ ஆனந்தங்களும் ஒன்று சேர்ந்து எளிமை என்ற ஒன்றாக ஆகிவிட்டது. ஒரே பொருளாகி விடும்போது பார்ப்பது, பார்க்கிறவர், பார்க்கும் வஸ்து எல்லாம் எது? அப்போதுதான் உட்பார்வையில் பாராது பார்க்கும் பரமாநுபவம் வாய்க்கிறது. இது வரை பல முறை சியாமளனைக் கண்டுள்ள மீரா உபதேசம் பெற்றவுடன் அவனை ஸ்வச்சமாகப் பார்த்தது இந்தப் பாராத பார்வை நிலையில்தான். அதையும் பாடினாள் மீரா.

குருபெருமானின் திருவடி தன்னில்
பொருந்தியதென் மனம் திரும்பவொண்ணாமல்

குலகுரு கழலே கதியெனக் கொண்டேன்
உலகம் யாவும் வெறும் கனவெனக் கண்டேன்

கடலாம் பவமும் காய்ந்து உலர்ந்தது
கடந்து செல்வது இனிக் கடினமில்லையம்மா

மந்திரப் பொருளின் மகிமையில் நயனங்கள்
அந்தர் முகம் கமல உள்ள வெளியதனில்
மீராவின் பிரபு கிரிதர நாகரனை
பாராது பார்த்து நான் பரவசமானேன்

உலகம் வெறும் கனவு என்று கூறுவது அத்வைதம் என்பார்கள். அது பக்திக்கு விரோதம் என்று கூட விநோத வாதம் செய்பவர்கள் உண்டு. மீரா பாக்கியசாலி. அவள் தத்துவ ரீதியில் அத்வைதமா, விசிஷ்டாத்வைதமா, சுத்தாத்வைதமா, த்வைதமா என்றெல்லாம் மண்டையை உடைத்துக் கொள்ளவில்லை. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினாள். அவளுக்கு எல்லாத் தத்துவமார்க்கங்களுமே ஒவ்வொரு நிலையில் உண்மையான பிரத்யட்ச அநுபவமாக வாய்த்தன. ஆனால் அவள் சென்றது அன்பு வழிதான். அன்பு வில்லில் பகவானின் பெயர் என்னும் அம்பைப் பூட்டியே சாட்சாத்கார இலக்கில் பதிந்து விட்டாள் அவள். இதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகப் பாடுகிறாள்:

மனத்திலே உறைந்தது ராமனின் நாமம்
மனனம் செய்து அவனை ரசிக்கச் செய்வேனடி

நற்கருமம் புரியா துர்ப்பாக்கிய மீரா
அற்புதனைப் பாடச் சொற்களும் போதினில்
(மனத்திலே)

சத்குரு கருணையில் தற்காப்பினைப் பெற்றேன்
துர்மதியதனைத் தூர விலக்கினேன் (மனத்திலே)
ப்ரேமை எனும் தனுவில் நாம அம்பு தொடுத்தேன்
ஞானக் கவசமிட்டேன் கானத்தால் குணம் கண்டேன்
(மனத்திலே)

உடலைத் தாளமாக்கி மனத்தை வாத்தியமாக்கி
இனிய நினைவைப் பாடி எழுப்பினேன் உயிரினை
(மனத்திலே)

அன்பனின் திருமுன்னர் ஆனந்த நடம் செய்து
அமர சாம்ராஜ்யத்தில் அமர இடம் கொண்டேன்
(மனத்திலே)

விந்தை புரியும்கோ விந்தனே உனது
லீலையைப் பாடினேன் பாலனம் புரிவாய் (மனத்திலே)
மீராவின் பிரபுவைப் பேரால் பிடித்துவிட்டேன்
சரண தூளியதனை சிரத்தினில் ஏந்துவேன்
(மனத்திலே)

உடலில் உயிரின் லயம் ததும்ப, உயிரில் ஆன்மநாதம் வழிய, அந்த நாதத்தை நெடும் பண்டைக்கால நேய நினைவுகளில் தோய்த்து இசையாக்கிப் பாடிய மீரா, இந்த நினைவுகளுக்கெல்லாம் மேலாக ஒன்றையே நினைக்க விரும்பினாள். கண்ணனுக்கும் மேலான அவனது நாமம்தான் அது.

பேராசை கொண்டேன் உன் பேர்மீது

திண்மை செறிந்த கல்லில்
மென்மை நிறையும் நாமம்
பொறித்திட மிதந்தது
எரிகடலதனிலே
நாம மகிமையினால்
ராமசேது உண்டாக்க

கணிகை செல்லக் கிளிக்கு
மணிப் பெயரைப் புகட்டி
மரண காலத்தில் அது
ஸ்மரணம் செய்யக் கேட்டு
வைகுந்தம் சேர்ந்திட்ட
வைபவம் அறியீரோ?

ஆதிமூலப் பிரானின்
பாதிப் பெயரைச் சொன்ன
வாரணத்தைக் காத்து
தாரணமளித்திட
கருடனை விட்டோடிப்
புருடன் வந்தானடி
கால பாசத்தைக் கண்டு
ஓலமிட்டு மைந்தனை
அழைத்த அஜாமிளன்
பிழைத்ததும் பெயரால்
பார் முழுதும் அறியும்
பேரதன் பெருமை
நம்பியின் பெயர் தந்த
எம்பிரான் குருவினை
நம்பிப் பின்தொடர்ந்தேன்
கொம்பும் பழம் பெற்றேன்
இனியொரு செயலில்லை
அவன் பரம் அனைத்தும்

ரவிதாஸர் பூங்காற்றுபோல் வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிட்டார். பூங்காற்றின் சுவட்டைக் காண முடியாவிட்டால் என்ன? அதன் மணம் மீராவிடம் நிறைந்துவிட்டது.

அத்தியாயம் 21

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய

மணம் நிறைந்த மீரா டாகுர் துவாரகத்துக் கண்ணனிடம் பேசினாள்: "ஐயனே, உன் திருவிளையாடலை நான் அறியமுடியாது. ஆயினும் அதில் ஒரு துளியை அறிந்துவிட்டாற்போன்ற ஒரு பாவனையை உண்டாக்கி விட்டாய். பிறப்புரிமையாக உன் பாந்தவ்யத்தை எனக்குத் தந்தவன் நீ. குருவோ, சாதனையோ தேவையில்லாமலே எனக்கு உன்னை ஆதியில் காட்டிக் கொண்டவன் நீ. ஆனால் இந்தப் பாரத வர்ஷத்தில் குருவுக்கும் சாதனைக்கும் உள்ள மகிமையை வலுப்படுத்தவே, இயல்பாக எனக்கு உண்டான பரமானுபவத்தை நழுவுறச் செய்து, பின்பு குருமுகமாக, நாம ஜபத்தின் சாதனை மூலமாக அதே அநுபவத்துக்குப் புத்துயிர் தந்திருக்கிறாய். நானாகவே உன்னைப் பெற்றேன் — அப்படிப் பெற முடியும் — என்ற அகம்பாவத்தை நீக்கி, என்னைச் சிஷ்யையாக்கி விநயத்தின் வழியில், நம்பிக்கையின் மீது என்னை நடத்திச் சென்று உன்னைத் தந்து கொண்டாய். இன்னும் என்னவெல்லாம் இனிக்க இனிக்கத் திட்டமிட்டிருக்கிறாயோ, உன் திருவுள்ளப்படியே நடத்திக் கொள்."

கிருஷ்ண விக்கிரகம் 'கலகல'வெனச் சிரித்தது. கண்ணனே அங்கு பிரசன்னமாகிவிட்டான். "என் திருவுள்ளப்படி நடத்திக் கொள்ளலாம் என்கிறாயே! நான் உன் கற்பு நெறியைச் சிதைக்க வந்த அதருமக்காரன் என்ற உன் எண்ணம் மாறி விட்டதா?" என்றான்.

"கண்ணா! என்னை ஏன் சோதிக்கிறாய்? உன்னை அதருமக்காரன் என்று நான் நினைத்தது உண்மைதான். ஆனால் குருநாதன் அருளில் இப்போது உண்மை தெரிகிறது. நீ தருமம், அதருமம் இரண்டுக்குமே அப்பாற்பட்ட பரம்பொருள். உன் செயலைத் தருமத்திலோ அதருமத்திலோ உரைத்துப் பார்ப்பதே அயுக்தம். நீ எது செய்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் ஐயா."

"புத்திசாலியாகப் பேசிவிட்டாய். ஆனால் புத்தி அதிக தூரம் செல்லாது மீரா. ஓரிடத்தில் அதுவும் நின்றுவிடும். நான் தருமத்துக்கு அப்பாற்பட்ட பரம்பொருள் என்றாய். அதனால் உன்னை நான் மணக்கலாம். ஆனால் நீ? நீ எப்படி தருமத்தை விட்டு என்னை மணக்க முடியும்?" என்றான் கண்ணன்.

குருநாதனும் திருநாமமும் தந்த சாந்தி அவ்வளவும்கூட வெறும் மாயப் பிரமை தானோ என்றெண்ணும்படி மீரா திக்பிரமித்து விட்டாள்.

'தருமத்துக்கும் அதருமத்துக்கும் அப்பாற்பட்ட கண்ணன் தருமத்தை விடலாம். நான் எப்படி விட முடியும்?'—இந்த வினா மீராவைக் கொக்கி போட்டு நெரித்தது.

பரிதாபமாகக் கண்ணனின் முகத்தைப் பார்த்தாள். அவனோ பரிகாசமாக நகைத்தான்.

"உன் கேள்விக்கு நான் விடை சொல்ல மாட்டேன். நீயே கண்டுபிடித்துக்கொள்ள வேண்டியதுதான்" என்றான்.

"அவ்வளவு தகுதி எனக்கில்லையடா அப்பனே! என்னை வதைக்காதே. உன் கனிவாய் திறந்து நீயே சொல்" என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கையெடுத்துக் கும்பிட்டுப் பிரார்த்தித்தாள் மீரா.

"தகுதியா, உனக்கில்லையா? நீ எவ்வளவு பெரியவள்! யோக மார்க்கமெல்லாம் பயின்றவளாயிற்றே! ஒரு பிராணாயாமம் செய்தால் உன் உள்ளம் ஒருமைப்பட்டுவிடும்! அந்த நிலையில் எதுவும் தெற்றெனத் தெரிந்து

இன்று ராமுவின் மகன் பள்ளிக்குச் செல்கிறான், நாளைக்குக் கல்லூரி...

பணம் நல்ல வழியில் பயன்படுகிறது!


ராமுவின் மகனுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. காரணம் ராமு முற்போக்கான விவசாயி. வளம் காணுபவன். உயர்ந்த விதைகளை உபயோகிக்கிறான். விஞ்ஞான முறையில் பயிர்களை மாற்றுகிறான். நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறான். தவிர, ராலீஸ் தயாரிக்கும் சமநிலை உரக் கலவைகளால் நிலத்தைச் செழுமையாக்குவதுடன் டாடா பைஸன் தயாரிக்கும் பூச்சி மருந்துகள் மூலம் பயிர்களைப் பாதுகாக்கவும்செய்கிறான். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன, அதிகப்படியான, தரத்திலுயர்ந்த விளைச்சலுக்கு வழிசெய்கின்றன.

TATA FISON RALLIS TREE BRAND FERTILIZERS AND PESTICIDES

உரங்கள், பூச்சி மருந்துகள் மூலம் வளமை



SHBI-RF 84 TM


சத்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச்சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

விடுமே'' என்றான் கிருஷ்ணன் கண்களை அகல விரித்து.

''நான் யோகம் செய்து பாழாய்ப் போனது உனக்கு இவ்வளவு நையாண்டியாகவா ஆகிவிட்டது!'' என்று நெஞ்சு வலிக்கக் குறைப்பட்டுக்கொண்ட மீரா, அப்படியே கண்ணன் மடியில் முகத்தைப் பதித்துக் கொண்டு கதறி அழலானாள்.

''அச்சச்சோ! கல்யாணமான பெண் பிற பாருஷன் மீது படலாமா? நான் உன்னைத் தொட்டுத் தடவி ஆறுதல் தர மாட்டேன் அம்மா! தருமத்தைக் காப்பாற்ற வேண்டும் அல்லவா?'' என்று இன்னமும் இம்சைக் குறும்பு செய்தான் கண்ணன். அதற்காக மீரா அவன் மடியை விட்டு எழுந்திருக்க வில்லை. மனம் கொண்ட மட்டும் அழுது தீர்த்தாள்.

அந்தக் கண்ணீர் வெள்ளத்திலேயே அவளது உள்ளத்தையும் அறிவையும் மூடியிருந்த பல படலங்கள் கரைந்து ஓடின. மழை நின்றதும் வீசுகிற தெள்ளிய வெய்யில் போல் அவளது அகத்தில் ஒரு தெள்ளிய ஒளி வீசியது.

கண்ணனின் மடியினின்று எழுந்தாள். டாகுர் துவாரத்தின் ஒரு தூணில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். கண்ணன் அவளைக் குறும்பாகப் பார்ப்பது அந்த மூடிய கண்களுக்கும் புலனாயிற்று. அகக் கண் பார்வை பெற்றுவிட்டாள் மீரா. தெளிவுற்ற அவளது அகத்தில் ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சிகள் பிரதிபலித்தன.

''தருமம் அறியாக் குறும்பனே!'' என்று கண்ணனை அழைத்தாள்.

ஆனால் இப்போது அவள் மீராவாக இருக்கவில்லை. ஆண்டாளாக இருந்தாள்.

தருமம் அறியாக் குறும்பனைத்
　　தன்கைச் சார்ங்கம் அதுவே போல்
புருவ வட்டம் அழகிய பொருத்தம்
　　இலியைக் கண்டீரே?
உருவு கரிதாய் முகம் செய்தாய்
　　உதயப் பருப்பதத்தின் மேல்
விரியும் கதிரே போல்வானை
　　விருந்தா வனத்தே கண்டோமே

என்று நாச்சியார் திருமொழியைப் பாஷை கடந்த பரம நிலையில் பாடுகையிலேயே அவளுக்குத் தருமம் என்பதற்குப் புது விளக்கமும் புரிந்தது.

கண்ணன் தன்னை மணக்க வருவது அதருமம் என்று மீரா கருதுகையில், கண்ணன் தன்னை மணக்க வராததே அதருமம் என்று கருதிக் கோதைநாயகி 'தருமம் அறியாக் குறும்பனே' என்று அவனை ஏசினாள். ஆம், அவனுடைய தருமம் ஆன்மாக்களை மணப்பதுதான். தன்னிடமிருந்து பிரிந்தவற்றைத் தன்பால் ஆகர்ஷிப்பதுதானே பிரகிருதியின் தருமம்?

ஆனால் அவனுடைய தருமத்தைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவானேன்? பெண் தருமத்தைப் பற்றியல்லவா கேள்வி? இதோ அவனே ஸ்திரீ தருமத்தைப் பற்றி வேறு விதமாகப் பேசுகிறானே!

மீராவின் மன அரங்கில் மீண்டும் காட்சி மாறியது. ஆண்டாள் மறைந்தாள். பிரேம பக்தியின் உச்சத்தை எய்திய கோபிகைகள் அவள் உள்ளத்தில் தோன்றினர். அவளுமே அவர்களில் ஒருத்தியானாள்.

கோபியரின் செவிகளில் கண்ணனின் குழலிசை நிறைந்தது. அவ்வளவுதான். அவர்கள் தங்கள் கணவன்மார்களை மறந்துவிட்டு, அவர்களுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியத்தையும் விட்டுவிட்டுக் கண்ணன் குழலூதும் யமுனா தீரத்துக்கு ஓடினார்கள்.

கண்ணன் அவர்களிடம் தருமம் பேசினான்:

பர்த்து: சுச்ருஷணம் ஸ்த்ரீணம்
　　பரோ தர்மோ ஹ்யமாயயா।
தத்பந்தூனாம் ச கல்யாண்ய:
　　ப்ரஜானாம் சானுபோஷணம்॥
து:சீலோ துர்பகோ வ்ருத்தோ
　　ஜடோ ரோக்யதனோபி வா।
பதி:ஸ்த்ரீபிர்ந ஹாதவ்யோ
　　லோகேப்ஸு-பிரபாதகீ॥
அஸ்வர்க்யமயசஸ்யம் ச பல்கு
　　க்ருச்ரம் பயாவஹம்।
ஜுகுப்ஸிதம் ச ஸர்வத்ர
　　ஔபபத்யம் குலஸ்த்ரியா:॥

இல்லை என்பது இல்லை


கடையில் அலுவல் பார்ப்பவன் ஒரு பெண்ணிடம் ''இல்லை'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த முதலாளியின் காதில் இந்தச் சொல் விழுந்ததும் கோபம் மேலிட்டது.

உடனே முதலாளியே, அப்பெண்ணிடம், ''இல்லையா! ஏன் இல்லை? இதோ ஒரு நொடியில் கிடங்கிலிருந்து எடுத்து வந்து தருகிறேன்'' என்றார். பிறகு முதலாளி பணியாளைத் தனியே அழைத்து, ''யார் எந்தச் சாமான் கேட்டாலும் - அது நமது கடையில் இல்லையென்றாலும் 'இல்லை' என்று சொல்லக் கூடாது. தருகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியில் இருந்தாவது தருவித்துத் தரவேண்டும். இதை உனக்குப் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். இப்போது அந்தப் பெண்ணிடம் இல்லையென்று சொன்னாயே சொல்லலாமா? அவள் என்ன கேட்டாள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

பணியாள், அமைதியாக '''ஒரு வாரமாக மழை இல்லையே?' என்று கேட்டார்கள். நானும் 'இல்லை' என்றேன். வேணுமானால் கிடங்கிலிருந்து கொண்டு வந்து கொடுக்கவா!'' என்றான்.

— ஆர். சலாமுல்லா





''எவனே, என்னைப் பற்றி டைரக்டரிடம் கலகம் பண்ணிவிட்டான் போலிருக்கிறது: டைரக்டர் என்னைக் கான்சல் பண்ணித் தொலேத்து விட்டார்!''

''பெண்களின் மகத்தான தர்மம் கணவனுக்குப் பணிவிடை செய்வதுதான். அவனது உறவினருக்கும் சுசுருஷை புரிய வேண்டும். குழந்தைகளைப் பேணி வளர்க்க வேண்டும். ஒழுக்கமற்றவனுயினும், அதிர்ஷ்டமற்றவனுயினும், இளமையற்றவனுயினும், ஜடனுயினும், நோயாளியாயினும், தரித்திரனுயினும் கணவனைப் பேணினுலொழிய பெண்களுக்குப் புண்ணிய லோகம் கிடையாது. குலஸ்திரீ யொருத்தி பரபுருஷனுடன் சேர்ந்தால் அப்போதே அவள் மேலுலகையும், புகழையும் இழக்கிறுள். இதைவிட அபவாதம் கிடையாது. இதைவிட அருவருக்கக்கூடிய வேறெதுவும் கிடையாது'' — என்கிறுன் கண்ணன்.

கோபியர் அதற்கும் விடை கூறலாயினர். நாடி நரம்புகள் கோடி கோடியும் அதிர, மீரா தன் ஒவ்வோர் உடலணுவையும் செவியாக்கிக் கொண்டு கூர்ந்து கேட்டாள். அவனை வாட்டி வதைக்கும் வினவுக்கல்லவா எழுத்தறிவற்ற அந்த ஆய்ச்சியர்கள் விடை சொல்லப் போகிறுர்கள்?

'அழுகையிலும் கஸ்வரம் தவருதவர்கள்' என்று பிரம்மநிஷ்டர் போற்றும் கோபியர் மதுர மதுரமாகப் பேசுகிறுர்கள்.:

யத்பத்யபத்ய ஸுஹ்ருதாமனுவ்ருத்திரங்க
ஸ்த்ரீணும் ஸ்வதர்ம இதி தர்மவிதா த்வயோக்தம்!
அஸ்த்வேவமேததுபதேசபதே த்வயீசே
ப்ரேஷ்டோ பவாம்ஸ்தனுப்ருதாம் கில பந்துராத்மா!!

''தருமம் அறிந்தவனே'' என்று கோபியர் கண்ணனை அழைக்கக் கேட்டவுடன் மீராவுக்குப் புல்லரித்தது. 'தானும் ஆண்டாளும் அவனை அதருமக்காரனுகச் சொன்னபோது, எழுத்தறிவற்ற இடைச்சியர் அவனைத் தர்மவித்தாகக் காண்கிறுர்களே, இன்னும் என்ன சொல்லப் போகிறுர்களோ?'

கோபியர் பேசுகிறுர்கள்: ''தர்மம் அறிந்தவனே! கணவனுக்கும் குழந்தைகளுக்கும் உறவினருக்கும் பணி புரிவதே பெண்களின் ஸ்வதர்மம் என்று நீ சொன்னுயல்லவா? அதனுலேயே உன்னைச் சேர்ந்து நாங்கள் பணிபுரிய அனுமதிப்பாய். ஏனெனில் உன் உபதேசத்துக்கு மையம் நீயே அல்லவா? உன்னைவிட உறவினர், அன்பர் யாருண்டு? நீயே அல்லவா எல்லா உறவுகளையும்விட நெருங்கிய ஆன்மாவாக ஒவ்வொருவரிடமும் இருக்கிறுய்?''

மீராவின் மனத்தில் மேலும் காட்சி மாறியது. பின்னும் ஆயிரமாயிரம் ஆண்டு கீழ்ச் சென்றடைந்தாள் அவள்.

கண்ணன் யாக்ஞவல்கிய முனிவராக அமர்ந்திருக்கிறுன் — அவனெதிரே முனி பத்தினி மைத்ரேயியாக மீரா.

ந வா அரே பத்யுः காமாய பதிः ப்ரியோ பவதி ஆத்மனஸ்து காமாய பதிः ப்ரியோ பவதி! ந வா அரே ஜாயாயை காமாய... ந வா அரே புத்ராணும் காமாய... ந வா அரே ஸர்வஸ்ய காமாய...

யாக்ஞவல்கியர் மைத்ரேயிக்கு உபதேசிக்கிறுர்:

''ப்ரியே! கணவனிடமும், மனைவியிடமும், புத்திரர்களிடமும், எதனிடமுமே அன்பு செய்வது அவற்றின் பொருட்டாக என்று நினைக்கிறுய்? அல்ல. அவை ஒவ்வொன்றிலும் ஆன்மாவாக ஒரே பொருள் இருக்கிறது. அந்த ஆன்மாவோடு பிரிவற்றது உன் ஆன்மா. ஆன்மாவை ஆன்மா அன்பு செய்வதே அதன் ஸ்வதருமம். இது காரணமாகவே உலகத்தில் பலபடித்தான அன்புகள் தோன்றியுள்ளன.''

மீராவின் உள்ளம் தூய ஸ்படிகமாகி விட்டது.

'ஆம், எல்லா உறவாகவும் இருப்பவன் அவன். அவன் உட்புகுந்திருப்பதிலேயே மனைவிக்குக் கணவனிடம், கணவனுக்கு மனைவியிடம் பிரியம் ஏற்படுகிறது. இதுபோன்ற பலவிதிய பிரியங்களைக் காட்டி, இதன் வழியே அவன் சிறுகச் சிறுகத் தன்னிடம் ஜீவனுக்குப் பிரியத்தை உண்டாக்கிக் கடைசியில் பிரியாத ஒருமை இன்பத்தைத் தருவான். உலக வாழ்வில் இந்தப் பிரியம் தடம் புரண்டு விடக்கூடாது என்றே கற்பு நெறியைப் பெண்டிருக்குப் பரம தருமமாக வைத்தார்கள். ஆனல் அந்தத் தருமமும் அவனை அடைய ஒரு சாதனம்தான். சாதனத்தின் முடிவாகிய அவனையே இதோ கையும் மெய்யுமாக அடைந்த பிறகு எந்த நெறிதான் எடுபடும்? நோய் தீர்ந்த பின் பத்தியம் எதற்கு?'

''மீரா...'' என்று பிரேமை பொங்க அழைத்தான் கண்ணன்.

ஸ்படிக மணிகளாக மீரா தூய ஆனந்தக் கண்ணீரை வழிய விட்டுக் கொண்டு அவனை நோக்கினுள்.

''மீரா, நீ என்னைக் குருவாக வந்து உபதேசிக்குமாறு கேட்டுக் கொண்டாயல்லவா? அதற்கு இப்போது பக்குவமாகிவிட்டாய்'' என்றான்.

மீராவுக்கு உள்ளம் சிலிர்த்தது. அவள் தன் வயம் இழந்தாள்.

ஆதிகுருவான பரமாத்மாவின் கம்பீரமான, கனமதுரமான உபதேசம் அவளது இதயவெளியில் பாய்ந்தது.

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய
மாமேகம் சரணம் வ்ரஜ

''எல்லாத் தர்மங்களையும் விட்டு விட்டு என்னையே சரணடைக.''

ஆகா, பார்த்தனுக்கு இதோபதேசம் செய்த பரமன், அதன் சிகரமாக, சரம சுலோகமாகக் கூறிய மகா மந்திரம் மீராவுக்கு உபதேசமாகி விட்டது.

பார்த்தனிடம் ''ஸ்வதர்மத்தை விடாதே! ஸ்வதர்மத்தைக் காப்பாற்று'' என்பதையே மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறிவிட்டுக் கடைசியில் தருமத்தை அனுஷ்டிப்பதன் பயனாக ''எல்லாத் தருமத்தையும் விட்டு என்னிடம் அடைக்கலம் புகுவாய்'' என்று கண்ணன் கூறினானே! அதன் பொருள் என்ன என்று மீராவுக்குப் புரிந்து விட்டது.

இனி ஸ்திரீ தர்மமில்லை, குலதர்மமில்லை, ராஜ தர்மமில்லை — அவனை அடைவதுதான் தர்மம்.

''எல்லாத் தர்மங்களையும் விட்டுவிட்டேன் பிரபு. என் தர்மத்தின் மர்மத்தைப் புரிந்து கொண்டேன். அதோடு மட்டுமின்றி உன் மர்மத்தையும் புரிந்து கொண்டு விட்டேன், ஐயனே! பாரதப் போரில் நீ தருமத்தையும் மீறி மாயம் புரிந்து பஞ்சபாண்டவரைக் காத்தாய் என்றும், சுக்ரீவனின் பொருட்டு தருமத்தை மீறி வாலியை வதைத்தாய் என்றும் உன்னைப் பேசுபவர் இருக்கலாம். ஆனால் அடியாரிடம் 'தர்மம் விட்டு என்னைச் சரணடைக' என்று கூறிய நீயும் அவர்கள் பொருட்டு, தர்மத்தை விட்டாய்; ஸர்வ தர்ம பரித்யாகத்தை அவர்களோடு பரிவர்த்தனை செய்து கொண்டாய் என்பதைப் பேதையாகிய எனக்கு, அறியாச் சிறுமியான எனக்கு உணர்த்திவிட்டாய். உலகுக்கு வழிகாட்ட நீ உத்தமர்களை அனுப்பிவைத்து அவர்கள் மூலம் உலக தருமங்களை அனுஷ்டித்துக் காட்டுகிறாய் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் உலக தருமங்களைக் கடந்த நிலையில் வாழ்ந்து காட்டுவதற்கு அடியாளைத் தேர்ந்தெடுத்துவிட்டாய்! பாகவதத்தையும், பாரதத்தையும் என் கண் முன் காட்டி என்னை வாழ்வித்துவிட்டாய், பரமகுருவே!'' என்று திக்கித் திணறிக் கூறியபடி கண்ணனின் சிவந்த தாளினைத் தன் சிரத்தின் மீது சூடிக்கொண்டாள் மீரா.

''மீரா, உன்னிடம் பாகவதமும் பாரதமும் பூர்த்தி பெற்றுவிட்டன. ராமாயணமும் கூட உன்னிடம்தான் நிறைகிறது. உன்னுடைய மன உளைச்சலைப் பாரதமும் பாகவதமும் தீர்த்தன. நான் ராமாயணத்தில் உற்ற உளைச்சலைத் தீர்க்க நீ வந்திருக்கிறாய்'' என்று பரிவொழுகக் கூறி, மீராவைத் தன் அமுதக் கரத்தால் பற்றி எடுத்து நிறுத்தினான் கோவிந்தன்.

மீரா ஆச்சரியம் நிறைந்த விழிகளால் அவனையே உறுத்து நோக்கினாள்.

''அதை இப்போது சொல்ல மாட்டேன்; சமயம் வரும்போது நீயே தெரிந்துகொள்வாய்'' என்றான் அச்சுதன்.

''உன் விருப்பம் கண்ணா'' என்றாள் மீரா.

அவன் விருப்பம் அதிசயமாக இருந்தது. மீராவைக் கல்யாணம் செய்து கொள்வதுதான் அவனது விருப்பமாம்! அதுவும் மேர்தாவில் அல்ல! சித்தோரில் மீராவின் கணவன் எடுப்பித்த ஆலயத்தில்தான் அவளை மணப்பானாம்!

'ஏன்?' என்று எப்படிக் கேட்க முடியும்? கேள்விகளுக்கு விடை பிறப்பது தருமத்தின் எல்லைக்குள்தான்.

இதுவோ.... 'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' அல்லவோ?

(தொடரும்)

அரிசிக் கவிஞன்



கவிதை ஒன்று எழுதக் கண்டிப்பாய்த் திட்டமிட்டேன்
கதவைத் தாளிட்டேன்; காகிதத்தை எடுத்து வைத்தேன்.
கனம் ஐந்து ஓடவில்லை; கடுமைக் குரல் ஒன்று
கதவைத் துளைத்து வந்து காதிற்குள் புகுந்தது காண்!
கண்ணகியைச் சிலம்பினிலே கண்டு ரசித்தவர் நாம்
கண்ணெதிரே வருவாளென்று கனவும் கண்டதில்லை.

'மதுரையம்பதி இல்லை இது மதராஸ் தாயே' என்று
மறதியை எடுத்துரைக்க மனம் விழையும் நேரத்திலே
'எழுதிக் கிழித்து நீர் என்னத்தைக் கண்டு விட்டீர்?
எழுந்து நடவும் எதிர் ரேஷன் கடையை நோக்கி
அரிசி மூட்டை வந்திறங்கி ஐந்தாறு நிமிடமாச்சு'
அதட்டி ஆர்ப்பரித்தாள் என் கரம் பிடித்த கண்ணகியாள்

கவிதையே உன் மதிப்பு காற்றிலே பறக்கட்டும்!
கடை அரிசி வந்தால் தான் கவிஞனுக்கு இடம் இங்கே!
நெல்லூர் அரிசி யென்று செல்லரித்த சரக்கோ
உள்ளூர் அரிசி என்ற உவமையில்லா உளுத்ததுவோ
கட்டிக் கொண்டு வைத்து உன்னைக் கட்டி அழைக்கின்றேன்
காத்திருப்பாய் அதுவரையில்; கடுகி நடந்திட்டேன்.

ஐந்து நிமிடத்தில் ஐம்பது பேர் சேர்ந்து விட்டார்
அனுமார் வாலாக அரிசி அன்பர் நின்று விட்டார்
அரசன் போல் ஆணவமாம் அமர்க்களமாய் வீற்றிருக்கும்
அரிசிக் கடைக்காரர் அனைவரையும் நோட்டம் விட்டார்
கார்டும் கரன்ஸி நோட்டும் கைமாறக் கைமாற
க்யூவில் முன்னேறிக் கட்டெறும்பாய் நகர்ந்து வந்தேன்.

என் முறைக்கு இன்னும், ஏழெட்டுப் பேர் தடையாய்
என் முன்னே நின்று, வழி மறித்துக் கொண்டிருக்க,
இடைவெளியில் என் பார்வை, இரும்புத் தராசில் விழ,
'இது என்ன கூத்து? என்ன தான் வாங்க வந்தோம்?
எள்ளுப் பிண்ணாக்கு எருமையில்லா எனக்கெதற்கு?'
என்றே இரைந்து எண்ணத்தை வெளியிட்டேன்

'எள்ளுப் பிண்ணாக்கு எங்கேய்யா வந்தது?
ஏதோஅரிசியென்றுஇந்தப் புண்ணியவான்கொடுக்கின்றான்
கருப்பென்றும் சிவப்பென்றும் கரு நீலப் பச்சையென்றும்
கதை பண்ணிக் கொண்டிருந்தால் காயும் வயிற்றுக்கு
என்ன பதில் சொல்வீர்?' என்றொருவர் கேட்க
என் கார்டு இரவல் பெற மற்றொருவர் பல்லிளித்தார்.



மையூயர் பகவானே! மானிடத்தைக் காப்போனே!
மனிதனைப் படைத்தாய்; அவன் பசி தீர்க்க நெல் படைத்தாய்
ஆனால் அந்த நெல்லின் அரிசிக்கு எப்படித் தான் இந்த
அற்புதக் கலர் கொடுத்தாய்? அரட்டு வண்ணம் இட்டாய்
இவ்வாண்டு அரசாங்க அக்காடமியார் யாரும்
இதுவரையில் ஏன் உனக்குப்பரிசொன்றும் கொடுக்கவில்லை?

என்முறையும் வந்தது; எடுத்து வைத்தேன் ரேஷன்கார்டை
எதிராளி முகத்தில் ஏக்கம் ததும்பியது.
என் வரைக்கும் அரிசி ஸ்டாக், இல்லாது போயிற்றாம்
எப்போது அடுத்த கோட்டா, வருமென்று தெரியாதாம்
இன்று போய் மற்றொரு நாள் வாருமென்றனுப்பி விட்டார்
இப்படியாய்ப் பிண்ணாக்கும் எனக்குக் கிட்டவில்லை!

கணவன் வருகைக்குக் காத்திருப்பாள் மனைவி என்று
கதைகளில் எழுதி வரும் அமெச்சூர் எழுத்தாளர்
கற்பனையை மெய்யாக்கும் கருத்துடனே என் மனைவி
காத்திருந்தாள் வாசலிலே; கால் கடுக்க நின்றிருந்தாள்
என்னை விட மதிப்பு 'என் அரிசிப் பை'க்குத் தான்!
எரிந்தேன் வெறும் பையை எரிச்சல் தாளாமல்!

ஆஹா! என்ன விபரீதம்! அவள் முகத்தில் புன் சிரிப்பா?
ஆமாம்! நிச்சயம் தான்! மாதுளியாய் மலர்ந்து நின்றாள்!
எனக்கும் புரியவில்லை! ஏதோ 'சைக்கோலஜி' தான்!
எந்த 'ஆங்கிளி'லே ஏச்சுக்களை தொடுப்பாளோ?
என்று தெரியாமல் ஏமாறிப் பதுங்கி நின்றேன்
என்னுள்ள 'ஹார்பரிலே' புயல் கொடியை ஏற்றி வைத்தேன்

'இத்தனை ஆண்டுகளில் 'இன்டெலிஜெண்ட்டாய்' நீரும்
இந்த ஒரு காரியத்தை ஏற்றமுடன் செய்து விட்டீர்,
மழை தான் கொட்டி விடும், பழுமட்ட அரிசியதை
மனம் துணிந்து வாங்காமல், மனிதராய்த் திரும்பி விட்டீர்!
பம்பாய் ரவையோடு 'ஃபாரின் எய்டு' கோதுமையை
பட்டினி போக்கப் பகலுணவு கொள்ளலாம்' என்றாள்.

ஏமாந்த எந்தனுக்கு 'ஏ. ஒன்' வீரப் பட்டமா?
ஏன் நான் மூச்சை பலமாக விடுகின்றேன்?
எட்டி நடைபோட்டு என் அறைக்குள் நுழைந்து விட்டேன்
எதிர் பாரா அதிருஷ்டத்தை ஏன் நழுவ விடுகின்றேன்?
அந்தப் பாராட்டிற்கு, ஈடேது? இணையேது?
அரசுக் கவிஞனல்ல, நான் அரிசிக் கவிஞன் தான்!

புலியைவிடக் கொடியது!

ஒருமுறை கன்பூஷியஸ் மலைப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு வயதான பெண்மணி புதைகுழி அருகே உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டார்.

அவளுடைய அழுகைக்குக் காரணம் கேட்டபோது அவள் கூறிய காரணம் இது தான்: ''என் தகப்பனர் புலியால் அடித்துக் கொல்லப்பட்டு இறந்துவிட்டார். என் கணவரும் சில நாட்களுக்குமுன் அதேபோல் இறந்து விட்டார். இருக்கும் என்னுடைய ஒரே மகனைக் கொண்டு நான் எப்படிப் பிழைப்பு நடத்துவேன்?''

அதற்குக் கன்பூஷியஸ், ''இன்னும் நீ ஏன் இங்கேயே இருக்கிருய்? சமவெளிக்கு வந்து விடுவதுதானே?'' என்ருர்.

''இங்கு வரி வசூலிக்க யாரும் வருவதில்லை. அங்கு வரி வசூலிப்பவர்கள் இருப்பார்களே'' என்ருள் அப்பெண்மணி.

உடனே கன்பூஷியஸ் தம் சீடர்களைப் பார்த்து, ''பார்த்தீர்களா? கொடிய புலியை விட ஒரு கொடிய அரசாங்கத்தைக் கண்டு மக்கள் எப்படி நடுங்குகிருர்கள்?'' என்ருர்.

- ''எறும்பு''



நர்ஸ்கள் கவனிக்க!

நாள் முழுதும் ஓடி ஆடி வார்டிலிருக்கும் அத்தனை நோயாளிகளுக்கும் தெர்மாமீட்டர் வைத்தும், நாடி பிடித்தும் பார்க்க இனி நர்ஸ்கள் சிரமப்பட வேண்டாம். அமெரிக்காவின் நூதனப் படைப்பு ஒன்று ஒரு நாற்காலி. இது 'மெடிகல் சேர்' என அழைக்கப்படுகிறது. நாற்காலியின் மீது உட்கார்ந்த ஒரு நிமிடத்துக்குள் நோயாளியின் உடல் வெப்ப நிலை, ரத்தக் கொதிப்பு, நாடித் துடிப்பு, இருதயத் துடிப்பு இவை யாவற்றையும் நாற்காலியுடன் இணைக்கப்பட்ட மின் இயங்கிகள் தாமாகவே பதிவுசெய்து விடுகின்றன!

ஆதாரம்: 'ஸயன்ஸ் டுடே'

அனுப்பியவர்: ஹரிஹரன்



கருத்துக் குவியல்

நாக்கு மூன்றங்குல நீளமே. ஆனல் அதை ஆரம்பத்திலேயே அடக்கி ஆளாவிட்டால் ஆறடி உயரமுள்ள மனிதனைக் கொன்றுவிடும்.

- ஜப்பானியப் பழமொழி

★

கொஞ்சம் பணமிருந்தால் அது உங்களைக் காப்பாற்றும்; அதிகப் பணமிருந்தால் அதை நீங்கள் காப்பாற்ற வேண்டும்.

- பிஷப்ஹால்

- தொகுப்பு: இ. இ.

சைபரின் மதிப்பு

நாவன்மை படைத்த திரு சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் உணர்ச்சி பொங்கப் பேசிக் கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்த ஒருவர் குறுக்கே எழுந்து சத்தியமூர்த்தியைப் பார்த்து, ''மேடையில் காரசாரமாகப் பேசி விட்டால் போதுமா? காரியத்தில் அல்லவா காண்பிக்க வேண்டும்? மகாத்மா காந்திதான் நம்பர் 1. நீங்கள் எல்லாம் சுத்த சைபர்கள்தான்'' என்ருர்.

''ஆம்! நீங்கள் கூறியது நூற்றுக்கு நூறும் உண்மை. மதிப்புக்குரிய எங்கள் தலைவர் மகாத்மா காந்தி அவர்கள் நம்பர் 1தான். நாங்கள் எல்லோரும் அவருக்குப் பின்னல் வரும் சைபர்கள் தான்'' என்ருர் சத்தியமூர்த்தி.

ஒன்றுக்குப் பின்னல் வரும் ஒவ்வொரு சைபருக்கும் பத்து மடங்கு அல்லவா மதிப்பு உயருகிறது!

சாமர்த்தியமாகக் கேள்வி கேட்டவர் வாயடைத்துப் போய்த் தலை குனிந்திருப்பார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

- குத்தாலம் வி. சம்பந்தம்



தீராத விளையாட்டுப் பிள்ளை!

பிரபல மேல்நாட்டு நடிகர் ஹென்றி ஃபான்டா வுக்குப் பீட்டர் என்று ஒரு மகன். ஏழு வயது நிரம்பிய இவனுக்குப் பொம்மை விமானங்களைச் செய்வதென்றால் ஒரு தனி ஆர்வம். விமானங்களைச் செய்து முடிக்கும் விளையாட்டில் சேர்ந்து கொண்டு ஹென்றி ஃபான்டா பீட்டருக்கு உதவி செய்வதுண்டு. ஒருநாள் புதிதாகச் செய்து முடித்த பொம்மை விமானத்தை எடுத்துக் கொண்டார் ஃபான்டா. மகனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு அருகே இருந்த கடற்கரைக்குச் சென்றார். பேட்டரிகளையும் வேறு சில கருவிகளையும் வைத்து விமானத்தைப் பறக்கவிட்டார். நிலத்திலிருந்த கருவிகளைக் கொண்டு பறக்கும் விமானத்தின் போக்கைக் கட்டுப்படுத்தி இயக்கும் காரியத்தில் தம்மையும் மறந்து மூழ்கிவிட்டார் ஃபான்டா. இதை வெகு நேரத்துக்குப் பார்த்துக் கொண்டிருந்தான் மகன். அப்புறம் தகப்பனாரைப் பார்த்து, "அப்பா, நீங்கள் பெரியவராக வளர்ந்த பிறகு எந்த வேலையைச் செய்ய விரும்புகிறீர்கள்?" என்று கேட்டானே, பார்க்கலாம்! சிறந்த நடிகரான ஃபான்டாவால்கூட அப்பொழுது நடிக்க முடியவில்லை!

ஆதாரம்: பிரீ இந்தியா
தகவல்: ஏ. கே. கந்தசாமி



சீதை சொன்ன காரணம்

தந்தை சொல் தலைமேல் கொண்டு கானகம் ஏகப் புறப்பட்டு விட்டான் தசரத ராமன். சீதையோ, 'நானும் கூட வருவேன்' என்று அடம் பிடிக்கிறாள். இராமன் எத்தனையோ சமாதானங்கள் கூறிப் பார்க்கிறான். சீதை பணிந்து கேட்கிறாள்:

"உலகில் எத்தனையோ ராமாயணங்கள் இருக்கின்றன. ஒன்றிலாவது இராமன் சீதையை விட்டு விட்டுக் காட்டுக்குச் சென்றதாகக் கூறப்படவில்லையே! அப்படியிருக்க நீங்கள் மட்டும் என்னை விட்டுச் செல்கிறேன் என்று கூறுகிறீர்களே!"

சீதையின் வாதம் வென்றது.

இது அத்யாத்ம ராமாயணத்தில் கூறப்படுகிறது.

தகவல்: மாயூரம் ராஜுரி



•••• ஞானோதயம் ••••

டபிள்யூ. ஹீ. ஏட்ஸின் "தி கமிங் ஆப் விஸ்டம் வித் டைம்" என்ற கவிதையின் தமிழாக்கம்:

இலைகள் அனந்தம்
ஒன்றே வேர்;
என்
இலைகளையும், மலர்களையும்
பகட்டாய்
பரிதி முன்
வீசி விளையாடி
கழிந்தது யௌவனம் பொய்யில்;
வாடலாம்
பேருண்மைக்குள்
நான் இன்று.

—அயன்




கொசுக்கடிக்கு அஞ்ச வேண்டாம்!

இட நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இனி குடித்தனக்காரர்கள் ஆளுக்கு ஒரு கொசு வலை கட்டிக் கொண்டு சிரமப்பட வேண்டாம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு சிறு மாத்திரையைப் படுக்கப் போகு முன் விழுங்க வேண்டியதுதான். கொசு உங்களைக் கடிக்கவே கடிக்காது. அமெரிக்க விஞ்ஞானிகள், கொசு கடிக்க விரும்பாத மனிதர்கள் பலரின் தோலை ஆராய்ச்சி செய்து கொசு தீண்ட விரும்பாத ரசாயனப் பொருட்களைக் கொண்டு இந்த மாத்திரையைத் தயார் செய்கிறார்கள்.

ஆதாரம்: 'ஸயன்ஸ் டுடே'
அனுப்பியவர்: ஹரிஹரன்




உஸ்தாத் ஆஸ்ரம் கூறுகிறது
"அது
Osram
ஆஸ்ரம் தானு என்று
பார்ப்பதில் லாபம்
இருக்கிறது
வேலையிலோ அல்லது விளையாட்டிலோ! சரியான வெளிச்ச அமைப்பின் வித்தியாசம் நன்கு விளங்கும். உங்கள் ஆபீசிற்கும், வீட்டிற்கும் ஆஸ்ரம் விளக்குகள் மிகச்சிறந்தவை. ஏனெனில் நீண்ட உழைப்பிற்கும், அதிகப்படியான வெளிச்சம் அளிக்கவும் ஏற்றபடி அவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் நம்பக்கூடிய விளக்கைக் கேட்டு வாங்குங்கள் — உலகத்திலேயே விளக்குகளிலும், வெளிச்ச அமைப்புகளிலும் உலகிலேயே முதன்மையாக விளங்கும் ஜி.இ.ஸி.ஆதரவுடன் தயாரானவை அவை.
G.E.C.
உமது உத்திரவாதம்
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பி. லிமிடெட்
GEC/G/116

ஆதிசங்கரர் விஜயம்

பாரத தர்மத்துக்குப் புத்துயிருட்டிய பகவத்பாத சங்கரரின் புனிதமான வாழ்க்கை வரலாற்றை எளிய தமிழ் நடையில், சம்பவங்களின் சீரான ஓட்டத்துடன் விளக்கும் இந்நூலில் இதற்கு முன்பே வெளியான 'ஜய ஜய சங்கர'விலிருந்து வரி வரியாகவும், பாரா பாராவாகவும், பக்கம் பக்கமாகவும் 'பிரதிபிம்பம்' காணப்படுகிறது. மாதிரிக்கு இதோ ஒன்று:

ஆதிசங்கரர் விஜயம்

நீங்கள்தான் பாரத தேசத்தில் தங்களது மூச்சுக் காற்றாகிய வேதத்தைப் பரப்பும்படி செய்தீர்கள். அங்குள்ள மக்கள், பிறந்தது முதல் மரணம் அடையும்வரை, தத்தமக்குரிய தமது மூதாதையருக்கும், தம் வழித்தோன்றல்களுக்கும், எங்களுக்கும், உங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை வேதங்களிலுள்ள கர்ம காண்டத்தில் கூறியுள்ளீர்கள். மக்கள் அறிவுத் தெளிவு பெற்று உள்ளும் புறமும் நிறைந்துள்ள உங்களை, தங்களுக்குள்ளேயே கண்டு, அமரநிலை அடைவதற்கான ஞான வழியை வேதங்களின் முடிபாகிய உபநிஷதங்களில் கூறியுள்ளீர்கள்.

அத்தகைய வேதங்களுக்கும் வேத நெறிகளுக்கும், தர்மத்துக்கும் இப்பொழுது ஆபத்து வந்துவிட்டது. கர்மம், பக்தி, ஞானம் என்பவை யெல்லாம் சிதைந்து வருகின்றன. வேதத்தையே பிரமாணமாகக் கருதுவோர்கள், கர்மகாண்டத்தைப் பின்பற்றினும் பக்தியோடும் ஞானத்தோடும் அந்தக் கர்மங்களை இணைக்காமல் பிறந்து இறந்து அழிகின்றனர். பக்தி என்று நினைத்து, நரபலி, மிருக பலி முதலிய உயிர்க் கொலைகளைச் செய்கின்றனர். தெய்வங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கின்றனர். பகுத்தறிவு வழியில் அன்பையும் அருளையும் போதிக்கும் புத்தரும் சமணரும் இறைவனாகிய தங்களைப்பற்றி ஒரு முடிவு சொல்லாததால், மக்களுக்கு எதிலுமே பிடிப்பில்லை. எல்லோருமே இறைவனாகிய உங்களால் படைக்கப்பட்டவர்கள், எல்லாச் செயல்களின் பயன்களையும் நீங்களே அளிப்பவர்கள் என்ற திடமான உணர்வு இல்லாமையால் அன்பு செய்ய வேண்டிய அவசியமும், தவறு செய்வதால் ஏற்படும் பாவமும் மக்களுக்கு விளங்கவில்லை. தங்களது ஆத்மா என்ன என்பதையே அவர்களால் அறியமுடியவில்லை. (பக்கம் 22–3)

ஜயஜய சங்கர

.....தங்களுடைய மூச்சுக் காற்றாகிய வேதத்தை அங்கே பரவும்படி செய்தீர்கள். மக்கள் பிறப்பிலிருந்து மரணம் வரை தமக்கும், முந்தையருக்கும், சமூகத்துக்கும், எங்களுக்கும், உங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை அதன் கர்ம காண்டத்தில் கூறியிருக்கிறீர்கள். மக்கள் அறிவு விளக்கம் பெற்று, உள்ளும் புறமும் நிறைந்துள்ள உங்களைத் தங்களுக்குள் கண்டு, அமரநிலை அடைவதற்கான உபாயத்தை – ஞான மார்க்கத்தை – அந்த வேதத்தின் முடிவாகிய உபநிஷத்துக்களில் கூறியிருக்கிறீர்கள்.

தேவாதி தேவா! அந்த வேதத்துக்கு, வேதம் கூறும் தர்மத்துக்கு இன்று ஆபத்து வந்துவிட்டது. பாரத பூமியில் இன்று கர்மம் பக்தி, ஞானம் எல்லாம் சிதைந்து வருகின்றன. வேதத்தைப் பிரமாணமாகக் காட்டும் கர்ம மார்க்கக்காரர்கள் அக்கர்மத்தை பக்தியோடும், ஞானத்தோடும் இணைக்காததால் பிறந்து பிறந்து அழிகிறார்கள். பக்தி என்று நினைத்துக் கொண்டு வேறு பலர் கோரமான நரபலி முதலிய வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். அல்லது தெய்வங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கின்றனர். பகுத்தறிவு வழியில் அன்பையும், அருளையும் கூற வந்த புத்தரும், ஜினரும் உங்களைப் பற்றி முடிவாக ஒன்றும் சொல்லாததால், மக்களுக்கு அவ்வழியிலும் சரியான பிடிப்பு ஏற்படவில்லை. எல்லாரும் உங்கள் குழந்தை; எல்லாக் காரியத்துக்கும் பலன் அளிப்பவர் நீங்கள் என்ற திடபுத்தி இல்லாததால் அன்பு செலுத்த வேண்டிய அவசியமோ, தவறு செய்வதால் ஏற்படும் பாபமோ அவர்களுக்குத் தெரியவில்லை. தங்கள் ஆத்மா என்ன என்பதே தெரியாமல் உழலுகிறார்கள்.

(பக்கம் 13)


இப்படி அனந்தம். முக்கியமாக இந்நூலின் 42-ம் பக்க இறுதியிலிருந்து 54-ம் பக்கத் தொடக்கம் வரையுள்ள பன்னிரண்டு பக்கங்களை 'ஜய ஜய சங்கர'வின் எட்டாம் அத்தியாயத்துடன் சேர்த்துப் பார்த்தால் இலக்கியத்தில் கூட இப்படி ''அபூர்வ சகோதரர்கள்'' இருக்க முடியுமா என்று மூக்கின் மேல் விரலை வைப்போம்.

சம்ஸ்கிருதப் பெயர்கள் பல தமிழில் படுகொலை செய்யப்பட்டிருப்பது வருத்தத்துக்குரிய விஷயம். சங்க்ஷேப சாரீரகம், நைஷ்கர்ம்ய ஸித்தி முதலிய பிரமாண அத்வைத நூல்களின் பெயர்கள் கூடத் தவறாகத் தரப்பட்டுள்ளன. 'அதிஷ்டானம்' 'ஆதிஸ்தான'மாக உருவெடுத்திருக்கிறது. வித்யாகனர், சச்சிதானந்தகனர், பிரக்ஞானகனர் முதலிய காமகோடி பீடாதிபதிகள் பாடகர்களாகி இருக்கிறார்கள்! அதாவது அவர்கள் திருநாமத்திலுள்ள 'கனர்' என்பது 'கானர்' என்றாகியிருக்கிறது. இதுபோல் பிழைகள் ஏராளம்.

'இந்நூலில் ஏதேனும் குற்றம் குறைபாடுகள் இருக்குமானால், வாசக நண்பர்கள் அவற்றை எங்களுக்குத் தெரிவித்தால் மறுபதிப்பில் திருத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும்' என்று பதிப்பாளர்கள் கூறுகின்றனர். மறுபதிப்பு வெளியாகுமாயின் அவர்களுக்கு மிக நிறைய வேலை இருக்கும் என்றே அஞ்சுகிறோம்.

[ஆசிரியர்: துர்க்காதாஸ் என். கே. ஸ்வாமி; பதிப்பாளர்: இன்ப நிலையம், சென்னை–4 விலை ரூ. 1-25]

‘பலனைப் பொறுத்தவரையில் எல்லா தலைவலி மாத்திரைகளும் ஒன்றுதான்’ என்பது உங்கள் எண்ணமானால்



உபயோகித்துப் பாருங்கள்



ஸ்க்விப் அளிக்கும்

அவேதன்®



அற்புத ‘எபெப்’ அடங்கிய டேப்லெட்டுகள்! இவை துரிதமான, பத்திரமான, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கின்றன!

‘எபெப்’ அடங்கிய அவேதன் டேப்லெட்டுகள் நிமிடக்கணக்கில் செயல்புரிந்து மணிக்கணக்காகப் பயனளிக்கின்றன.

தலைவலி, பல்வலி, முதுகுவலி, தசைகள் பிடிப்பு, ஜலதோஷம்-ஃப்ளு, பெண்களின் அசௌகரியமான நாட்கள் மற்றும் இதர வலிகள், உபாதைகள் முதலியவற்றிற்கு—அவேதன்.

SQUIBB® ஸாராபாய் கெமிகல்ஸ்

® இது இ. ஆர். ஸ்க்விப் அண்டு சன்ஸ் இன்கார்ப்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். காரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.

Shilpi SC 31 A-Tam.



33. அப்பர்

திம்பியார் சமண சமயப் பிணியும், சூலைப் பிணியும் நீங்கித் திருவருளால் உய்யக் கொண்டதை நினைந்து நினைந்து உருகினார் திலகவதியார்.

பாடலி புத்திரத்தில் வாழ்கின்ற சமணர்கள், திருநாவுக்கரசு நாயனார் சிவநெறி சேர்ந்து திருவருள் பெற்று இடர் நீங்கிய செய்தியைக் கேட்டனர். அவர்களது மனம் பொறுக்கவில்லை. "தருமசேனர்க்கு வந்த சூலை நோயை நம்மில் ஒருவராலும் நீக்க முடியவில்லை. அதனால் அவர் சைவராகிப் பிணி நீங்கி நலம் பெற்றார். நமது சமயம் வீழ்ந்தது" என்று வருந்தி மருண்டனர். "தருமசேனர் நிலைநிறுத்திய சமண சமயம் இனி அழிந்து விடும்" என்று வருந்திய அவர்கள் தமது தலையும் மயிர்ப்பீலியும் தாழ வந்து ஒருபுறம் கூடினார்கள்.

"தருமசேனர் சைவராகி விட்டார் என்ற உண்மையைப் பல்லவ மன்னன் அறிந்தால் நம் மீது வெகுண்டு தானும் சைவனாகி விடுவான்; நமக்கு விடுத்திருக்கின்ற மான்யம் முதலியவை களையும் நீக்குவான்; ஆதலின் நாம் இனி என் செய்வோம்?" என்று சிந்தித்தனர். கொலையும் பொய்ம்மையும் புரிவோம் என்று கூறிக் கொண்டு கொடுந் தொழில் புரியும் அச்சமணர்கள் வஞ்சனை புனைய நினைந்தனர். 'தமது தமக்கையார் சைவ சமயத்தில் இருப்பதனால் தருமசேனர் தாமும் சைவ சமயத்தில் சேர எண்ணி, சூலைவலி என்றும், அது எதனாலும் தீரவில்லை என்றும், பொய்ம்மையாக நடித்தார்; தமது தமக்கையாரிடம் சென்று சைவரானார்' என்று அரசனிடம் சொல்ல முடிவு செய்தனர்.

துன்மதியுடைய சமணர்கள் தமது சமயத்தைச் சேர்ந்த பல்லவ மன்னன் அரண்மனைக்குக் கூட்டமாகச் சென்றனர். ''அரசே ! தருமசேனர் தமக்குச் சூலை நோய் என்று பொய் சொல்லி நடித்து, தம் தமக்கையாரிடம் சென்று சைவ சமயம் சார்ந்து சிவபெருமானுக்கு ஆளாகி நமது சமயத்தை அழித்தார்'' என்று கூறினர்கள்.

மன்னன் வெகுண்டான். ''முடிவில்லாத தவத்தையுடையவர்களே! பொய்யாக நடித்து சமயலங்கனம் செய்த இதற்கு என்ன தண்டனை செய்வோம்?'' என்றான்.

''சிறந்த நமது சமயத்தைப் பழித்த அவரை வருத்தக்கடவாய்'' என்று பொய்ம்மை மிக்க புல்லர்கள் கூறினர்.

அருளும் அறிவும் இன்றி நன்னெறியை விட்டு விலகிய மன்னன் அமைச்சரை நோக்கி, ''இவர்கள் கூறிய தீயவனைத் தண்டித்தல் வேண்டும் ; எக்காரணத்தாலும் விடாது அவனை என்பால் கொண்டு வாருங்கள்'' என்று ஆணையிட்டான். அங்கிருந்த அமைச்சர்கள் எவரும் மன்னனுக்கு அரச நீதியை எடுத்துரைக்கவில்லை. சமயம் மாறுவது குற்றமன்று என்றும் கூறவில்லை.

அமைச்சர்கள் முழவுகளுடன் கூடிய சேனைகளுடன் மணம் வீசும் சோலை சூழ்ந்த வற்றாத நீருள்ள கெடிலம் ஓடும் திருவதிகையை அடைந்தனர். சென்ற படைகள் திருநாவுக்கரசரைச் சூழ்ந்து கொண்டன. ஓரமைச்சன் திருநாவுக்கரசர் எதிர் சென்று, ''நம் அரசர் உம்மை அழைத்து வருமாறு எங்களை அனுப்பினார்; வாரும்'' என்றான். அஞ்சுதல் இல்லாத அடிகள் அரசன் ஆணை வழி வந்த அமைச்சரை நோக்கி,

''நாமார்க்குங் குடியல்லோம்
நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம்
நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும்
துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத்
தன்மை யான
சங்கரனற் சங்கவெண்
குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று
மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்
சேவடியிணையே குறுகினோமே''

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

அமைச்சர்கள் அவரது அடிமலரைத் தொழுது கருணைகூர்ந்து, ''எம்முடன் எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். 'இங்கு வரும் வினைகளுக்கு எம்பிரான் துணையுள்ளான்' என்றுஅவர்களுடன் சென்றார் திருநாவுக்கரசர். அவருடைய வரவை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன் தன் பக்கத்திலிருந்த சமணர்களைப் பார்த்து, ''அந்தத் தருமசேனரைச் செய்வது யாது? சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

அறந்துறந்த அவர்கள், ''நீற்றறையில் (சுண்ணாம்பு சுடும் அறையில்) இடுக'' எனப் புகன்றனர்.

அருகில் இருந்தவர்களை நோக்கிய மன்னன், ''அவ்வண்ணமே செய்க'' என்று ஆணையிட்டான்.

ஏவலர்கள் கொழுந்து விட்டெரியும் பெருந் தீயுடன் கூடிய நீற்றறையின் உள்ளே திருநாவுக்கரசரை இருத்தி, இருப்புத் தாளிட்டுக் காவல் புரிந்தனர். அடிகளார் அம்பலத்தில் ஆடும் திருவடி நிழலைத் தலைமேல் கொண்டு 'ஈசனடியார்கட்கு இடருளதோ?' என்று கருணைக் கடலாகிய கண்ணுதலையே தொழுது கொண்டிருந்தார்.

வெய்யநீற் றறையதுதான்
வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றல்அணை
தண்கழுநீர்த் தடம்போன்று
மெய்யொளிவெண் நிலவலர்ந்து
முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல்
அருளாகிக் குளிர்ந்ததே.

வெம்மையான அந்த நீற்றறை இளவேனிற் பருவத்தில் தென்றல் காற்று வீச, செங்கழுநீர்த் தடாகம் போலும் இனிய தண்ணிலாப் போலும், யாழின் கானம் போலும், குளிர்ந்தது.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

என்னும் திருப்பதிகத்தை அடிகள் அப்பொழுது அருளிச் செய்தார்.

ஏழு நாட்கள் கழிந்தன. பல்லவ மன்னன் சமண குருமார்களை அழைத்து, ''நீங்கள் சென்று நீற்றறையைப் பாருங்கள்'' என்றான். இருட்குழாம் போன்ற உருவுடைய சமணர்கள் நீற்றறையைத் திறந்தனர். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, அம்பலவாணரது அடிமலர்க் கமலத்தில் ஊறும் தேனமுதையருந்தி, ஊனமின்றி உவந்திருக்கும் திருநாவுக்கரசரைக் கண்டு அவர்கள் அதிசயித்தனர்.

அவர்கள் மன்னனிடம் சென்று, ''அரசே! முன் நமது சமண சமயத்திலிருந்தபோது கற்ற மந்திரம் சபித்துத் தருமசேனர் இறவாமல் உயிர் தப்பினார். இப்போது நஞ்சு ஊட்டிக் கொல்ல வேண்டும்'' என்று முடை வாயால் கூறினார்கள். அரசனும் ''அவ்வாறே செய்யுங்கள்'' என்று அனுமதி தந்தான்.

பாவிகள் நஞ்சு கலந்த பாலன்னத்தை நாவுக்கரசருக்குக் கொடுத்தனர். நஞ்சு என்று அறிந்தும், நாவுக்கரசரின் நெஞ்சம் வருந்தவில்லை. ''நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு'' என்று உண்டார். ஆலமுண்ட நீலகண்டப் பெருமானுடைய மெய்யடியார்கட்கு விடம் அமுதாவதில் என்ன ஆச்சரியம்?

பொடியார்க்கும் திருமேனி
புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீக்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அற்புதமோ ?

நஞ்சு அமுதானதைக் கண்ட அமணர்கள் அஞ்சினார்கள். ''இவ்விடத்தில் இவன் பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதியே'' என்று கருதிப் பல்லவனிடம் சென்றனர். ''அரசே! நம் சமயத்தில் கற்றுக் கொண்ட விட மந்திரத்தினால் விடமுண்டும் அதன் வலியைத் தடுத்து விட்டான். அவனைக் கொல்லவில்லையானால் எங்கள் உயிரும் உனது அரசாட்சியும் அழியும்'' என்றார்கள்.

மற்றவர்தம் மொழி கேட்ட மன்னவன், ''இனி எவ்வகையாற் கொல்வோம்?'' என்று வினவினான். ''கோபமிக்க மதமேறிய யானையை விட்டுக் கொல்வோம்'' என்று சமணர்கள் கூறினார்கள். மன்னன் கோபங்கொண்ட கொலைக் களிற்றை விடச் சொன்னான். அந்த யானை கூற்றுவனைப் போல், மாடங்களையும் கூடங்களையும் இடித்துத் தூளாக்கி, குத்துக் கோற்காரர்களது தலைகளை இடறி, சங்கிலிகளை அறுத்தெறிந்து, இடிகளைப் போல் முழங்கிக் கொண்டு, படி நெளிய, உகாந்த மாருதம் போல் விரைந்து சென்றது. கொடியர்களாகிய சமணர்கள் திருநாவுக்கரசர்முன் அதனைச் செலுத்தினார்கள். அதனைக் கண்ட அடிகள் ''அஞ்சுவது யாதொன்று மில்லை. அஞ்ச வருவது மில்லை'' என்று ஆனையுரித்த அண்ணலை நினைந்து பாடுவாராயினர்.

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
யஞ்ச வருவது மில்லை.

செந்தமிழ்ப் பதிகம் பாடி சிவசிந்தையுடன் இருந்த ஆளுடைய அரசரைக் கண்ட யானை அவரை வலமாக வந்து, எட்டுத் திசைகளில் உள்ள யாவரும் காணுமாறு நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தது.

அது மட்டுமன்று; அம் மதயானை தன்னை ஏவிய பாகர்களைக் கொன்று விட்டது. சமணர் மீது பாய்ந்து, மிதித்தும், பிளந்தும், நகக்கியும் கொன்று மந்தரகிரி பாற்கடலைக் கலக்கியது போல் நகரைக் கலக்கியது. தப்பிப் பிழைத்த சமணர்கள் ஓடி மன்னன் மலரடி மீது வீழ்ந்து புலம்பினார்கள். வேந்தன் வெகுண்டு, ''இனி என் செய்வது?'' என்றான்.

''தருமசேனனை இனிக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் வீழ்த்த வேண்டும்'' என்று சமணர்கள் கூறி

அர்த்தமே வேறுதான்!

பாங்கு: வானிலை நன்றாக இருக்கும்போது குடை கொடுத்து, மழை வரும் போது அந்தக் குடையைத் திருப்பிக் கேட்கும் ஒரு நிலையத்தைப் போன்றது.

--ராபர்ட் பிராஸ்ட்

ஆதாரம்: "மிர்ரர்"
அனுப்பியவர்: வி. சம்பத்குமார்

னார்கள். அறிவும் அன்பும் இல்லாத அரசன் அதனையும் ஆமோதித்தான்.

ஏவலருடன் சமணரும் போய் அடிகளாரைப் பெரிய கல்லில் சேர்த்துக் கட்டி ஓர் ஓடத்தில் வைத்துக் கடலில் கொண்டு போய் வீழ்த்தி விட்டு வந்தார்கள். கடலில் பாய்ச்சப்பட்ட நாவரசர், "எப்பரிசாயினுமாக; எம்பிரானை ஏத்துவேன்" என்று அருட் கடலில் மூழ்கி, அருந்தமிழ் முத்தெடுத்து ஈசர்க்கு மாலை தொடுத்தார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

உயிர் உருக, ஊனுருக நாவரசர் ஐந்தெழுத்தை ஓதியதால் கல்லும் உருகித் தெப்பமாகியது. தெப்பமாகி மிதந்த கல்லின்மீது அரசு வீற்றிருந்தார் நாவுக்கரசர். நல்வினை, தீவினை என்னும் இருவினைக் கயிறுகள் உயிர்களை மும்மலமாகிய கல்லோடு கட்டுகின்றன. பிறவியாகிய ஏழு கடல்களிலும் அமிழ்ந்து விடாமல் கடக்க வைக்கின்ற ஐந்தெழுத்து இந்தவொரு கடலில் கடக்க வைப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இறைவன் வேண்டுதல் வேண்டாமையிலாதான்; தனக்குவமை யிலாதான்; அறவாழி அந்தணன். அப்பரமபதி பொதுவாக எல்லோருக்கும் அருந்துணையாக இருக்கிறான். சிறப்பாகத் தன்னையடைந்த அடியார்க்குப் பெருந் துணையாக இருந்து அருள் புரிகிறான்.

"அருந்துணையை அடியவர்தம்
அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞானத்
தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும்
பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி
மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப்
போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய
வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப்
புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே"

இந்தப் பாட்டில் அருந்துணையை என்பது முதல் வரி. பெருந் துணையை என்பது கடைசி வரி. எல்லோருக்கும் அருந்துணையாக இருக்கின்ற ஆண்டவன், தன்னை நினைக்கின்றவருக்குத் துணையாக உடனுக்குடன் அருளுகின்றான்.

திருநாவுக்கரசர் கடலில் கல்லின் மீது மிதக்க, திரைக் கரங்களால் தாங்கிச் சிரத்தில் ஏந்திச் சுமக்க முன்பு மாதவம் செய்த வருணன் வாக்கின் மன்னரைக் கருங்கற் சிவிகை மீது ஏந்திக் கொண்டு திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரை சேர்த்தான். கல்மீது மிதந்து வரும் வாகீசரைக் கண்ட திருப்பாதிரிப்புலியூர் வாழும் அன்பர்களும் பிறரும் அவரை எதிர் கொண்டு "ஹர ஹர" என்று முழங்கித் தொழுதார்கள். திருநாவுக்கரசர் பாதிரி மரத்தின் கீழ் எழுந்தருளிய பரமனை "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என்று தொடங்கும் பதிகமோதிப் பரவி வழிபாடு புரிந்தார்.

பின்பு அத்தலத்தினின்று திருவதிகைப் பெருமான் மீதுள்ள காதலினால் புறப்பட்டார். சமணர் புரிந்த கொடுமைகளினின்றும் வெற்றி பெற்று வரும் வாகீசரைத் திருவதிகை வாழும் மக்கள் சிறந்த முறையில் வரவேற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். தெருக்களில் மணித் தோரணம் கட்டினர். சந்தனப் பொடியும் பூவும் திருவீதிகளில் தூவினர். ஒவ்வொரு வீட்டுக்கு முன்பும் பூரண கும்பம் வைத்துத் திருவிளக்குகளை ஏற்றி வைத்தனர். எழிசை ஒசை எங்கும் முழங்கியது. ஆளுடைய அரசரை அனைவரும் வந்து எதிர்கொண்டு இறைஞ்சினார்கள்.

தூயவெண்ணீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே.

"கருணையே வடிவான இவரைக் கண்டும் பாவிகளாகிய சமணர்கள் எவ்வாறு தான் தீங்கு செய்தார்களோ?" என்று அவர்கள் வருந்தினார்கள். அடிகளாரைத் தொழுதார்கள்; துதித்தார்கள். திருநாவுக்கரசர் திருவீரட்டானஞ் சேர்ந்து எம்பெருமானைத் தொழுதார். கரையற்ற அன்புடன் "ஏழையேன் பண்டு இகழ்ந்தவாறே" என்று முடியும் திருப்பதிகம் பாடி வழிபட்டார்.


(தொடரும்)

அஞ்சலி



எங்கள் அன்புத் தந்தையார் திரு வி. சுப்பய்யா முதலியார் சிவபதம் அடைந்து 18-12-66ல் இரண்டு ஆண்டுகளானாலும் எங்கள் உள்ளங்களில் அவர் என்றும் போல இன்றும் நிலைத்து இருக்கிறார்கள். அப்படியேதான் தஞ்சை ஜில்லா பொது மக்கள் உள்ளங்களிலும் அவர் நினைவு பசுமையாகவே விளங்குகிறது. அவருக்கு எங்கள் பக்தி நிறைந்த அஞ்சலி.

எஸ். வையாபுரி B. E., சென்னை
எஸ். ராஜசேகரன், பெங்களூர்







மீனு ஆக்ரோஷத்தோடு கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். இத்தனை நேரமும் அவளது ஆத்திரத்தைத் தூண்ட உதவிய வெய்யிலின் கொடுமை குபீரென்று சூழ்ந்த குளிருணர்வில் கட்டுப்படவில்லைதான். அதே வேகத்தோடு சுற்று முற்றும் நோக்கினாள். முதலாளி ஆசனத்தில் முதல் நாள் இருந்தவர் இல்லை. யாரோ ஒரு புதிய இளைஞன் உட்கார்ந்திருந்தான். கூட்டம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தது. அங்கே சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த கண்ணாடித் தொட்டிகளில் வண்ண மீன்கள் இங்குமங்கும் நீந்தும் அழகை ரசித்தவாறே ஒரு தொட்டியருகே வந்தாள் அவள். அவள் படபடப்பும் கோபமும் கொஞ்சம் ஓய்ந்தன.

அவளை அடையாளம் கண்டுகொண்ட சிப்பந்தி ஒருவன் அவளருகே வந்து ''ஏதாவது கேட்க வந்தீர்களாம்மா?'' என்று பணிவோடு விசாரித்தான்.

''உங்க முதலாளி இல்லையா? அவரைதான் பார்க்க வேண்டும்.''

''அவர் வர அரை மணி நேரம் செல்லும். ஏதாவது தேவையானும்...''

''அவர் வரட்டும்...'' என்று அழுத்தமாகக் கூறிய மீனு கையிலிருந்த கண்ணாடி ஜாடியைப் பார்த்து ஒரு பெருமூச்சுவிட்டாள்.

மீன் தொட்டிகளின் அருகே கிடந்த குட்டை ஸ்டூல் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு தொட்டிகளூடே நோக்கினாள். பெரிய பெரிய தொட்டிகளில், நீர் மிதப்பிலும், ஆழத்திலும், நிழலுருவாக நீந்தி நீந்தித் தயங்கியாடும் வண்ண மீன்கள்! தொட்டியின் அடியாழத்தில், மணற் பரப்பின் நடுவே 'அமேசான் ஸ்வோர்ட்' செடிகளின் கத்தி கத்தியான இலைகளூடே தங்கித் தங்கிச் சுழன்றாடும் குஞ்சு மீன்கள்! வாழைத்தண்டு விளக்கொளியில் மீன்களின் அசைவும், வண்ணமும் பளீரெனக் கண்ணைக் கவர்ந்தன.

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

குரல் கேட்டு நிமிர்ந்த மீனு கூட்டம் எல்லாம் குறைந்து, தான் ஒருத்தி மட்டும் தங்கியிருப்பதை உணர்ந்தாள். சற்று முன் முதலாளி ஆசனத்தில் அமர்ந்திருந்த இளைஞன் எழுந்து வந்து அவள் அருகே நின்றிருந்தான்.

''முதலாளி இல்லை?''

''இப்போதைக்கு எனக்குத்தான் அந்த ஸ்தானம்!'' என்று அவன் கூறியபோது அந்தக் குரலில் கூத்திட்ட குறும்பை மீனு ரசிக்கவில்லை.

கையில் மூடி வைத்திருந்த கண்ணாடி ஜாடியை எடுத்து அவன் கையில் தந்தாள். அந்த இளைஞன் அதை நோட்டமிட்டவாறே, ''இந்த இரண்டு மீன்களும் இறந்துவிட்டன'' என்றான்.

''அது எனக்கு முன்பே தெரிந்துவிட்டது'' என்று பொறுமை இழந்து கூறினாள் மீனு.

''அப்படியா?'' அவன் குரலின் போலி பவ்யம் அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

''உங்களுக்கு அது தெரிந்ததிலும் வியப்பில்லைதான். இங்கேயே செத்துப் போக இருந்ததைத்தானே என் கழுத்தில் கட்டிவிட்டீர்கள்?''

''ஒரு வேண்டுகோள். கொஞ்சம் செவி சாய்ப்பீர்களா? நாங்கள் விற்கும் மீன்களை யார் கழுத்திலும் கட்டி அனுப்புவதில்லை.''

மீனுவின் முகம் சிவந்தது. கோபத்தில் வார்த்தைகள் கிடைக்காமலேயே ''வேடிக்கையாகப் பேசுகிறதாக நினைப்பு போலிருக்கிறது!'' என்று கனன்றாள்.

''பின்னே? நீங்களோ குற்றச்சாட்டுடனேயே வந்திருக்கிறீர்கள். ஏன் இப்படியாயிற்று என்று கேட்டுக் கொள்ளாமல் இப்படித்தானிருக்க வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்களே, அதற்காக வருந்துகிறேன். ஆமாம்! இதை எப்போது வாங்கிப் போனீர்கள்?'' என்று அந்த இளைஞன் தன் சுபாவமான வியாபாரக் குரலில் நயமாகக் கேட்டான்.

''மூன்று தினங்களாகின்றன.''

''த்லோ! என்ன ஆகாரம் போட்டீர்கள்?''

''நீங்கள் 'தயார்' பண்ணினதைத்தான்—உங்களிடமிருந்து வாங்கிப் போன 'ட்ரைஃபுட்'டைத்தான் போட்டேன்.''

இளைஞன் கையிலிருந்த செத்துப்போன மீனை உற்று நோக்கியவாறே ''சாதம் ஏதேனும் போட்டீர்களா?'' என்றான்.

''ஆமாம். என் தம்பி கொஞ்சம் போட்டு விட்டான். அதனுலென்ன? நீங்கள்தான் போடலாம் என்றீர்களே!''

''அப்படியா! இப்போது எனக்குப் புரிந்து விட்டது. நீங்கள் இப்போதுதான் புதிதாக மீன் வளர்ப்புத் தொட்டி வாங்கிப் போனீர்கள் இல்லையா? உங்களுக்கு இந்த அநுபவம் புதிது! அந்த வேறு சூழல் பிடிபடு முன் கண்ட கண்ட ஆகாரத்தை அளவு தெரியாமல் போட்டிருக்கக் கூடாது...''

''அளவு தெரியாமல் யாரும் போட்டுவிடவில்லை. நீங்கள் குற்றத்தை என்மீது சுமத்த வேண்டாம். எனக்குப் பதில் மீன்கள் தர வேண்டும். ஏனென்றுல் முதலில் நல்ல ஆரோக்கியமான மீன்களைத் தரவில்லை!''

இளைஞன் மெல்லச் சிரித்தான். ''வேடிக்கையான வாதம்தான் இது! உங்கள் தவறுல் இறந்துவிட்ட மீனுக்கு நாங்கள் பதில் மீன் தர வேண்டுமா? இப்படியே எங்கள் வாடிக்கைக்காரர்கள் செய்தால் வியாபாரம் அமோகமாக நடக்கும்...!''

''அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை... இப்போது எனக்கு இதே ஏஞ்சல் பிஷ்ஷும், நியான் டெட்ராவும் வேண்டும்...''

''நீங்கள் அதையும் கொண்டு போய், இதே கதியில் திருப்பித் தந்துவிட்டு வேறு கேட்டால்...?''


''நீங்கள் நல்லதாகத் தந்தால் அது ஏன் சாகப் போகிறது?'' என்று கருதி இறங்கினுன் மீரு.

''அதற்கு முன் இந்த மீன்கள் இறந்த காரணம் தெரிந்துகொள்ள வேண்டாமா? இதோ பாருங்கள் இதை... இது அஜீரணத்தால் இறந்து விட்டிருக்கிறது. ஆகாரம் போடும்போது ஒவ்வொரு மீனையும் உற்றுக் கவனிக்க வேண்டும். அது மட்டும் அப்போது

தொட்டி மீன்

கோமகள்

அட்டைப்படக் கதை



சாமர்த்தியமாக முன்வந்து உணவு வாங்கியிராது. சோம்பிக் கிடந்திருக்கும். நல்ல கவனிப்பு ஒவ்வொரு முறையிலும் இருக்க வேண்டும். இதோ... இந்த இன்னொரு மீனுக்குச் சிராய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.''

மீனு இறந்து போன இரு மீன்களையும் துயரத்தோடு பார்த்தவாறே அவன் கூறியதைச் செவிமடுத்தாள். பிறகு மெல்லிய குரலில் ''நான் மிகவும் விரும்பி இந்த ஏஞ்சல் பிஷ்ஷையும், நியான் டெட்ராவையும் வாங்கிப் போனேன்'' என்றாள்.

''பரவாயில்லை. இப்போது ''ஜோடியாக வாங்கிப் போங்கள். சாகாது. ஒருவேளை உங்களுக்கு அந்த அருமை தெரியாமலுமிருக்கலாம்!'' என்று குறும்போடு கூறி, 'பில் புக்'கை எடுத்து விரித்தான் அவன்.

''பில் போடப் போகிறீர்களா, என்ன? நான் பணம் கொடுப்பதாக இல்லையே...!'' என்றாள் மீனு.

''நீங்கள் பணம் தரவேண்டும் என்று யார் சொன்னார்கள்? விற்பனைக்குக் கணக்கு வேண்டாமா? இது என் சொந்த பில்லாக இருக்கட்டும்! உங்கள் பெயர் என்ன? மிஸ்...?''

''மீனு!''

மீனு கைப் பையைத் திறந்து ரூபாய்த் தாள்களை இழுக்கும்போதே அவன் தடுத்தான். ''ப்ளீஸ்! இறந்துபோன மீனுக்குப் பதிலாகத்தானே தந்திருக்கிறோம். பணம் வேண்டாம். வேண்டுமானால்...''

''வேண்டுமானால்...?''

''இன்னும் இரண்டொரு நாட்கள் கழித்து மீன்கள் நல்லபடி உயிர் வாழ்ந்து வந்தால் அந்தச் செய்தியைக் கூறிவிட்டுப் பணத்தைத் தாருங்கள்....''

''ஓ! அதற்காக நான் வர வேண்டுமா, என்ன?''

''வேண்டாம். யாரிடமாவது சொல்லி அனுப்புங்கள்.''

''என் தம்பியை அனுப்புகிறேன்.''

''அட கடவுளே! உங்கள் தம்பிக்கு என்ன தெரியும்?''

''என்ன தெரிய வேண்டும்? நான் சொல்லியனுப்புவதை வந்து அவன் சொல்லப் போகிறான்!''

புதிய மீன்களைப் போட்ட கண்ணாடிக் குப்பியைச் சிப்பந்தி அவளிடம் தந்தான்.

''நான்கு அல்லது அஞ்சு தடவை ஆகாரம் போடுங்கள் — ஒரு நாளைக்கு. ஒரு வாரத்துக்கு உலர்ந்த உணவும், தானியங்களும் மட்டும் போடுங்கள். புழுக்கள், மாமிசத் துண்டுகளைப் போட வேண்டாம்...''

''நன்றி'' என்று எழுந்தாள் மீனு.

ஃ ஃ ஃ

கடையினுள் மீனு நுழைந்தபோது அந்தக் கடைக்கே அழகு செய்யும் மிகப் பெரிய மீன் தொட்டியருகே அந்த இளைஞன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அவளைப் புன்னகையால் வரவேற்றுவிட்டுக் காரியத்தில் ஈடுபட்டான் அவன். 'எலெக்டிரிக் கம்பிரஸ'ரால் காற்றைத் தொட்டிக்குள் 'ஸ்ப்ரே' பண்ணிக் கொண்டிருந்தான். 'ஸ்ப்ரே' பக்கம் நுட்பும் நுரையுமாகக் குமுழியிடும் காற்றினருகே கூட்டம் கூட்டமாகச் சின்னஞ் சிறு மீன்கள் சுவாசிக்கத் துடித்துக் குமுழிக் கிடந்தன. அந்தக் காட்சியில் அப்படியே மயங்கி நின்றாள் மீனு. அந்தத் தொட்டியின் பல வண்ண மீன்களையும் கண்டு அவள் மனத்தில் பரவசம் படர்ந்தது.

''எத்தனை வகை மீன்கள்! இருபது வகை இருக்குமா?''

''அதற்கும் மேலேயே இருக்கும்.'' என்றவன் 'கம்ப்ரஸரை'ப் பக்கத்திலிருந்த ஆளிடம் தந்துவிட்டு, ''இப்படி ஸ்ப்ரே பண்ணும் போது மீன்கள் சுவாசிக்க விரும்பிக் கூட்டமாக ஒரு முகம் திரும்பி நிற்பது எத்தனை அழகான காட்சி! அதற்காகவே இதை நானே செய்கிறேன்...!'' என்றான் அவன்.

''கம்ப்ரஸர் யூஸ் பண்ணறது ரொம்ப நல்லது என்று அர்த்தமா?''

''அப்படித்தான்! இங்கே கடையில் ஏகப்பட்ட மீன்கள் இருக்கின்றன. அழகுணர்ச்சி கலையுணர்ச்சி என்று பாராமல், விற்பனைக்கு மட்டும் சில சமயம் நிறைய மீன்களை வாங்கி ஒரே தொட்டியில் விட வேண்டியிருக்கிறது. அளவுக்கதிகமான கூட்டம் இல்லையா? எனவே, 'ஸ்ப்ரே' பண்ணினால் ரொம்ப நல்லது. வீட்டிற்கெல்லாம் இது அவசியமில்லை...ஆனால் வாரத்துக்கொரு முறை கண்ணாடித் தொட்டியின் அழுக்குகளைப் போக்க வேண்டும். தொட்டியின் நீரை அடிக்கடி மாற்ற வேண்டும். வாரம் ஒரு முறை குறைந்த நீரை ஊற்ற வேண்டும். தொட்டியை மங்கிய வெயிலில் வைக்க வேண்டும். மீன்களுக்கு ஆகாரம் போடுவதில் நியமம் வேண்டும். இல்லையென்றால் அஜீரணம் வந்துவிடும். முன்பு ஒரு முறை நீங்கள் செத்துப் போன இரு மீன்களைக் கொணர்ந்திருந்தீர்களே, அதில் ஒன்று அஜீரணத்தில் மாண்டு விட்டது. ஒன்று சிராய்ப்பு ஏற்பட்டுச் செத்து விட்டது.''


''நல்ல ஞாபகசக்தி உங்களுக்கு! ஆமாம்! அஜீரணம் என்பதை நான் எப்படித் தெரிந்து கொள்வது?''

''சாதாரணமாக மீன்களுக்குக் காலை நேரத்தில் தானியங்கள், ரொட்டித் துண்டு, மண் புழுக்கள் இவைகளைப் போடுகிறோம். அப்போது நாம் போடும் ஆகாரத்தை மீன்கள் நீந்தி வந்து சாமர்த்தியமாகக் கௌவிக்கொள்ளும். அப்படி வராமல் அசமந்தமாக இருக்குமானால், அஜீரணம் என்று பெயர். அதற்கு 'எப்சம்' உப்புப் போட வேண்டும். 'ட்ரை ஃபுட்' நீக்கி மண் புழு போட வேண்டும். அது மட்டுமல்ல. நோய்வாய்ப்பட்ட மீனைத் தொட்டியிலிருந்து விலக்கிவிட வேண்டும். இதெல்லாம் அடிப்படைப் பாடங்கள்...!''

''சிராய்ப்பு ஏற்பட்டால்?''

''சிராய்ப்பில் மண்ணெண்ணெய் தடவினால் சரியாகிவிடும்.''

''அம்மா! இத்தனை விஷயங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டுமா? ஏதோ ஓர் ஆசையில் என் சிநேகிதி மீன் வளர்க்கிறாளே



சோர்வா? சோம்பலா?
அஜீர்ணமாக இருக்கலாம்

ஜீரணம் பாதிக்கப்பட்டால், வேலையில் ஈடுபாடு குறைகிறது. எரிச்சல் ஏற்படுகிறது. தலைக்குமேல் வேலை காத்திருக்கும்போது உங்களை அஜீர்ணம் பாதிக்க விடலாமா? ஹ்யூலெட்ஸ் மிக்சர் அருந்துங்கள். அது விரைவில் நிவாரணம் அளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பு அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ மிக்சர் குழந்தைகளின் வயிற்று உபாதைகளுக்கும் நல்லது. வயிற்றுப் போக்கு இருந்தால் அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.





C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட், 86A நைனியப்ப
நாயக்கன் தெரு, மதருஸ் 3

JWT CJH-3763A

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்குச் சிறந்தது

என்ற எண்ணத்தோடு நானும் ஆரம்பித்தேன். கஷ்டமான பொழுதுபோக்கு இது!''

''கஷ்டப்பட்டால்தான் சுகம். கொஞ்ச நாட்களில் சிநேகிதிக்கே நீங்கள் சொல்லித் தரலாம். யார் கண்டார்கள்...?''

''அதோ! அதோ நீலமாய், உடம்பெல்லாம் கறும் புள்ளிகளோடு இருக்கிறதே, அது என்ன மீன்?''

''அது நீலக் குராமி மீன்!''

''அதோ நீலத்தில் உடலில் புள்ளிகளோடு இன்னொரு வகை. அந்தப் புள்ளிகளே அதற்கு ஆபரணம் போல் இருக்கின்றனவே! கண்கள்தான் எப்படி வைரமாக ஜொலிக்கின்றன!''

''அது கண்ணாடிக் கெண்டை... அதோ மூலைப் பக்கமாய், ஆறு அங்குல நீளத்தில் நீந்துகிறதே அது பொன்னிற மீன். இதோ அடிமட்டத்தில் நிற்கிறதே. இது கத்தி வால் மீன். ஆண் மீனின் வாலின் அடிப்பாகத்தில் கத்தி போல் சிவப்பிலும் வெளிர் சிவப்பிலும் சிலது பச்சையிலுமாக உள்ளது பாருங்கள்... உம்! ஆமாம்! நான்பாட்டில் உங்கள் நேரத்தை வீணாக்குகிறேனே! நீங்கள் எங்கே வந்தீர்கள்? வாங்கிப்போன மீன்கள் சௌக்கியம்தானே?''

''ஆகா! ஒரு குறைவுமில்லாமல் தொட்டியில் நீந்துகின்றன.''

''பின்னே நீங்கள் வந்த காரணம்?''

''அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

''அதை யாரிடமாவது சொல்லி யனுப்பியிருக்கலாமே. அப்படித்தானே சொல்லிப் போனீர்கள்?'' அவன் குரலில் பழைய குறும்பு தொத்திக் கொண்டது.

''ஏன், நான் வரக்கூடாதா?''

''அப்படி நான் எங்கே சொன்னேன்? பார்க்கப்போனால் நீங்களே வருவீர்களென்று...''

மீனுவின் முகம் சிவந்தது. ''நானே வேறு இருவகை மீன்கள் வாங்கிப் போகலாம்னு...''

''எந்த வகை தரட்டும்?''

''நீலக் குராமியும், கண்ணாடிக் கெண்டையும்தான் தாருங்களேன்... எனக்கு ரொம்பப் பிடித்தவை அவை...''

அவன் கௌண்டரில் உட்கார்ந்து பில் புக்கை எடுத்தான். மீனு கைப் பையைத் திறந்தாள். ''எத்தனை ரூபாய்?''

''மீனு! நீங்கள் தரவேண்டாம். இதுவும் என் சொந்த பில்லாக இருக்கட்டும்..''

''ப்ளீஸ்! இது முறையல்ல. முன்பு தர வேண்டியதற்கும் இதை வைத்துக் கொள்ளுங்கள்'' என்றவாறே இரு பத்து ரூபாய் நோட்டுக்களை மேஜையின் மீது வைத்துவிட்டு, கண்ணாடிக் குப்பியோடு நடந்தாள்.

குதூகல நடை போட்டு வீட்டை அடைந்த மீனுவுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. செய்தி கேட்டதும், அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவள் அப்பாவின் நண்பராம். பெரிய கம்பெனிக்குச் சொந்தக்காரராம். தம் பையனுக்கு மீனுவைப் பெண் பார்க்க வருகிறாராம்!

நீரிலிருந்து எடுத்து விடப்பட்ட மீன் போல் துடித்தாள் மீனு. காரணம், மீன் வாங்கப் போனவளின் மனத் தடாகத்தில்



''நான் காப்பி குடிப்பதை 30 லிருந்து 5 ஆகக் குறைச்சிட்டேன்.''

''அப்படின்னு, ஒரு நாளைக்கு ஐந்து கப்தான் குடிக்கிறயா?''

''இல்லே! முன்பெல்லாம் முப்பது நிமிஷத்துக்கு ஒரு தடவை ஒரு கப் குடிப்பேன். இப்ப ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவைதான்.''

காதல் மீனை வளர்த்து நீச்சலடிக்க விட்டிருந்தான் ரட்சகன் என்னும் மீன் விற்பனையாளன். அவனைத் தன் பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைத்துத் தன் உள்ளத்து ஆசையை எடுத்துக் கூறி நிறைவேற்றிக் கொள்ள நினைத்து அவள் ரட்சகனை அன்று மாலையே தன் வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தாள்! அன்று பார்த்தா, அவர்களும் பெண் பார்க்க வர வேண்டும்? ஒருநிலை கொள்ளாமல் மீனெனத் தவித்தாள் மீனு!

மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. பெண் பார்க்க வருகிறவர்களுக்காக மீனுவை அலங்கரித்து விட்டாள் அம்மா. மீனுவோ ரட்சகன் வரவுக்காகக் காத்திருந்தாள். அவள் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. அதோ டெரிலின் பாண்டும், டீ ஷர்ட்டுமாகப் படியேறுவது ரட்சகன்தான்!

தயாராக நண்பரின் வரவுக்காகக் காத்திருந்த அப்பா முந்திக் கொண்டார். ''யார் அப்பா நீ?''

''ஸார், இந்த விலாசம் இதுதானே?'' என்றவாறே கையிலிருந்த துண்டுத்தாளை நீட்டினான் ரட்சகன்.

''ஆமாம்! என்ன விஷயமாக வந்தாய்?''

இதற்குள் ரட்சகன் கதவோரம் வந்து நின்ற மீனுவைக் கவனித்து விட்டான். ''இதோ இவர்கள்தான் வரச் சொல்லியிருந்தார்கள்...'' என்று மீனுவைச் சுட்டிக் காட்டினான்.

''ஆமாம் அப்பா...!'' என்று மீனு குறுக்கிடும்போதே அப்பா இடை வெட்டினார்.

''இப்போது சந்தர்ப்பம் சரியில்லை. எதுவானாலும் பிறகு பேசிக் கொள்ளலாம்.

மீனுவைப் பெண் பார்க்க வருகிறார்கள். இந்தச் சமயத்தில் நீ இங்கிருப்பது உசிதமல்ல அப்பா! போய்விட்டு வா...''

''ஸார்! மீன் வளர்ப்பு விஷயமாகச் சில யோசனைகள் கூற வந்தேன்...''

''ரொம்ப நன்றி. அதற்கு இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைக்கும். இப்போது நீ போய்விட்டு வா...'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார் அப்பா. ''நீ உள்ளே போ மீனு!''

வேறு வழியில்லை. ரட்சகன் படி இறங்கினான். வாசலோரம் கார் ஒன்று வழுக்கிக் கொண்டு வந்து நின்றது.

''வாப்பா பானு! உன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு வரலியா?'' என்று வரவேற்றார் மீனுவின் அப்பா.

ரட்சகன் திகைத்து நின்றான். காரிலிருந்து இறங்கிய பானு வியப்போடு, ''நீ எங்கேடா இங்கே வந்தே? உன்னைக் கூப்பிட்டு வரச் சொல்லி மூலைக்கு மூலை ஆள் விட்டேன். நீ மூலஸ்தானத்துக்கே வந்தாச்சா?''

''என்ன இது பானு? இந்தப் பையன் யார்?''

''என்ன விசுவம்! சாவகாசமாய்க் கேட்கறே? இவன் தான் என் பையன் ரட்சகன். வாடா உள்ளே போகலாம். அவரை ஏன் பார்க்கிறே? உன் எதிர்கால மாமனார் அவர்!''

''வா தம்பி. உள்ளே வந்து உட்கார்.'' என்ற விசுவம் நண்பரின் தோளைத் தட்டினார். ''ஏன் பானு! நீ என்ன மீன் மார்க்கெட் நடத்துகிறாயா?''

''ஆமாம்! 'கலர் மீன் மார்க்கெட்!''

''அப்படியானால் என் பெண்ணை உனக்கு முன்பே அடையாளம் தெரிந்திருக்கலாம். அவள் மீன் வளர்க்கிறாள்.—மீனு! வந்து நமஸ்காரம் பண்ணம்மா...''

நடப்பதெல்லாம் பிரமை போல் ஓர் இன்பமான கட்டுக்குள் அமர்ந்திருந்தான் ரட்சகன். மீனு அவனை ஓரக் கண்ணால் பார்த்துச் சிரித்தவாறே வந்து வணங்கினாள்.

''ஏண்டா பெண்ணைப் பிடிச்சிருக்கா?'' என்றார் பானு. அவன் தலை குனிந்து கொண்டான்.

''என்னம்மா மீனு உனக்கு...?''

அவள் உள்ளே ஓடிப் போனாள்.

''ஏண்டா! முன்னாலே அவளைத் தெரியுமா?''

''கடைக்கு வந்து மீன்கள் வாங்கியிருக்கிறாள் அப்பா. மீன் வளர்ப்புப் பற்றிக் கேட்கவும், தான் வளர்க்கிற தொட்டியைப் பார்க்கவும் வரும்படி மீனு சொல்லியிருந்தாள். அதனால்தான் இங்கே வந்தேனப்பா!''

''ஓகோகோ! அப்படியா கதை! கேள், விசுவம். காலேஜுக்குப் போகும் முன்னாலே கடையிலே கொஞ்ச நேரம் தங்கி எல்லாவற்றையும் தெரிந்து கொள் என்று எத்தனையோ நாட்களாய்ச் சொல்வேன். பையன் கேட்பதில்லை. கொஞ்ச நாட்களாய்க் கடையை விட்டு இந்தண்டை அந்தண்டை நகருவதில்லை. இப்போதுதான் உண்மை புரியுது. உன் பெண் அங்கே அடிக்கடி வருவாள் போலிருக்கு...இது காதல் கல்யாணம், விசுவம்! காதல் கல்யாணம்! இதை முடிச்சு வைத்த பெருமை நமக்கு இருக்கட்டுமே...!''

''இவங்க ரெண்டு பேருக்கும் காதல்னு தெரிஞ்சிருந்தா, நாம் இரண்டு பேருமே இந்தக் கல்யாணத்துக்கு முயற்சி எடுப்போமாங்கறது சந்தேகம்தான். ஏதோ தானு அமைஞ்சது இது. கிட்டத்தில் முகூர்த்தத்தை வைத்துக்கொள்ளலாமா?'' என்று விசுவம் விஷயத்துக்கு வந்தார்.

''அப்பா! உள்ளே போய் அந்த மீன் தொட்டியைப் பார்க்கலாமா?'' என்று தயங்கிய குரலில் கேட்டான் ரட்சகன்.

''தாராளமாய் மாப்பிள்ளை. மீனு! அழைச்சுக்கிட்டுப் போய் மீன் தொட்டியைக் காட்டம்மா!'' என்றார் விசுவம்.

தொட்டிக்குள் மீன்கள் நீந்திக் கொண்டிருந்தன.

''மீனு...!''

''உம்!''

''என்ன எதிர்பாராத இன்ப அதிர்ச்சி இது? உனக்கு இதில் சம்மதம்தானே?''

''உங்களுக்கு...?''

''நான் மீன்களுக்கு மட்டும் ரட்சகன் இல்லை. மீனுவுக்கும்கூட...!''

''உங்களுக்குத்தான் மீன்கள் பிடிக்காதாமே? கடைக்கே வரமாட்டீர்களாமே?''

''மீன்களிடம் உன்னைப் பார்த்த அன்றிலிருந்தே எனக்கு ஈடுபாடு வந்து விட்டது. ஏனென்றால் அவை மீனுக... மீனுவாக உள்ள இல்லையா?''

அவள் நாணிக் கொண்டாள்.

''உண்மைதான் மீனு. உன் ஒருத்தியிடமே எத்தனையோ வகை மீன்களின் சாயல்களைக் காண்கிறேன் நான். அதனால் தான் எனக்கு மீன்களையும் பிடித்துவிட்டது.''

''மீன் தொட்டியை நன்றாக வைத்திருக்கிறேனா என்று பார்க்க வந்தீர்களோ...'' அவள் நாணத்தின் திசை மாற்றினாள்.

''நீ மீன் தொட்டியை எப்படி வைத்திருந்தால் என்ன? உன்னையே வாழ்க்கை என்ற தொட்டியில் வளர்க்கப்போகிறேனே!''

''சுதந்திரமாக வளர்ந்து கொண்டிருந்தேன். இனிமேல் தொட்டி மீன்தானா நான்?'' என்று போலிப் பெருமூச்செறிந்தாள் மீனு.

''ஆனால் பாதுகாப்பான வாழ்வு! ஞாபகமிருக்கட்டும்!'' என்றான் அவன். அவன் கண்கள் குறும்பாக அவள் முகத்தை மொய்த்தன.

இரு ஜோடி சிரிப்பலைகள் இசையாய் நழுவின.

''பெண்கள் வண்ண மீன்களைப் போல் பாதுகாப்பாக வளர்க்கப்பட வேண்டியவர்கள். கலையுணர்வுடன் இசைந்து போற்றினால் வாழ்க்கையில் இனிமை பொலியும்.''

''மீன் வளர்ப்பில் அக்கறை கொண்ட ஓர் இளைஞன் கூற்று....'' என்று அவள் குறும்புச் சிரிப்புதிர்த்தாள்.

''குறும்புக்காரி!'' என்று அவள் கன்னத்தில் இலேசாய்த் தட்டினான் அவன்.

கண்ணாடித் தொட்டியின் நீரில் நீந்திக் கொண்டிருந்த வண்ண மீன்கள் எல்லாம் அடி மட்டத்தில் படர்ந்து கிடந்த 'வாலிஸ்நேரியா' செடி மறைவில் ஒளிந்துகொண்டன!



ஸ்ரீமான் பொதுஜனம்!

தபஸ்வி

வைத்திக்கு யோசனைகள் அதிகம். சிறு வயசிலேயே ஒரு தடவை மலேரியா வந்தது. பித்த உடம்பு. 'பித்தம் அதிகமானதால் மலேரியா வந்ததா? மலேரியா அதிகமானதால் பித்தம் வந்ததா?' என்ற சந்தேகம் அவனுக்கு இன்னும் தீர்ந்தபாடில்லை.

'மரம் முதலில் தோன்றியதா? விதை முதலில் தோன்றியதா?' என்பது பெரிய பிரச்னை. பெரிய பிரச்னைகள் எதுவும் தீரக் கூடியதில்லையே! இருந்தபோதிலும் வைத்திக்கு யோசனைகள் அதிகம். தீராத பிரச்னைகளைப் பற்றித்தான் யோசனை!

''உனக்கு யோசித்து யோசித்தே பைத்தியம் பிடித்து விடப் போகிறது!'' என்றார் அவன் தகப்பனார்.

''பைத்தியம் பிடிக்கிறதென்றால் என்ன?'' என்று கேட்டான் வைத்தி.

''இதேதான்'' என்றார் அவர்.

எதற்கெடுத்தாலும் இப்படித்தான்—

'மரம் பூமிக்குள்ளே ஏன் வளராது? பூமிக்கு மேலே ஏன் வளர வேண்டும்? உள்ளே வளர்ந்தால் என்னவாம்?' என்று தனக்குத் தானே கேட்டுச் சிரித்துக் கொள்வான்.

'மோட்டார் காருக்கு உயிர் இருக்கிறதா? இல்லாவிட்டால் எப்படி ஓடும்?' என்று ஒரு கேள்வி. 'இருந்தால் நமக்குத் தெரியாதா?' என்று அதற்குப் பதில். 'பிராணிகளுக்கு உயிர் இருக்கிறது. அவை கத்துகிறதில்லையா? அதுமாதிரிதான் காரும்!' உடனே ஒரு சமாதானம்.

'மண்ணுளிப் பாம்பு கத்தாது. மெதுவாக ஊர்ந்து நெளிந்து போகும். அதுக்கு உயிர் இருக்கிறதென்று எப்படிச் சொல்ல முடியும்? அதுமாதிரிதான் கார்!'

யோசிப்பதை இதோடு முடித்து விடுவானா?

'மண்ணுளிப் பாம்பைக் கொல்ல முடியும்; ஆனால் பிழைக்க வைக்க முடியாது. காரைக் கொல்லவும் செய்யலாம்; பிழைக்கவும் வைக்கலாம்! எப்படி?' என்று ஒரு புதிய கேள்வி உதயமாகும்.

'அது ஒரு விசித்திரமான பிரகிருதி. வித விதமான ஜீவன்கள். விதவிதமான பிரகிருதிகள் — எல்லாம் ஒரே மாதிரியாக இருந்து விட்டால் அது உலகம் எப்படியாகும்? சொர்க்கம்தானே? சொர்க்கத்திலேதான் சாகவும் மாட்டார்கள்; பிழைக்கவும் மாட்டார்கள். அவர்களுக்கு அறிவு கிடையாது. அறிவு இருக்கிறவர்கள் இரண்டும் செய்வார்கள்!

ஒவ்வொரு விஷயத்திலும் இப்படித்தான்-

சில நாட்களாக வைத்திக்கு ஒரு புதிய சிந்தனை தோன்றியிருந்தது. எங்கு பார்த்தாலும் பொதுஜனங்களின் மேல் திடீரென்று ஓர் அக்கறை ஏற்பட்டிருந்தது.

''ஏன் இப்படி எழுதினீர்கள்?'' என்று கேட்டான்.

''பொதுஜனங்களுக்குப் புரிய வேண்டாமா? அதற்காகத்தான்!'' என்றார் எழுத்தாளர்.

''இந்தப் படத்தை இதைவிட இன்னும் சிறப்பாக எடுத்திருக்கலாம். இல்லையா?'' என்று கேட்டான்.

''எடுத்திருக்கலாம். ஆனால் பொதுஜனங்களுக்குப் புரியாது!'' என்றார் டைரக்டர்.

''பொதுஜனங்களுடைய நன்மைக்காக உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்'' என்றார் ஒருவர். இன்னொருவர் ''பொதுஜனங்களுடைய நன்மைக்காக உண்ணாவிரதம் இருக்கக் கூடாது!'' என்றார்.

''பொதுஜனங்களுடைய நன்மைக்காக விதவா விவாகத்தை ஆதரிக்க வேண்டும்'' என்றார் ஒருவர். இன்னொருவர், ''பொதுஜனங்களுடைய நன்மைக்காக இளம் விதவைகள் அப்படியேதான் இருக்க வேண்டும்'' என்று கூறினார்.

காரணங்களுக்கு என்ன, காசா பணமா?

எத்தனை வேணுமானாலும் சொல்லுவார்கள், கேட்கிறவர்கள் வேண்டுமே!

''காரணங்கள் காட்டுவதா பெரிது? பொதுஜனங்களுக்குப் புரிந்துகொள்கிற பக்கு



சிக்கல் தீர வழிகள் !

வாழ்க்கையில் அநாவசியமாகச் சிக்கல் உண்டாக்கிக்கொள்ளாமல் இருக்க இதோ சில சிறு வழிகள்:

(1) தவறு செய்து விட்டால் அதை ஒத்துக் கொள்வது.

(2) இருக்கிற உண்மையைப் பேசுவது.

(3) ஒரு விஷயத்தைப் பற்றி 'இல்லை', 'முடியாது' என்று சொல்லிவிட்டு அதோடு முடித்துக்கொள்வது.

(4) இந்த நிமிடம் என்ன செய்கிறீர்களோ, அதைப் பற்றியே சிந்திப்பது.

(5) வண்டியைப் பிடிப்பதற்கோ, ஏதாவது காரியமாகக் கிளம்பும்போதோ சில நிமிடங்கள் முன்னதாகவே கிளம்புவது.

ஆதாரம்: 'லைன் லைஷன்'
தகவல்: ஏ. கே. கந்தசாமி

வம்தான் வேண்டும்!'' என்றார் ஒரு சமூக நல ஊழியர்.

வைத்தி யோசித்தான். நான்தான் சொன்னேனே, அவனுக்கு யோசனைகள் அதிகம் என்றும், யோசனைகள் அதிகமானதால் பைத்தியம் பிடிக்கப் போகிறதென்று அவன் தகப்பனார் சொன்னதாகவும்!...

யார் என்ன சொல்லி என்ன பயன்? அவன் யோசிப்பதை நிறுத்தப் போகிறானா? நிறுத்தி விட்டால் அவன், வைத்தி எப்படியாவான்? பைத்தியாவான்! அதனால்தான் அவன் யோசித்தான். 'யார் இந்தப் பொதுஜனம்? ஒவ்வொருவரும் சம்பந்தப்படாதவர்கள் மாதிரியாகப் பேசுகிறார்கள்! அதே சமயத்தில் பொதுஜனங்களின் நலனுக்காக உழைப்பவர்கள்போலவும் காட்டிக் கொள்கிறார்களே!'

அன்றிரவு அந்தச் சிந்தனை ஒரு கனவாக உருவெடுத்தது. வைத்திக்கு வருகிற கனவு சாதாரணமா? அவன் விழித்திருக்கிறபோதே கனாக் காண்கிறவனாயிற்றே!

எங்கேயோ தனியாய் நடந்து போய்க் கொண்டிருக்கிறான். எங்கே? எதற்காக? அதெல்லாம் ஒன்றும் தெரியாது. அவன் போய்க் கொண்டே யிருக்கிறான். கால்கள் பூமியில்படவேயில்லை. நேர்கோடும் அல்லாத, வளை கோடும் அல்லாத ஒரு பாதை அது!

தொலைவில், வெகு தொலைவில் ஏதோ ஊர் தெரிகிறது. 'அதை அடைந்துவிட வேண்டும்' என்று ஒரு வேகத்திலே மனம் தூண்ட, உடல் முயல, விமான நிலையத்துக்குள் வந்திறங்கிய அவசர விருந்தாளியைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபன் மாதிரி ஓடுகிறான்!

அதை ஊர் என்று சொல்வதற்கில்லை. ஏதோ அவனுக்குத் தோன்றியது — நினைத்துக் கொண்டான். அவ்வளவுதான்! அதுதான் அவன் சுபாவம். நான்தான் சொன்னேனே, அவனுக்கு யோசனைகள் அதிகம் என்றும், சிறு வயசிலேயே மலேரியா வந்ததாகவும்—

சரி, அந்த ஊரைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? அந்த ஊரில் வீடுகளே கிடையாது!

''வீடுகள் இல்லாவிட்டால் ஊர் எப்படியாகும்?'' என்று கேட்பீர்கள். ஆனால் வீடுகள் இருந்து விட்டால் மட்டும் ஊராகி விடுமா? அதுமாதிரிதான்.

அந்த ஊரில் வீடுகளுக்குச் சுவர் இல்லை.

''சுவர் இல்லாவிட்டால் வீடு எப்படியாகும்?'' என்று கேட்பீர்கள். சுவர் இருந்தால் அதற்குச் சுவர் என்றுதானே பெயர்? வீடு எப்படியாகும்?...

அங்கிருந்த வீடுகளின் கூரைகள் எல்லாம் ஆகாயத்திலே மிதந்து கொண்டிருந்தன.

''வீடுகள் இல்லாதபோது கூரை எங்கிருந்து வந்தது?'' என்று கேட்பீர்கள். வீடுகள் இல்லாததனால்தான் கூரை இருக்கிறது!

காற்றிலே அந்தக் கூரைகள் எல்லாம் இங்கும் அங்குமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன.

வைத்தி ஒரு வீட்டுக்குள் நுழைந்தான். வாசல் வழியாக அல்ல. வீட்டுக்குள்ளிருந்து! அதாவது வீட்டுக்குச் சுவர் கிடையாது! ஆகையால் சுவரில்லா வீட்டால் வாசல் வழியாக எப்படிப் போக முடியும்? ஆகவே, வீட்டுக்குள்ளிருந்து, வீட்டுக்குள்ளே நுழைந்தான்! வீட்டின் நடுக் கூடத்துக்கு வந்தான்.

''வீட்டின் நடுக் கூடம் என்று எப்படித் தெரியும்?'' என்று கேட்கலாம். சுவர்கள் இல்லாவிட்டால் எல்லாமே வாசல், கூடம், தாழ்வாரம்தானே?...

வைத்தி கூடத்துக்கு வந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். எல்லாப் பக்கங்களிலும் சுவருக்குப் பதில் கண்ணாடிகள் தென்பட்டன.

''அட!''

எல்லாக் கண்ணாடிகளிலும் தன் உருவமே தெரிந்தது. அதன் மேல் ஏதோ எழுதியிருந்தது.

பின்புறம் பார்த்தான். பின்புறம் என்றால் தனக்குப் பின்புறம்! அந்த வீட்டுக்குத்தான் சுவர்கள் இல்லையே! சுவர் இல்லாத வீட்டுக்குப் பின்புறம் ஏது? ஆகவே தனக்குப் பின்புறமாகப் பார்த்தான்.

கண்ணாடியிலே எழுத்துக்கள் பளபளத்தன; திரும்பத் திரும்ப வந்து போயின. படித்தான்.—

''ஸ்ரீமான் பொதுஜனம்.''

''ஸ்ரீமான் பொதுஜனம்.''

''ஸ்ரீமான் பொதுஜனம்.''

ஒவ்வொரு கண்ணாடியிலும் ஒரே விதமான உருவம்; எழுத்துக்கள்; காட்சி! அப்படியென்றால்...?

வைத்தி யோசித்தான்:

'ஒவ்வொருவருமே ஒரு பொதுஜனம் தானா? இதுவரை என்னை நானே ஒரு பொதுஜனமாக நினைக்கவில்லையே! தன் உள்ளே இருக்கும் இறைவனை வெளியே தேடும் பக்தனைப் போல் இப்படித்தான் ஒவ்வொருவரும் தன்னை மறந்து விட்டு வெளியே தேடிக் கொண்டிருக்கிறார்களா?...'

விட்ட மேஜை

- சும்மாவிடுங்கள்!
- சிவனும் சூரியனும்
- ஆசார்ய சுவாமிகள் அபிப்பிராயம்
- மக்களுக்குக் கஷ்டம்; அரசினருக்கு நஷ்டம்

எங்கள் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பிரம்மபுரம் என்ற கிராமத்தில் ஒரு விவசாயி தமது சொந்த நிலத்திலிருந்து 9 கலம் நெல் அறுவடை செய்தார். தாலூகா ஆபீஸ் அதிகாரிகள் அந்த ஸ்தலத்திலேயே அவர் அறுவடை செய்த 9 கலம் நெல்லில் விவசாயியின் சொந்த உபயோகத்துக்காக 2 கலத்தை விட்டுவிட்டு மீதி 7 கல நெல்லைச் சர்க்கார் விலையான கலம் 18 ரூபாய் என்று நிர்ணயம் செய்து எடுத்துக் கொண்டார்கள்.

வேலூர் மார்க்கெட்டில் கலம் முப்பது ரூபாய்க்கு மேல் வாங்குவதற்கு ஆட்கள் இருந்தும், இந்த 'ஏழைகளின் சர்க்கார்' அந்த விவசாயிக்கு நல்ல விலை கிடைக்க வழியில்லாமல் செய்து விட்டது. பிறகு கள்ள மார்க்கெட் ஏன் வராது?

அந்த விவசாயி கடன்பட்டு ஆறு மாத உழைப்புக்குப் பிறகு கண்டதெல்லாம் அந்த 2 கலம் நெல்தான். வழிப்பறிக் கொள்ளை போன்ற நடவடிக்கைகளினால் உணவு உற்பத்தி எப்படி நிறைவேறும்? தன்னுடைய பிழைப்புக்கு நிலத்தையே நம்புகிறவனுக்குத் தன்னுடைய உழைப்பினால் வந்தவற்றைத் தனக்கு விருப்பமுள்ள விலைக்கு - கட்டுப்படியாகின்ற விலைக்கு விற்க அருகதையே இல்லையா?

ஐந்து ஏக்கர் அல்லது பத்து ஏக்கர் உள்ள சிறு நிலச்சுவான்தார்களையாவது இந்தச் சர்க்கார் சும்மா விட்டு வைக்கக் கூடாதா?

வேலூர்
26–11–66 வேலய்யா, விவசாயி

தீபாவளி மலரில் தீட்சிதர் அவர்களைப் பற்றிய கட்டுரையில் "ஸ்ரீ மாத்ருபூதம்" என்ற கன்னட ராகக் கீர்த்தனையில் சூரியனையும், கங்கையையும் தரிக்கிறார் சிவன் என்பது விளங்கவில்லை என்று டாக்டர் ராகவன் எழுதியிருந்தார். தீட்சிதர் பரம்பரையைச் சேர்ந்த சேர்மாதேவி சுப்பிரமணிய சாஸ்திரிகள் கொடுத்த பாடம் வருமாறு:

> ஸோம ஸகம் நத ககனகம் நள
> காமாதி விஜய சுமனீயாங்கம்
> ஸோமம் சிரோத்ருத ஸௌர கங்கம்

ஸோம ஸகம் - சந்திரனின் நண்பனை; ஸோமம் - உமையோடு கூடியவனை; சிரோத்ருத ஸௌர கங்கம் - தேவலோகத்தைச் சேர்ந்த கங்கையைத் தலையில் தரித்தவனை.

சென்னை–5
28–11–66 எஸ். இராமநாதன்

ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பில் பயிலும் சிறுவர் சிறுமியர் திருப்பாவை–திருவெம்பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்து, வரும் மார்கழி மாதம் முப்பது நாட்களும் ஊர்வலம் வந்து பாராயணம் செய்வதுடன் நற்போதைய நாட்டின் இன்னல்கள் தீர "கோளறு பதிகம்" முழுவதையும் சேர்த்துப் பாராயணம் செய்து வரவேண்டுமென ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மாயூரம் காரியதரிசி,
27–11–66 திருவெம்பாவை
திருப்பாவைக் கமிட்டி

அரசாங்க கண்ட்ரோல் என்று எந்தச் சரக்குக்கு ஏற்படுத்தினாலும் அந்தச் சரக்கு பொதுமக்களுக்கு நல்வழியில் கிடைப்பதில்லை. கூட்டுறவு பண்டகசாலைகளில் கூட, கண்ட்ரோல் பொருள்களை ஏதோ மக்களுக்குக் கொடுப்பதாகக் கண் துடைத்து விட்டு முக்கால் பங்கு சரக்கைக் கறுப்பு மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள். இதனால் நேர்மைக் குறைவாக நடக்கும் சிலரே கொள்ளை லாபம் பெறுகிறார்கள். இந்த லட்சணத்தில் ரூபாய் மதிப்புக் குறைவால் பண்டங்களின் விலைவாசி கூடக் கூடாதென்று அரசாங்கமே கூட்டுறவு முறையில் நியாய விலைக் கடை நடத்திப் பண்டங்களின் விலை கூடாமல் செய்துவிடப் போகிறேமென்கிறது. இந்த அரசாங்கம் என்ன செய்கிறேமென்று தெரியாமல் ஏதாவது அந்த நேரத்துக்குச் செய்துவிட, பின்னால் பொதுமக்கள் பெரும் கஷ்டத்தில் ஆழ்ந்து போகிறார்கள்.

கண்ட்ரோல், பெர்மிட், லைசென்ஸ் என்று இருப்பவைகளை யெல்லாம் அரசாங்கம் எடுத்துவிட்டால் எந்தப் பொருளையும் எந்த நேரத்திலும் வாங்கலாமென்ற எண்ணம் பொதுமக்களுக்குத் திடமாக ஏற்படும். வியாபாரம் பெருகும். அரசாங்கத்துக்கு வரியும் நிறையக் கிடைக்கும். கண்ட்ரோல் இருப்பின் கிடைக்காத சரக்குகளைப் பதுக்கல் செய்து வைத்துக் கொள்ளுவார்கள். கள்ள மார்க்கெட்டில் சரக்கு விற்றால் பல கோடி ரூபாய்களுக்கு அரசாங்கத்துக்கு வரி நஷ்டமாகும். லஞ்சமும், ஊழலும் கணக்கில் அடங்காத விதத்தில் பெருகும்.

சென்னை பாண்டியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.


Registered as a Newspaper in Ceylon
உயரிய பண்போடு உபயோகிக்கவும் உதவவும் உகந்தது பனாமா
பனாமா
இழுக்க இழுக்க
இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES